# 5. பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

## 5. 1. பொது நோக்கு

இலங்கையில் பெரும்பாலான பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பணிகளின் வழங்குநராக அரசு, விளங்கி வருகின்றது. இத் துறையில் அரச முதலீடு பாதுகாப்பு செலவினத்திலான வளர்ச்சி, மற்றும் வருமானம், செலவு ஆகிய இரண்டிலுமிருந்தான வரவு செலவுத் திட்டத்தின் அமைப்பு ரீதியான நலிவுகளினாலும் ஏற்பட்ட அதிகரித்த மூலவள கட்டுப்பாடுகளின் காரணமாக கடந்த பதினைந்து வருட காலமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. பொருளாதார சமூக உட்கட்டமைப்பு மீதான மொத்த அரச முதலீடு 1980இன் மொ.உ.உ.இன் 16.5 சதவீதத்திலிருந்து 1997இல் மொ.உ.உ.இன் 5.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த அரச செலவினத்தின் சதவீதமாக உட்கட்டமைப்பு முதலீடு 1980இன் 36.1 சதவீதத்திலிருந்து 1997இல் 18.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, பல பொருளாதார உட்கட்டமைப்புப் பணிகள் பொதுப் பொருட்களல்லவென்றும் இவை தனியார் துறையினால் மிக ஆற்றலுடன் வழங்கப்படக் கூடியவை என்றும் பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பொருளாதார உட்கட்டமைப்பில் தனியார்துறை பங்குபற்றலுக்கான கொள்கைச் சூழல், பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் பொதுவான முன்னேற்றத்தினூடாகவும்தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தினூடாகவும் பலப் படுத்தப்பட்டுள்ளது. இத்துடன் செயற்றிட்டம் சார்ந்த இறக்குமதிகளுக்கான இறக்குமதித் தீர்வை விலக்களிப்புக்கள், வருமானவரி விடுப்புக்கள், மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பினை கட்டுவதற்காக அரச காணிகளின் வழங்கல் போன்ற பலதரப்பட்ட இறை ஊக்குவிப்புக்கள் இத்துறைகளுக்கு தனியார் முதலீட்டை ஈர்க்கும் வகையில் கடந்த சில ஆண்டுகளாக வழங்கப் பட்டன. நிதி உதவியை வழங்கும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன் வரையறுக்கப்பட்ட தனியார்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கம்பனி 1997இல் நிறுவப்பட்டது. தனியார்துறை, நலம், கல்வி, அஞ்சல் பணிகள், பொதுசனத் தொடர்புச்சாதனங்கள், தொலைத் தொடர்பு, போக்குவரத்து என்பன போன்ற சில துறைகளில் படிப்படியாக பிரவேசித்தன. இது அதன் சொந்த முயற்சியாலும், தனியார் துறையினால் வழி நடத்தப்படும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் அரசின் தெளிவான கொள்கையின் விளைவாலும் ஏற்பட்டதாகும். இவ்வனைத்து முயற்சிகளுக்கு மத்தியிலும் இத் துறைகளில் இடம்பெற்ற முதலீட்டின் நடைமுறை மட்டம் இன்னமும் போதாமலே இருக்கின்றது. வீதிகள், புகையிரதம் உட்பட்ட போக்குவரத்து வலையமைப்பு, வலு வழங்கல், துறைமுகங்கள், சமூக உட்கட்டமைப்பு போன்ற முக்கிய துறைகளில், ஏற்கனவே அடையப் பட்டதற்கும் மேலாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தேவையாக இருக்கின்றது.

**அட்டவணை 5.1**

உட்கட்டமைப்பில் அரச முதலீடு

| ஆண்டு | பொருளாதாரப் பணிகள் | | சமூகப் பணிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | மில்லியன் | மொ.உ.உ. இன் % | மில்லியன் | மொ.உ.உ. இன் % | மில்லியன் | மொ.உ.உ. இன் % |
| 1980 | 9,712 | 14.6 | 1,249 | 1.9 | 10,961 | 16.5 |
| 1985 | 18,950 | 11.7 | 1,826 | 1.1 | 20,776 | 12.8 |
| 1990 | 18,798 | 5.8 | 3,019 | 0.9 | 21,817 | 6.7 |
| 1991 | 26,022 | 7.0 | 2,964 | 0.8 | 28,986 | 7.8 |
| 1992 | 20,444 | 4.8 | 6,137 | 1.4 | 26,581 | 6.2 |
| 1993 | 29,600 | 5.9 | 6,075 | 1.2 | 35,675 | 7.1 |
| 1994 | 29,304 | 5.1 | 7,677 | 1.3 | 36,981 | 6.4 |
| 1995 | 36,106 | 5.4 | 9,854 | 1.5 | 45,960 | 6.5 |
| 1996 | 31,409 | 4.1 | 10,322 | 1.3 | 41,731 | 5.8 |
| 1997 | 33,014 | 4.3 | 11,552 | 1.3 | 44,556 | 5.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1997இல் பொருளாதார உட்கட்டமைப்பில் தனியார் துறையின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கும் வர்த்தக ஆற்றலை முன்னேற்றுவதற்கும், ஏற்கனவே இருக்கும் உட்கட்டமைப்பு இருப்பினை விரிவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. தேசிய மின்தொகுதியின் வலு உருவாக்கும் இயலளவு, 177 மெகாவாட் வெப்பவலுவினால் அதிகரிக்கப்பட்டதுடன், இது கடந்த ஐந்து ஆண்டுகளிலான முதலாவது அதிகரிப்பாக விளங்கி நீர் மின்வலுவில் தங்கியிருப்பதனைக் குறைத்ததுடன் வலு வழங்கலின் நம்பகத்தன்மையையும் முன்னேற்றியது. தொலைத் தொடர்பு வசதிகளின் கீழான பிரதேசம் தனியார் துறையின் அதிகரித்த பங்குபற்றலுடன் பெருமளவில் அதிகரிக்கப்பட்டது. திறந்ததும் போட்டித் தன்மையுடையதுமான பாங்கில் பங்கு தாரர்களுக்கு கம்பனியின் 35 சதவீதமான வல்லமைமிக்க பங்குகள் உரிமை மாற்றல் செய்யப்பட்டமையைத் தொடர்ந்து வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம்மின் மீளமைத்தல் மேலும் முன்னேற்றமடைந்தது. கட்டு

NO. 4 D BACK



தொழிற்படுத்து சொந்தமாக்கு/ கட்டு தொழிற்படுத்து மாற்றல் செய் என்ற அடிப்படையில் தனியார்துறை பங்கு பற்றலுடன் கொழும்பு துறைமுகங்கள் தற்போதைய இயலளவை விரிவாக்குவதற்கு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போக்குவரத்துத் துறையில் காணப்படும் நீடித்த முகாமைக் குறைபாடுகளுக்கு தீர்வு காணும் வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட 11 பஸ் கம்பனிகள் இவ்வாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் கொத்தணிக் கம்பனிகளாக மீள அமைக்கப்பட்டன.

சமுதாயத்தின் உடனடித் தேவைகளுக்குப் பொருத்தமான ஓர் நீடித்திருக்கக்கூடிய கல்வி முறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, கல்வித் துறையில் முக்கிய கொள்கைச் சீர்திருத்தங்கள் அறிமுகஞ்செய்யப்பட்டன. நலத்துறைவழங்கல் அமைப்பின் திறனை முன்னேற்றும் பொருட்டும் இத்துறையில்தோற்றம் பெற்றுவரும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும் இவ்வாண்டில் சனாதிபதி செயலணிக்குழு ஒன்று கொள்கைச் சீர்திருத்தங்கள் பற்றி பரிந்துரை செய்துள்ளது.

வழங்கல் பக்கத்தின் மீதான இச் சாதகமான அபிவிருத்திகளுக்கு மத்தியிலும், பொருளாதார உட் கட்டமைப்புக்கான வளர்ந்துவரும் கேள்வி முக்கியமாக போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல், வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் என்பன தற்போதுள்ள வசதிகள் மீது மேலதிக அழுத்தத்தை ஏற்படுத்தி ஓர் பொருத்தமின்மையை உருவாக்கியது. துறைமுகப் பணிகளுக்கான அதிகரித்துவரும் கேள்வியைக் கருத்திற்கொண்டு அனைத்தையும் உள்ளடக்கிய துறைமுக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் முன்மொழியப் பட்டுள்ளதுடன், இது இயலளவை விரிவாக்குவதற்கும், துறைமுகப் பணிகள் மற்றும் துறைமுகங்களின் முகாமைத்துவம் என்பனவற்றின் செயற்திறனை முன்னேற்றுவதற்கும் உதவும். முன்மொழியப்பட்ட திட்டம் செயற்படத் தொடங்கியதும் போட்டித் தன்மையினையும் இலங்கையின் சந்தைப் பங்கையும் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் முகாமைத்துவப் பற்றாக்குறைகள் திரும்பவும் ஏற்படாது தவிர்ப்பதற்கும், வர்த்தக ரீதியாகத் தொழிற்படும் ஆற்றலை முன்னேற்றுவதற்கும் கொத்தணி பஸ் கம்பனிகளை நெருக்கமாகக் கண்காணிப்பதும், மேற்பார்வை செய்வதும் அத்தியாவசியமாகும். இதைப்போன்று கல்வி மற்றும் நலத்துறைகளைப் பொறுத்தளவில் எதிர்பார்க்கப்பட்ட நன்மையை அடைவதற்கு முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களை நேரகாலத்துடனும் உடனடியாகவும் அமுலாக்கம் செய்வது அவசியமாகும். இச் சீர்திருத்தங்களின் வெற்றிக்கான முற்தேவை மூலவளங்களின் போதியளவு ஒதுக்குகள் ஆகும். தகுதியுடையோருக்கு மட்டும் நன்மைகள் சென்றடைவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள நலன்புரிச் செயற்றிட்டங்களின்கீழ் நன்மைகளின் இலக்கிடலை மேலும் முன்னேற்றுவதற்கான ஓர் தேவையும் இருக்கின்றது. பொருளாதார உட்கட்டமைப்பிலான தனியார் முதலீடு 1997இல் அதிகரித்தது. அரசு, சமூகப் பணிகளைப் பொறுத்த மட்டில் மொ.உ.உ.இன் சதவீதமாக அதன் முதலீட்டைப் பேணிவந்தது. ஆனால் பொருளாதாரப் பணிகளில் அதன் முதலீடு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

## 5. 2 நலத்துறை

நாடு நலத்துறையின் முன்னைய சாதனைகளை எதுவித முக்கிய பின்னடைவுகளுமின்றி பேணக்கூடியதாகவும் பாதுகாக்கத் தக்கதாகவும் இருந்தது. நலத்துறைப் பணிகளுக்கான கேள்வி பெருமளவில் அதிகரிப்பதற்கு சனத்தொகையின் இயற்கை வளர்ச்சி மட்டுமன்றி, தோன்றும் மற்றும் மீண்டும் மீண்டும் தோன்றும் நோய்கள், உள்நாட்டுப் போரின் விளைவினால் ஏற்படும் பெரும் எண்ணிக்கையான மரணங்களுக்கு உடலூனமுறலும், மற்றும் சனத்தொகையின் சார்புரீதியிலான வயதை எய்துவோர் என்பவையும் காரணமாகின. மோசமான சுற்றாடல் நிலைமைகளுடன் இணைந்த நோய்களினால் தேகநலன் தரமும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. மீண்டும் மீண்டும் தோன்றும் வாந்திபேதி, தொடரும் டெங்குக் காய்ச்சல், ஜப்பானிய மூளைக் காய்ச்சல், மலேரியா போன்றவை மக்களின் தேக நல நிலைக்கான மிகவும் கடுமையான தீங்குகளாகத் தோற்றம் பெற்றுள்ளன. இதேவேளையில் குடித் தொகையின் வயது பரம்பலின் மாற்றம் மற்றும் வாழ்க்கை முறையின் முன்னேற்றம் என்பனவற்றுடன் தோற்றம் பெறும் தொற்றாத நோய்களும், அதிகரித்து வருதல் அண்மைய எதிர் காலத்தில் இடம் பெறக்கூடிய எதிர்காலத்தில் நலத்துறைச் செலவுச் சுமையை எடுத்துக்காட்டுகின்றது. மனநலக் குறைபாடுடையோர், போதைப்பொருள் மற்றும் மதுபானத்தில் தங்கியிருப்போர் தற்கொலை வீதங்கள், நஞ்சு உட்கொள்ளல் என்பனவற்றில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு தேகநலத்துறையில் தோற்றம் பெற்றுள்ள சில பாதகமான நிகழ்வுகளாவதுடன் அவை பெருமளவு கவனத்தையும்

வேண்டிநிற்கின்றன. புதிதாகத் தோற்றம் பெற்றுவரும் எச்.ஐ.வி. /எயிட்ஸ் போன்ற நோய்களும் நாட்டின் தேக நல நிலையை மேலும் அச்சுறுத்துவதாக விளங்கியதுடன், கட்டுப்படுத்தல் மற்றும் அறிவூட்டும் பிரசாரங்களுக்காக பெருமளவு மூலவளங்களை ஒதுக்குவதற்கு அரசைக் கட்டாயப்படுத்தன. இருதய நோய்கள், புற்றுநோய், ஈரல் நோய்கள் மற்றும் கிருமி நாசினிகளால் ஏற்படும் நஞ்சூட்டடல் என்பன தொடர்ந்து நாட்டில் இறப்புக்கான முக்கிய காரணங்களாக விளங்கின.

**அட்டவணை 5.2**

அரச நலத்துறைப் பணிகள்

| விடயம் | 1995 | 1996 | 1997(அ) |
|---|---|---|---|
| 1. மருத்துவ மனைகள் (மேற்கத்தைய மருத்துவத்தை கையாள்பவை எண்ணிக்கை | 535 | 540 | 548 |
| 2. படுக்கைகள் எண்ணிக்கை | 52,528 | 52,613 | 55,441 |
| 3. மத்திய மருந்தகங்கள் எண்ணிக்கை | 386 | 377 | 383 |
| 4. மருத்துவர்கள் எண்ணிக்கை | 3,986 | 4,391 | 5,316 |
| 5. துணை மருத்துவர்கள் எண்ணிக்கை | 1,324 | 1,464 | 1,405 |
| 6. ஆயுர்வேத மருத்துவர்கள் எண்ணிக்கை | 14,874 | 14,808 | 15,078 |
| 7. தாதிமார் எண்ணிக்கை | 13,310 | 13,846 | 15,976 |
| 8. உடன் கவனிப்பாளர் எண்ணிக்கை | 5,579 | 5,758 | 6,178 |
| 9. உள் நோயாளர் எண்ணிக்கை ('000) | 2,953(ஆ) | 3,339 | வி.கி. |
| 10. வெளி நோயாளர் எண்ணிக்கை ('000) | 32,084(ஆ) | 35,348 | வி.கி. |
| 11. மொத்த நலத்துறைச் செலவு (ரூ.மில்.) | 10,952 | 11,913 | 12,135 |
| நடைமுறைச் செலவு (ரூ.மில்.) | 8,818 | 9,260 | 9,581 |
| மூலதனச் செலவு (ரூ.மில்) | 2,134 | 2,538 | 2,554 |

மூலங்கள் : நலத்துறை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

(ஆ) தற்காலிகமானவை

(ஆ) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்கள் நீங்கலாக.

தோற்றம் பெற்றுவரும் சுகாதார சூழ்நிலையின் பின்னணியில் 1997இல் நலக் கொள்கையின் முக்கிய குறிக்கோளானது முன்னைய சாதனைகளை பலப்படுத்துவதும், செயல் திறன்மிக்க தேக நலக் கவனிப்பு பொறிமுறையொன்றினூடாக மக்களின் தேக நலத் தரத்தை மேலும் முன்னேற்றுவதும் ஆகக் காணப்பட்டது. மகப்பேற்று, குழந்தைநலக் கவனிப்பு, ஊட்டச் சத்துப் பற்றாக்குறைகள், வறுமை சார்ந்த நோய்கள், மலேரியா, வயது வந்தோரின் பிரச்சினைகள், மனநலம், தற்கொலை இருதய நோய்கள், உடல் ஊனங்கள், நீரிழிவு என்பன முக்கிய கவனத்தை வேண்டி நிற்கும் முன்னுரிமை விடயங்களாக இனங்காணப்பட்டுள்ளன. முக்கிய உத்திகளாக, தடுப்பு நலக் கவனிப்பை ஊக்குவித்தல், பிராந்தியங்களுக்கிடையேயான மூலவளங்களின் சமமான ஒதுக்குகள், ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட மருந்துக் கொள்கை, நல ஆராய்ச்சியை முன்னேற்றல் என்பன விளங்கின.

நலப்பணிகளுக்கான வளர்ச்சியடைந்து வரும் கேள்வியை ஈடுசெய்யும் பொருட்டு தனியார் துறையை ஊக்குவிப்பதற்கான தேவை பொருத்தமான முறையில் இனங்காணப்பட்டு பலமான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டமை, அண்மைய எதிர்காலத்தில் நலத்துறைக்கான நோக்கினை எடுத்துக்காட்டுகின்றது. தற்போதுள்ள நலக் கவனிப்பு வழங்கல் பொறிமுறை நலத்துறையில் தோற்றம் பெற்றுவரும் பிரச்சனைகளுக்கு பயன் மிக்க முறையில் தீர்வுகாணவில்லைபோல் தோன்றியமையினால் நலத்துறைக்கான ஓர் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் நோக்கிலும் இத்துறையின் முனைப்பான விடயங்களுக்கு விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்கும் 1997இல் சனாதிபதி செயலணிக் குழு நியமிக்கப்பட்டது. செயலணிக் குழுவால் இனங்காணப்பட்ட கவனத்திற்குரிய முக்கிய விடயங்களாக நலத் தேவைகளின் முன்னுரிமையை இனங் காணல், சமுதாயத்தின் நலப் பணிகளை ஈடுசெய்வதற்குத் தேவையான பணிகள், நலத் துறையின் அமைப்பும் முகாமைத்துவமும், நலத் துறைக்கான மூலவளங்களின் திரட்டல் என்பன விளங்கின. செயலணிக் குழுவினால் மேற்கொள்ளப் பட்ட விதந்துரைப்புக்களில் சிலவாக தேசிய நல ஆணைக்குழுவை ஏற்படுத்தல், தனியார்துறை நலக் கவனிப்பைக் கண்காணிப்பதற்காக ஓர் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட நிறுவனரீதியான அமைப்பு வேலையை ஏற்படுத்தல், நலத்துறை நடவடிக்கைகளின் பயன்மிக்க பன்முகப்படுத்தல், பிராந்தியத்தின் தேவைகளை அடிப்படையாகக்கொண்ட மூலவளங்களின் ஒதுக்கீடுகள், நல நிறுவனங்களின் வருமானத்தை உழைக்கும் இயல்பாற்றலினை, ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகாரங்களை அதிகரித்தல், கிராமியப் பகுதிகளில் வேலைசெய்வதற்கு ஊக்குவிப்புக்களை வழங்கல், நடைமுறையில் இருக்கும் நலத்துடன் தொடர்புடைய நிறுவனங்களை மீளவமைத்தல் என்பன விளங்கின. செயலணிக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக் களை அமுலாக்குவதற்கென சுகாதார அமைச்சில் ஏற்கெனவே பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கும் அமைச்சுக்குமிடையே நலம் சார்ந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும், கண்காணிப்பதற்கும், நலக் கொள்கைகளை வரைவதற்கும், வழிப்படுத்துவதற்கும் அமுலாக்குவதற்கும் பெருமளவு ஒழுங்குமுறைப்படுத்தும்

அதிகாரங்களுடன் தேசிய சுகாதார ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தனியார்துறையால் வழங்கப்படும் பணிகளின் தரத்தையும் தொழிற்பாடுகளையும் கண்காணிப்பதற்கு சுகாதார அமைச்சுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்கும் மருத்துவ நிறுவனங்கள் சட்டத்தை வரைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விதந்துரைக்கப்பட்ட சீர்திருத்தங்களின் செயற்றிறன் நெருங்கிய கண்காணிப்புடனான அவற்றின் தாமதமின்றிய நடைமுறைப் படுத்தலிலேயே பெருமளவில் தங்கியுள்ளது.

1997இல் நலத்துறையிலான மொத்த அரச முதலீடு ரூ.2,554 மில்லியனிற்கு சிறிதளவால் அதிகரித்தது. மொ.உ.உற்பத்திக்கு மொத்தச் செலவு விகிதம் இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 1.5 சதவீதத்திலிருந்து 1.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மூலவளங்களின் நான்கில் மூன்று பகுதிகளுக்கு மேலானவை நல உட்கட்டமைப்பை பேணுவதற்கு செலவிடப்பட்ட வேளையில் எஞ்சியவை புதிய முதலீட்டிற்குச் செலவிடப்பட்டது. அண்மைய பேரண்டப் பொருளாதார சாதனைகளை மேலும் பலப்படுத்துவதற்கான தேவை, நோய்த்தடுப்பு நலக் கவனிப்புக்காக பெருமளவு மூலவளங்களை ஒதுக்குவதற்கான தேவை ஆகிய இரண்டையும் கருத்திற்கொள்ளும்போது செயல்திறன் வாய்ந்த நல கவனிப்பு முகாமைத்துவ முறையொன்றை தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு முதன்மை முக்கியமானதாகும். இதைக் கருத்திற்கொண்டு கவனத்தில் எடுக்கவேண்டிய சில பயன்தரு நடவடிக்கைகளாக அரச நலன் நிறுவனங்களின் வருமானம் உழைக்கும் ஆற்றலினை பயன்படுத்திக் கொள்ளல் சுயாதீனமான தனியான அமைப்பொன்றாக இயக்கப்படுவதற்கான பெருமளவு அதிகாரங்களை பெரிய நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் அவற்றின் தொழிற்பாட்டுச் செயல்திறனை மேம்படுத்துதல் என்பன விளங்கின. மருந்துகளின் தரத்தினையும் நேரத்திற்கு அவற்றை கிடைக்கச் செய்வதனையும் உறுதிப்படுத்துவதும் முன்னுரிமை அடிப்படையில் அடையப்பட வேண்டிய மிக முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

பொதுவாக, 3மில்லியனிற்கு மேற்பட்ட உள் நோயாளர்களும், 36மில்லியன் வெளி நோயாளர்களும் ஆண்டுதோறும் 540 அரச வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர். 1997இல் 1,000 ஆட்களுக்கான படுக்கைகளின் சராசரி எண்ணிக்கை 2.8 இலிருந்து 3.0 இற்கு அதிகரித்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் உள்ளகப் பயிற்சி மற்றும் உள்ளகப் பயிற்சிக்குப் பின்னான 1,063 மருத்துவ ஆளனியினர் உட்பட மொத்தமாக 3,926 சுகாதார உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப் பட்டனர். இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் கிடைக்கத்தக்க வைத்தியர்கள் 10,000 குடித்தொகைக்கு 24 இலிருந்து 29இற்கு மேம்பட்ட வேளையில் மருத்துவத் தாதிகளின் எண்ணிக்கை 10,000 குடித்தொகைக்கு 76இலிருந்து 86இற்கு மேம்பட்டது. 1997இல் தொடர்ந்த முக்கிய பிரச்சினைகளாக கொழும்பு மாவட்டத்தில் செறிவடைந்து காணப்படும் நலத்துறை ஆளனியினரின் பிரதேச பரம்பலில் காணப்படும் பரந்த ஏற்றத்தாழ்வு, நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களுக்கான பெரும் தட்டுப்பாடு என்பன விளங்கின.

நல உட்கட்டமைப்பிலான அரச முதலீடு 1997இல் மேலும் பலப்படுத்தப்பட்டது. ஆண்டிற்கு 300 மருத்துவத் தாதிகளைப் பயிற்றுவிக்கும் இயலளவுகொண்ட தேசிய மருத்துவ தாதி பயிற்சிக் கல்லூரியை பன்னாட்டு அபிவிருத்திக்கான யப்பானிய முகவராண்மையின் உதவியுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இச் செயற்றிட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட செலவு ரூ.722 மில்லியனாகும். இவ்வாண்டில் 390 படுக்கை இயலளவைக்கொண்ட லேடி றிஜ்வே வைத்திய சாலைக்கான 10 மாடிக் கட்டடத்தின் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததுடன், இச் செயற்றிட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ.320 மில்லியனாக விளங்கியது. ரூ.224 மில்லியன் செலவில் கம்பகா மற்றும் நீர்கொழும்பு தள வைத்தியசாலைகளின் நோயாளி கவனிப்புப் பணிகளை முன்னேற்றுவதற்கும், ரூ.108மில்லியன் செலவில் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் பயிற்சிபெறும் மருத்துவ மாணவர்களுக்கான சிகிச்சை நிலைய வசதிகளை வழங்குவதற்கும் கொரிய அரசுடன் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கிராமியப் பகுதிகளில் நலக் கவனிப்பு முறையை தரமுயர்த்துவதற்காக ரூ.1,259 மில்லியன் செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட நலம் மற்றும் சனத்தொகை செயற்றிட்டம் செயற்பாட்டிலிருந்தது. ஐ.அ.டொலர் 22.6 மில்லியன் செலவில் பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையினால் நிதியிடப்பட்ட ஓர் நலப் பணிச் செயற்றிட்டமும் 1997இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் நோக்கம் மலேரியா, பாலியல் தொடர்பான நோய்கள், குறைந்த வருமானமுடையோரிடையேயான ஊட்டச் சத்துக் குறைவு என்பனவற்றை இல்லாமற் செய்தல், நலக் கல்வியை முன்னேற்றல் என்பன ஆகும். குடித்தொகைத் தொழிற்பாடுகளுக்கான ஐக்கிய

நாடுகள் நிதியத்தினால் நிதியடப்பட்ட குடித்தொகை மற்றும் மகப்பேற்று நல நிகழ்ச்சித் திட்டமும் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

முதன்மை நலக் கவனிப்பில் முன்னர் எய்தப் பட்ட நன்மைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், தோற்றம் பெற்றுவரும் நோய் பரவலின் பாதகமான விளைவை ஓர் மட்டத்தில் கட்டுப்படுத்துவதற்கும் வலுவான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுக்குரிய ஆண்டில் தடுப்பூசி மூலம் தடுக்கப்படக்கூடிய ஆறு நோய்களுக்கெதிராக குழந்தைகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் திட்டம் அதியுயர் மட்டத்தில் பேணப்பட்டது (கிட்டத்தட்ட 90 சதவீதம்). இளம்பிள்ளை வாதத்திற்கெதிரான தேசிய நோய்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டிலும் நடாத்தப்பட்டதோடு ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் முழுக் குடித்தொகையையும் உள்ளடக்க இயலுமாக இருந்தது. இவ்வாண்டில், றுபெல்லா தடுப்பூசிச் செயற்றிட்டம் ஐந்து மாகாணங்களை உள்ளடக்கும் விதத்தில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. 1993இன் பின் முதல் முறையாக பரவிய வாந்திபேதி 1997 இறுதியளவில் 12 மரணங்களை ஏற்படுத்தியதுடன் 412 பேர் இதனால் பாதிப்படைந்திருந்தனர். செயற்றிறன் வாய்ந்த அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுடனான ஓர் திறமையான நோய் கண்காணிப்பு முறையும் இணைந்து பெருமளவிற்கு நோய் பரவலை கட்டுப்படுத்தியது. தேசிய டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்ச்சிதிட்டம் மற்றும் பலதரப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மத்தியிலும் 1989இலிருந்து டெங்கின் மீள் பரவல் தொடர்ந்து முக்கிய பிரச்சனையாக விளங்கியதுடன் 1996 இலும் 1997 இலும் 1000 இற்கு மேற்பட்ட நோயாளிகள் பற்றி அறிவிக்கப்பட்டது. ஜப்பானிய மூளைக் காய்ச்சலின் நிகழ்வு 1997இல் குறைந்திருக்கையில் தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டம் கொழும்பு, களுத்துறை, கம்பகா மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. மலேரியா தற்பொழுதும் இலங்கையில் ஓர் முக்கிய நலப் பிரச்சினையாக தொடர்ந்துவருகின்றது. பலதரப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மத்தியிலும் மலேரியாவின் தாக்கம் முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட போக்குகளை உறுதிப்படுத்தும் விதத்தில் 19 சதவீதத்தினால் 218,544 நோயாளிகளுக்கு அதிகரித்தது. பின்னடைவுக்கான முக்கிய காரணங்களாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுகையில் எதிர்நோக்கிய தொழிற்பாட்டுப் பிரச்சினைகளும் அயல் பகுதிகளில் அகதிகள் பெருமளவு வந்து சேர்ந்தமையும் விளங்கின. சயரோகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒரு புதிய முறையான நேரடியாக அவதானித்து குணப்படுத்தும் முறை, காற்றால் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. எஸ்.ரீ.டி./எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய உத்திகளாக தடைகாப்பு, அறிவுரை கூறுதல், கண்காணித்தல், எஸ்.ரீ.டி. பற்றிய தகவல்களைப் பரப்புதல் என்பன விளங்கின.


## தனியார்துறை நலக் கவனிப்பு

நலப் பணிகளுக்கான முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அதிகரித்துவரும் கேள்வியைக் கருத்திற்கொண்டும், அரசதுறை நலப்பணிகளிலான இயலளவு வரையறைகள் மற்றும் திறனற்ற தன்மையாலும் அரச நலப் பணிகளுக்கான போட்டித் தன்மையுடையதும் பூர்த்தி செய்யக் கூடியதுமான ஓர் திறன்மிக்க தனியார் நலக்கவனிப்பு முறை எப்போதோ செய்திருக்கப்பட வேண்டிய தொன்றாகும். அதன் வெற்றியின் முக்கிய மூலங்க ளாக ஓர் நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வரைச் சட்டம், நியாயமானவொரு ஊக்குவிப்பு அமைப்பு, செலவிடக்கூடிய விலை, மற்றும் நலமுறையின் எதிர்கால போக்கு பற்றிய தெளிவான மற்றும் நம்பகமான தூரநோக்கு என்பன விளங்கின. இத்தேவைகளை இனங்கண்டபின், இவ்வாண்டில் சமுதாயத்திற்குப் பெருமளவில் ஏற்புடையதாக தனியார்துறை நலக் கவனிப்பை மேம்படுத்துவதற் கும், முதலீட்டாளர்களைக் கவர்வதற்கும் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மருத்துவச் செலவி னையும் முதலீட்டின் செலவினையும் குறைக்கும் நோக்கில், மொத்த விற்பனவு வரிகள் மற்றும் பொருட்கள் பணிகள் வரிகள் என்பவற்றிலிருந்து நலப்பணிகளுக்கு விலக்களித்தல், இறக்குமதித் தீர்வையிலிருந்து மருத்துவ உபகரணங்களுக்கு விலக்களித்தல், மற்றும் மருந்துகள் மீதான இறக்குமதித்தீர்வையைக் குறைத்தல் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. தனியார் வைத்தியசாலை களுக்காக காணியை இலவசமாக வழங்கல் மற்றும் அவற்றுக்கு நியாயமான காலப்பகுதிக்கு வரிகளிலிருந்து விலக்களித்தல் என்ற முன்மொழிவு இத்துறைக்கு மேலும் முதலீட்டாளர்களை ஈர்க்கும்.

சுகாதார அமைச்சு மூலங்களின்படி, தற்பொழுது தனியார்துறை மொத்த நோயாளர்களில் கிட்டத்தட்ட 50 சதவீதத்திற்கு பணியளிக்கையில் அரச நலத்துறையுடன் ஒப்பிடுகையில்

உள்நோயாளிக் கவனிப்பு வழங்கல் தற்பொழுதும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இப்பணிகள் ஒரு பொது வைத்தியர் வலையமைப்பினூடாகவும், தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ நிலையங்களை உள்ளடக்கிய நிறுவன ரீதியான வலையமைப்பூடாகவும் வழங்கப்படுகின்றன. அமைச்சின்படி தற்போது 2,467 படுக்கை இயலளவைக் கொண்ட 118 தனியார் வைத்தியசாலைகள் இருக்கின்றன. இவ் வைத்தியசாலைகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை மேல் மாகாணத்தில் இருக்கின்றன. 23 தனியார் வைத்தியசாலைகளை உள்ளடக்கி மத்திய வங்கியினால் (1996) மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி, இவ் வைத்தியசாலைகளினால் வழங்கப்படும் உள்ளக நோயாளிகள் மற்றும் வெளியக நோயாளிகளுக்கான பணிகள் அரச வைத்திய சாலைகளினால் கையாளப்படும் உள்ளக மற்றும் வெளியக நோயாளிகளின் மொத்த எண்ணிக்கையில் 5 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டன. இத் தனியார் வைத்தியசாலைகளின் படுக்கை இயலளவு 1,300ஆக விளங்கியதுடன், அனைத்து முக்கிய வைத்தியசாலைகளின் படுக்கையில் தங்குதல் விகிதம் கிட்டத்தட்ட 80 சதவீதமாக விளங்கியது. இவ் வைத்தியசாலைகளில் 103 நிரந்தர வைத்தியர்கள், 222 பகுதிநேர வைத்தியர்கள், 1,479 மருத்துவத் தாதிகள், மற்றும் 280 தொழில்நுட்பவியலாளர்கள் பணிபுரிந்தனர். எனினும் இவ் வைத்தியசாலைகளில் வெளி மாவட்டங்களிலுள்ள 2 வைத்தியசாலைகள் உள்ளிட்ட 9 வைத்தியசாலைகள் மொத்த படுக்கை இயலளவின் 75 சதவீதத்திற்கு மேலாகவும், மருத்துவத் தாதிகளின் எண்ணிக்கையில் 84 சதவீதத்திற்கும், தொழில்நுட்ப அலுவலர்களின் எண்ணிக்கையில் 95 சதவீதத்திற்கும் வகைகூறின. விரிவான மருத்துவ ஆலோசனைப் பணிகளும் அநேகமாக எல்லா வைத்தியசாலைகளிலும் வழங்கப்பட்டன. எனினும், நலப் பணிகளில் தனியார் துறையின் பங்குபற்றல்

வரைபடம் 5.1
நலன்புரி, கல்வி மீதான செலவு




உட்கட்டமைப்புக்கான, உயர்செலவு நலக் கவனிப்புக்கான உயர்செலவு, தராதரம்பெற்ற தேர்ச்சிமிக்க அலுவலர்களின் பற்றாக்குறை மற்றும் பணியின் குறைந்த தரம் போன்ற சில முக்கிய பிரச்சினைகளினால் இடருக்குள்ளாகின.

## 5.3 கல்வி

தனியார் துறையின் தேவைகளுக்கு செயற்றிறன்மிக்க முறையில் பதிலிறுக்கக் கூடிய நீடித்து நிலைக்கும் கல்வி முறையொன்றை நிறுவுவதற்கான தேவை கடந்த இரு தசாப்தங்களாக வலுவாக உணரப்பட்டுள்ளது. இப்பிரச்சனைகளில் சிலவற்றுக்கு தீர்வு காணும்வகையில் குறிப்பிட்ட சில விடயங்கள் தொடர்பாக மட்டும் கடந்த 20 ஆண்டுகளாக காலத்துக்குக் காலம் பலதரப்பட்ட கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இருந்தபோதிலும், அவை இத்துறையின் அனைத்து பிரச்சனைகளுக்கும் ஒரே நேரத்தில் தீர்வு காணும் விதத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய தொகுதியொன்றாக வரையப்படாமையினால் பெரும்பாலான அக் கொள்கை வழிமுறைகள் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தாததோடு அவற்றில்சில குறுங்காலத்திற்கே நிலைத்திருந்தன. இத் தேவையினை இனங்கண்டபின், குறைந்த தரம், குறைந்த வினைத்திறன், தொழிலாளர் சந்தை தேவைகளுக்கு ஓரளவே தொடர்புடைய கல்விப் பேறுகள் போன்ற இத்துறையிலுள்ள மிக முக்கிமான விடயங்களை எடுத்தியம்பும் நோக்கில் தூர நோக்குக்கொண்ட கல்விச் சீர்திருத்தங்களின் தொகுதியொன்று 1997இல் அறிமுகப்படுத்தப் பட்டது. புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கருவாக ஆற்றலை இனங்கண்டு, மாணவர்களின் செயல்முறை சார்ந்த திறனை அபிவிருத்தி செய்வது, அத்தேர்ச்சிகளை மேம்படுத்துவது என்பன விளங்கின. முக்கிய உத்திகளாக, தர ரீதியான உள்ளீடுகளின் மற்றும் அளவு ரீதியான உள்ளீடுகளின் மேம்பாடும் விரிவாக்கமும், ஆசிரியர்களுக்கான கல்வியைப் பலப்படுத்தல், மற்றும், பாடசாலைகள் முறையின் அமைப்பினையும் முகாமைத்துவத்தினையும் மேம்பாடடையச் செய்தல் என்பன விளங்கின. பொதுக் கல்விசார்ந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், வழிநடத்துவதற்கும் கல்வி அமைச்சில் விசேட பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல்வித் திறனுக்கும் தொழிலாளர் சந்தைத் தேவைகளுக்குமிடையேயான ஒவ்வாத் தன்மையை குறைப்பதற்கு, முறையான கண்காணிப்பு நடைமுறைகளுடன் முன்மொழியப்பட்டுள்ள சீர்திருத்தங்களை தாமதமின்றி உரிய நேரத்தில்

அமுலாக்கம் செய்தலும் அத்தியாவசியமாகின்றது. முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களின் செயல்திறன் வாய்ந்த அமுலாக்கத்திற்கு தரம் வாய்ந்ததும் பெரியளவானதுமான உள்ளீடுகளை வழங்குவதற்கான போதியளவு மூலவளங்களின் போதிய ஒதுக்கு முற்தேவையாக விளங்குகின்றது. இருந்தபோதிலும், இச் சீர்திருத்தங்களின் நிலைத்து நீடித்திருக்கும் தன்மை ஆசிரியர்களின் தரத்திலும் ஈடுபாட்டிலும், முழுமையாகத் தங்கியிருப்பதனால் ஆசிரியர்களுக்கானகல்வி மற்றும் பணிக்கமர்த்தும் விடயங்கள் என்பனவற்றிற்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காணைப்படல் வேண்டும்.

## பொதுக் கல்வியின் சீர்திருத்தங்கள்

இச் சீர்திருத்தங்கள் ஐந்து முக்கிய விடயங்களான கல்வி வாய்ப்புக்களின் விரிவாக்கம், கல்வித் தரத்தின் மேம்பாடு, ஆசிரியர்களின் தரத்தினை மேம்படுத்தி இத் தொழிலை ஒழுங்குபடுத்தல் தொழில்நுட்ப மற்றும் செய் முறை தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்தல், மற்றும் கல்வி அமைப்பினையும் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்துதல் என்பன விளங்கின.

பாடசாலையில் பங்குகொள்ளும் வீதங்களை மேம்படுத்துவதனை நோக்காகக்கொண்டு புதிய சீர்திருத்தங்களின் கீழ் ஓர் புத்தாய்வுத் திட்டம் கட்டாயக் கல்வி விதிமுறைகளை வலிந்து செயற்படுத்துவதற்கான முன் மொழிவொன்று இயற்றப்பட்டுள்ளது. பங்குகொள்ளாதோரின் அளவை இனங்கண்டு திருத்த நடவடிக்கை எடுப்பதற்காக 1997 இல் தீவு முழுவதுமான ஓர் அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

கல்வியில் தர ரீதியான மேம்பாடு நான்கு வித்தியாசமான மட்டங்களில் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அவை, சிறுவர் பாடசாலை, முதனிலை மட்டம், கனிஸ்ட இரண்டாந்தரம், சிரேட்ட இரண்டாந்தரங்கள் என்பனவாகும். இவை பாடத்திட்டத் திருத்தங்கள், படிப்பிக்கும் பொருட்களை வழங்கல், கட்டடங்கள் மற்றும் தொழிற்பாட்டு அறைகள் போன்ற அளவு சார்ந்த உள்ளீடுகளை வழங்கல், ஆசிரியர் பயிற்சி, வகுப்பறை மதிப்பீடு போன்றவற்றினூடாக எய்தப்படவிருக்கின்றது. இம்மாற்றங்களுக்கு மேலதிக மூலவளங்களை தேவைப்படும் முதல் நிலை கல்வி விடயத்தில் செயல்முறைகளினூடாக கல்வியை வழங்கும், பிள்ளையை மையமாகக்கொண்டதும், தகுதியை அடிப்படையாகக்கொண்டதுமான கல்விமுறையொன்று நிறுவப்படும். 1998 இலிருந்து புதிய பாடத்திட்டம் கம்பகா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 1இற்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கனிட்ட இரண்டாங்கட்டக் கல்வியானது பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானம் மற்றும் செயற்றிட்டங்களினூடாகப் பயில்தல்வகையில் வரைவு செய்யப்பட்டுள்ளது. செயல்முறை சார்ந்த வேலை படிப்பிக்கும்முறையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சிரேட்ட இரண்டாங் கட்டக் கல்வி, கிடைக்கக்கூடிய வசதிகளை விரிவாக்குவதனையும் பல்வேறுதுறைகளில் மாணவர்களின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. க.பொ.த. சாதாரண தர நிகழ்ச்சித் திட்டத்தின் கால அளவு இரண்டு ஆண்டுகளாக இருக்கும். பல முக்கிய மற்றும் விருப்புப் பாடங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்போதைய பாடத்திட்டம் நெகிழ்ச்சியுடையதாக இருக்கும். க.பொ.த. உயர்தர மட்டப் பாடத்திட்டம் பலதரப்பட்ட மேலதிக கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்களை வழங்கும் வகையில் மீளமைக்கப்படும். ஓர் புதிய தொழில் நுட்பத் தொகுதி அறிமுகப்படுத்தப்படவிருப்பதுடன், வேறுபட்ட தொகுதிகளிலிருந்து பாடங்களின் தேர்வு பெருமளவிற்கு எளிதாக்கப்படவுள்ளது.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2000 ஆண்டளவில் சேவையிலுள்ள சகல ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கவும் சேவைக்கு புதிதாக திரட்டப்படும் அனைவருக்கும் முன்னான பயிற்சியை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர் பயிற்சி நடவடிக்கைகளைத் திட்டமிடல், கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் என்பனவற்றை நோக்காகக் கொண்டு ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகார சபையொன்று நிறுவப்படவுள்ளது. ஆங்கிலம் மற்றும் தொழில் நுட்பம் என்பனவற்றிலான கற்பிக்கும் ஆற்றல்களைப் பலப்படுத்துவதற்கு சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றன. எதிர்காலக் கேள்வியை எதிர்கொள்வதற்காக கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கை 14இற்கு அதிகரிக்கப் படவிருக்கின்றது. பாடசாலைகளின் பரம்பல்முறை, சிரேட்ட இரண்டாந்தரப் பாடசாலைகளின் அபிவிருத்தி, பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி, பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட முகாமைத்துவம், ஆசிரியர்களின் செயலாற்றம் பற்றிய மதிப்பீடு, வெளிமேற்பார்வை என்பவற்றின் அடிப்படையில் பாடசாலைகளை மீளவமைத்து ஓர் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட பாடசாலை அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

## பொதுக் கல்வி

கல்விக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீதான அரச செலவினம் மூலவளக் கட்டுப்பாடுகள் காரணமாக சார்பு ரீதியில் குறைவாகக் காணப் பட்டது. இது 1996இன் மொ.உ.உ.இன் 0.6 சதவீதத் திலிருந்து 1997இல் 0.5 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. உண்மை நியதிகளில், அரச செலவினம் 1996இன் ரூ.20,402 மில்லியனிலிருந்து 1997இல் ரூ.22,349 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடசா லைப் புத்தகங்களின் விநியோகம், இலவசச் சீருடை கள், சலுகை அடிப்படையிலான பயண வசதிகளின் வழங்கல் என்பனவற்றுக்காக ரூ.1,798 மில்லியன் கொண்ட தொகை செலவிடப்பட்டது. கல்விக்கான செலவின் உள்ளடக்கத்தினைப் பொறுத்தவரை உயர்வடைந்த சம்பளச்செலவானது (கல்விமீதான மொத்த நடைமுறைச் செலவினத்தின் 75 சதவீதமும், மொத்த சம்பளச் செலவில் 25 சதவீதமும்) கற்பித்தற் பொருட்கள், கருவிகள், வழங்கல்கள் மற்றும் ஏனைய பேணல் என்பவற்றுக்கான அத்தியாவசிய உள்ளீடுகளுக்கான மூலவளங்களின் ஒதுக்கீட்டைப் பெருமளவிற்கு மட்டுப்படுத்தியது. கல்விச் சீர்திருத்தங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, தரமான உள்ளீடுகளை வழங்குவதற்கான அதிகரித்த கடப் பாட்டுடனான கல்வித்துறைக்கான அதிகரித்த மூலவளங்களின் ஒதுக்கீடு அத்தியாவசியமான தாகும்.

1997இல் 4,123,656 மாணவர் தொகையுடனும் 181,050 ஆசிரியர் தொகையுடனும் 10,216 அரச பாடசாலைகள் இருந்தன. பாடசாலை வலையமை ப்பின் கிடைக்கத்தக்க தன்மை மற்றும் படிப்பிக்கும் ஆசிரியர்களின் பலம் என்பன ஒவ்வொரு6 சதுர கிலோமீற்றருக்கும் ஒரு பாடசாலை மற்றும் ஓர் ஆசிரியருக்கு 23 மாணவர்கள் என்பனவற்றுடன் விரிவானதாகவும் கோட்பாட்டுடன் சாதகமானதாக வும் விளங்கியது. இருந்தபோதிலும், விரிவான உட்கட்டமைப்பு வலையமைப்பிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்து சாதகமான விளைவு கள் பல காரணிகளால் பெருமளவிற்கு குறைக்கப் பட்டன. முதலாவதாக, கல்வி வசதிகளைக் கிடைக்கச் செய்வதில் பரந்த பிராந்திய ரீதியான சமமின்மை இருந்தமையும், சில முக்கிய பாடவிடய ங்களில் மூலவளங்களின் பற்றாக்குறையும் இரண்டாவதாக, கடந்த காலத்தின் நலிவான ஆட்சேர்ப்புக் கொள்கையிலிருந்து விளைவிக்கப்பட்ட ஆசிரியர்படையின் தாழ்வடைந்த உற்பத்தித் திறனானது அனுபவம்பெற்ற மற்றும் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை சேவையிலிருந்து விடுபட அனுமதித்த 1996 மற்றும் 1997இல் பின்பற்றப்பட்ட பெருமளவு தாராளமான ஓய்வூதிய கொள்கைகளி னால் மேலும் மோசமடைந்தது. இறுதியாக, தரமான உள்ளீடுகளுக்கான குறைந்த முதலீடு பாடத்திட்டத் தேவைகளுக்குப் பொருத்தமான போதியளவான கருவிகள் மற்றும் பொருட்களின் கடும் பற்றாக் குறைக்கு இட்டுச்சென்று கல்வியின் தரத்தை தாமதமடையச் செய்தது. பன்னாட்டு அபிவிருத்திக் கான முகவராண்மையினால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது பொதுக் கல்வி செயற்றிட்டத்துக்கான செயற்றிட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின்படி தேவையான தரமான உள்ளீடுகள் 20 சதவீத பாடசாலைகளுக்குக் குறைவானவற்றிற்கு மட்டுமே கிடைத்திருப்பதாகவும், கிட்டத்தட்ட 80 சதவீதமான பாடசாலைகள் எதுவித நிரந்தர நூலகங்களையும் கொண்டிருக்கவில்லையெனவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

கல்வித் துறையின் இந் நெருக்கடியான பிரச்சனைகள் சிலவற்றிற்கு தீர்வுகாணும் வகையில், பல வெளிநாட்டு நிதியிடலுடனான செயற்றிட்டங்கள் இவ்வாண்டிலும் தொடர்ந்தன. கல்வித் துறையின் தரத்தின் மேம்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் நோக்கில், பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையினால் நிதியிடப்பட்ட பொதுக் கல்விச் செயற்றிட்டம் II, ஐ.அ.டொலர் 83.4 மில்லியன் செலவில் 1997இல் ஆரம்பிக்கப்பட்டது. கவனத்திற்குரிய முக்கிய விடயங்களாக, பாடவிதான அபிவிருத்தி, பாடப் புத்தகங்கள் மற்றும் கல்வி வெளியீடுகள், பாடசாலைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், தரமான உள்ளீடுகள், நூலக அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவம் போன்றவை காணப்பட்டன. 1 ஏடி (க.பொ.த. உயர்தரம் - விஞ்ஞானம் வர்த்தகம் மற்றும் கலைப் பிரிவுகளைக் கொண்ட) மற்றும் 1சீ (க.பொ.த. உயர்தரம் விஞ்ஞானப் பிரிவு அற்ற) வகைகளின் பாடசாலைகளில் இரண்டாந்தரக் கல்வியை முன்னேற்றும் பொருட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்பட்ட இரண்டாந்தர கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம் ஐ.அ.டொலர் 40 மில்லியன் செலவில் இவ்வாண்டில் தொடர்ந்து செயற்பட்டது. பின்தங்கிய கிராமிய முதலாந்தரப் பாடசாலைகளில் கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்ட சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையால் நிதியிடப்பட்ட முதற்றர பாடசாலை அபிவிருத்திச் செயற்றிட்டமும் தொடர்ந்து செயற்பாட்டிலிருந்தது. சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையினால் நிதியிடப்பட்ட பெருந்தோட்டத் துறைக் கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டமான மற்றுமொரு

செயற்றிட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. 1996 ஒகத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆசிரியர்கள் கல்வி மற்றும் ஆசிரியர்களைப் பதவிக்கமர்த்தல் செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கங்களாக கற்பித்தல் தரத்திலான முன்னேற்றம், பாடசாலைகளிலான கற்கும் சுற்றாடல், கல்வி என்பனவற்றின் மேம்பாடு சம அளவில் ஆசிரியர்களைச் சேவைக்கமர்த்தல், ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் ஒழுங்குமுறைப் படுத்தல் என்பன விளங்கின. இச் செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ஐ.அ.டொலர் 79.3 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிடையே பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் ஆசிரியர் கல்விக்கான தேசிய மேலாண்மைச் சபையை அமைப்பதற்கான முன்மொழிவொன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப் பட்டது. பிரித்தானிய பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையினால் நிதியிடப்பட்ட முதனிலை ஆங்கில மொழிச் செயற்றிட்டம் மற்றும் முதனிலை கணித செயற்றிட்டம் என்பன இவ்வாண்டில் செயலாற்றிக் கொண்டிருந்தது. பிரதேச செயலக மட்டத்தில்

**அட்டவணை 5.3**

பொது மற்றும் பல்கலைக் கழகக் கல்வி

| விடயம் | 1995 | 1996 | 1997(அ) |
|---|---|---|---|
| **பொதுக் கல்வி** | | | |
| 1. மொத்தப் பள்ளிக்கூடங்கள் (எண்ணிக்கை) | 10,832 | 10,936 | 10,863 |
| 1.1 அரச பள்ளிக்கூடங்கள் | 10,239 | 10,312 | 10,216 |
| தேசிய பள்ளிக்கூடங்கள் | 198 | 238 | 252 |
| 1.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் | 593 | 624 | 647 |
| தனியார் | 79 | 79 | 83 |
| பிரிவேனா | 514 | 545 | 564 |
| 2. மாணவர்கள் (எண்ணிக்கை) | 4,351,022 | 4,265,076 | வி. கி. |
| 2.1 அரச பள்ளிக்கூடங்கள் | 4,216,571 | 4,132,749 | 4,123,656 |
| 2.2 ஏனைய பள்ளிக்கூடங்கள் | 134,451 | 132,327 | வி. கி. |
| தனியார் | 87,674 | 86,707 | வி. கி. |
| பிரிவேனா | 46,777 | 45,620 | 43,228 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் | 342,386 | 322,686 | 353,639 |
| 4. ஆசிரியர்கள் எண்ணிக்கை | 195,210 | 193,720 | வி. கி. |
| 4.1 அரச ஆசிரியர்கள் | 187,574 | 185,842 | 181,050 |
| 4.2 ஏனையவர்கள் | 7,636 | 7,878 | வி. கி. |
| 5. மாணவர்கள்/ஆசிரியர்கள் விகிதம் | 22 | 22 | 23 |
| 6. கல்விக்கான மொத்தச் செலவினம் (ரூபா மில்லியன்) (ஆ) | 18,908 | 20,402 | 22,329 |
| 6.1 நடைமுறை | 15,784 | 16,018 | 17,737 |
| 6.2 மூலதன | 3,124 | 4,384 | 4,592 |
| **பல்கலைக்கழகக் கல்வி** | | | |
| 1. பல்கலைக் கழகங்கள் (எண்ணிக்கை) | 10 | 12 | 12 |
| 2. மாணவர்கள் (எண்ணிக்கை) (இ) | 32,004 | 32,800 | 34,139 |
| 3. விரிவுரையாளர்கள் (எண்ணிக்கை) (ஈ) | 2,524 | 2,808 | 2,927 |
| 4. பட்டதாரிகள் (எண்ணிக்கை) | 5,342 | 5,216 | வி. கி. |
| 4.1. கலைகளும் கீழைத்தேச கற்கைகளும் | 1,999 | 1,999 | வி. கி. |
| 4.2. வர்த்தக, முகாமைத்துவக் கற்கைகள் | 982 | 999 | வி. கி. |
| 4.3. சட்டம் | 140 | 160 | வி. கி. |
| 4.4. விஞ்ஞானம் | 958 | 844 | வி. கி. |
| 4.5. பொறியியல் | 458 | 403 | வி. கி. |
| 4.6. மருத்துவம் | 442 | 505 | வி. கி. |
| 4.7. பற் சிகிச்சை | 66 | 58 | வி. கி. |
| 4.8. விவசாயம் | 210 | 165 | வி. கி. |
| 4.9. மிருக வைத்தியம் | 31 | 27 | வி. கி. |
| 4.10. கட்டடக் கலை | 23 | 23 | வி. கி. |
| 4.11. கணிய அளவீடு | -- | 33 | வி. கி. |
| 5. அடிப்படைப் பட்டப் படிப்புகளுக்கு புதிதாக அனுமதிக்கப்பட்டோர் (எண்ணிக்கை) | 8,015 | 8,663 | 9,787 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) உயர் கல்விக்கான அரச செலவினத்தையும் உள்ளடக்கும்.
(இ) இலங்கை திறந்த பல்கலைக் கழகம் தவிர்ந்த.
(ஈ) பொது உயர் கல்வி மீதான அரச செலவினம்.
(உ) ஆண்டின் தொடக்கத்தில்.

மூலங்கள் : கல்வி, உயர் கல்வி அமைச்சு
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு
இலங்கை மத்திய வங்கி.

பாடசாலைகளினை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டம் மொத்தமாக 317 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருப்பதனை இனங்கண்டுள்ளதுடன், 1997இல் ரூ.210மில்லியனும் செலவிடப்பட்டது.

கல்வி முகாமைத்துவ தகவல் முறையின்கீழ் மாகாண அமைச்சுக்களில் கணனி முறைகளை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1997இன் முதல் எட்டு மாதங்களில் 1,893 ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டதுடன் கல்விக் கல்லூரிகளில் 2,059ஆட்களுக்கு சேவைக்கு முன்னான பயிற்சியும் வழங்கப்பட்டது. முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பாக விளங்கும் தேசிய கல்வி நிலையம் பாடவிதான அபிவிருத்தி, கல்வி அலுவலர்களை பயிற்றுவித்தல், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நுட்பங்களின் அபிவிருத்தி போன்றவற்றிலான அதன் ஆரம்ப வேலையை தொடங்கியது. சர்வதேச பாடசாலை முறையினை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான கொள்கை வழிமுறைகளை உருவாக்கி சர்வதேச பாடசாலை முறையினை ஒழுங்கமுறைப்படுத்துவதற்கான விதந்துரைப்புக்களைச் செய்யும் நோக்கில் சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக அளவீடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. விதந்துரைப்புச் செய்யப்பட்ட சில விடயங்களாக கல்வி அமைச்சுடனான சர்வதேசப் பாடசாலைகளின் பதிவினை சட்ட ரீதியாகக் கட்டாயப்படுத்துதல் பாடதிட்டம் மற்றும் கற்கை வழிமுறைகளை பல்வகைப்படுத்தல் பொருத்தமான தேசிய நோக்கினைக் கொண்ட முக்கிய பாடத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல், வழிமுறைகளின் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்கள் என்பன தொடர்பான வழிகாட்டுதல்களை விருத்தி செய்து கட்டளைச் சட்டங்களை விதித்தல் செயற்றிறன் வாய்ந்த மேற்பார்வை முறையினை விருத்தி செய்தல் என்பன விளங்கின.

## உயர் கல்வி

1997 இறுதியில் நாட்டின் 12 தேசிய பல்கலைக்கழகங்களும் 6 பட்டப்பின் பயிற்சி நிறுவனங்களும் இருந்தன. தேர்ச்சித் திறன்களை அடிப்படையாகக் கொண்ட கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான தேவையை அடையாளம் கண்டபின், கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, பேராதனை ஆகிய பல்கலைக் கழகங்களில் கணனிக் கல்வி கிளைகள் திறக்கப்பட்டன. சட்டக் கொள்கைகள், மருந்துப் பொருளியல், அளவீடு, தாதி பயிற்சி என்பனவற்றிலான புதிய பாட நெறிகள் கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர, சப்பிரகமுவ ஆகிய பல்கலைக் கழங்களிலும் திறந்த பல்கலைக்கழகத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. தனியார்துறை மற்றும் அரச துறைகளில் கிடைக்கத்தக்க வேலைவாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் நோக்கில் நான்கு பல்கலைக் கழகங்களிலும் வாழ்க்கைத் தொழிலுக்கான பிரிவுகள் திறக்கப்பட்டன. ரூபா 1925 மில்லியன் செலவில் யப்பானிய உதவியுடன் கல்விக்கான கருவிகளை வழங்குவதற்கும் பேராதனை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் புதிய கட்டடத்தொகுதிகளை அமைப்பதற்கான செயற்றிட்டங்கள் நடைமுறையிலிருந்தன. இத்துடன் ஆய்விற்குரிய ஆண்டில் பேராதனை, ருகுனு பல் கலைக் கழகங்களில் மருத்துவ மற்றம் பொறியியல் பீடங்களுக்கான கட்டடத் தொகுதிகளை விரிவுபடுத்தி தரமுயர்த்துவதற்கான பல பாரிய கட்டுமானச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1997 இல் பல்கலைக் கழகங்களுக்கான புதிய அனுமதிகள் 1124 இனால் 9787இற்கு (பல்கலைக்கழகக் கல்விக்கு தகைமை பெற்ற மாணவர்களில் கிட்டத்தட்ட 14 சதவீதம்) விரிவடைந்து மொத்த அனுமதியை 34139இற்கு அதிகரித்தது. இது குடித்தொகையின் வயதுத் தொகுதி சார்ந்தோரின் கிட்டத்தட்ட 1 சதவீதத்திற்குச் சமமாகும். இவ்விரிவாக்கம் முக்கியமாக கலை,வர்த்தகம், முகாமைக்கல்வி ஆகிய துறைகளில் காணப்பட்டது. பல்கலைக் கழகங்களின் மொத்த கல்விசார் அலுவல்களின் எண்ணிக்கையும் 4 சதவீதத்தினால் அதிகரித்தது. சாதனைகளை (கல்விசாரா நடவடிக்கைகள்) அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட அனுமதிகளின் பங்கு அதிகரித்தது. 1997 இறுதியில் மகாபொல புலமைப் பரிசில் மற்றும் உதவிச் சம்பளம் பெறுபவர்களின் எண்ணிக்கை 2000 இனால் 36000இற்கு அதிகரித்தது.

திறந்த பல்கலைக் கழகம் பொறியியல் தொழில்நுட்பம் மானிடவியலும் சமூக விஞ்ஞானமும் ஆகிய மூன்று பீடங்களின் கீழ் பாடநெறி பட்டத்திற்குப் பின்னான டிப்பிளோமா ஆகியனவற்றில் 34 நெறிகளை நடாத்தியது. 1997 இறுதியளவில் நாட்டில் 15397 மொத்த மாணவர்களைக் கொண்ட 32 தொழில்நுட்ப நிறுவனங்கள் இருந்தன. ஆய்விற்குரிய ஆண்டில் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான புதிய அனுமதிகள் 2000தால் 12238 இற்கு விரிவடைந்தன.

முறைசார்ந்த கல்விச் சாதனைகளுக்கும்,தொழிற் சந்தைக்குத் தேவையான தேர்ச்சி, திறன்களுக்கு

மிடையேயான ஒவ்வாமையைக் கருத்திற்கொண்டு பல்கலைக்கழகக் கல்வி சீர்திருத் தங்கள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். நாட்டில் கிட்டத்தட்ட 11,740 வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின் றனர். பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவதி லிருந்து தடுக்கப்பட்ட மாணவர்கள் பெருமளவில் இருப்பதால் தொழில் சார்ந்த கல்வி உள்ளிட்ட தனியார்துறை உயர்கல்வி நிறுவனங்களின் விரிவாக் கத்திற்கான ஊக்குவிப்பு கல்விச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும்.

## 5. 4 தொடர்பூட்டல் பணிகள்

### அஞ்சல் பணிகள்

அஞ்சல் பணிகளின் தற்போதைய அமைப்பு ரீதியானதும், நிறுவன ரீதியானதுமான நெகிழ்ந்து கொடுக்காத தன்மையை சீர்படுத்துமுகமாக உலக வங்கி மற்றும் சருவதேச அஞ்சல் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் விரிவான மீளமைப்புத் திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இம் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டமானது தற்போதுள்ள

**அட்டவணை 5.4**

அஞ்சல் தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் வளர்ச்சி

| விடயம் | 1995 | 1996 | 1997(அ) | சதவீத மாற்றம் 1996 | சதவீத மாற்றம் 1997(அ) |
|---|---|---|---|---|---|
| 1. அஞ்சல் பணிகள் | | | | | |
| அஞ்சல் வழங்கும் பரப்புக்கள் (எண்ணிக்கை) | 6,729 | 6,729 | 6,729 | 0.0 | 0.0 |
| அஞ்சல் நிலையங்கள் (எண்ணிக்கை) | 4,148 | 4,239 | 4,302 | 2.2 | 1.5 |
| அரசு | 3,966 | 4,025 | 4,028 | 1.5 | 0.1 |
| தனியார் | 182 | 214 | 274 | 17.6 | 28.0 |
| அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட பரப்பு (சதுர கி. மீற்றர்) | 16.8 | 15.5 | 15.3 | -7.7 | 28.0 |
| அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை | 4,393 | 4,339 | 4,326 | -7.7 | -1.3 |
| குடியிருப்பாளர் ஒருவருக்குக் கிடைக்கும் கடிதங்கள் | 29 | 27 | 24 | -6.9 | -11.1 |
| 2. தொலைத்தொடர்பூட்டல் பணிகள் | | | | | |
| 2.1 வரையறுக்கப்பட்ட சிறிலங்கா ரெலிகொம் | | | | | |
| தொலைபேசி இணைப்புக்கள் (எண்ணிக்கை) | 204,350 | 254,500 | 315,241 | 24.5 | 23.9 |
| வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள் (எண்ணிக்கை) | 24,556 | 50,170 | 72,453 | 104.3 | 44.4 |
| இணைப்புக்களைஎதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகள் (எண்ணிக்கை) | 237,800 | 270,800 | 284,876 | 13.9 | 5.2 |
| தொலைபேசிக்கான விரைவுக் கேள்வி (எண்ணிக்கை) | 442,150 | 525,300 | 600,117 | 18.8 | 14.2 |
| தொலைபேசிக்கான பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) | 1.12 | 1.39 | 1.69 | 24.1 | 21.6 |
| 2.2 ஏனைய தனியார் துறை | | | | | |
| செலூலர் தொலைபேசிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 4 | 4 | 4 | 0.0 | 0.0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 51,316 | 71,028 | 114,888 | 38.4 | 61.8 |
| ஒன்று சேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ. மில்.) | 4,139 | 5,307 | 6,870 | 28.2 | 29.5 |
| பொதுப் பே போன் தொலைபேசிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 4 | 4 | 4 | 0.0 | 0.0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 1,597 | 2,152 | 2,571 | 34.8 | 19.5 |
| ஒன்று சேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ. மில்.) | 424 | 610 | 718 | 43.9 | 17.7 |
| வானொலி பேஜிங் பணிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 5 | 5 | 5 | 0.0 | 0.0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 9,565 | 10,721 | 10,829 | 12.1 | 1.0 |
| ஒன்று சேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ. மில்.) | 210 | 2 21 | 222 | 5.2 | 0.5 |
| தரவு தொடர்பூட்டல் பணிகள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | 6 | 7 | 9 | 16.7 | 28.6 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | 273 | 355 | 9,045 | 30.0 | 2,448 |
| ஒன்றுசேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ. மில்.) | 434 | 574 | 665 | 32.3 | 15.9 |
| கம்பி இல்லா உள்ளூர் தொலைபேசி இணைப்புக்கள் | | | | | |
| தொழிற்பாட்டாளர்கள் (எண்ணிக்கை) | - | 2 | 2 | - | 0.0 |
| உதவுதொகை செலுத்துவோர் (எண்ணிக்கை) | - | 527 | 26,381 | - | 4,906 |
| ஒன்றுசேர்ந்த மொத்த முதலீடுகள் (ரூ. மில்.) | - | 1,743 | 6,796 | - | 289.9 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: அஞ்சல் திணைக்களம்
வரையறுக்கப்பட்டட சிறிலங்கா ரெலிகொம்
இலங்கை தொலைத்தொடர்புகள்
ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

அஞ்சல் திணைக்களத்தை அஞ்சல் கூட்டுத் தாபனமாக மாற்றியமைப்பதனை குறிக்கோளாகக் கொண்டது. முன்மொழியப்பட்டுள்ள அஞ்சல் கூட்டுத் தாபனமானது அஞ்சல் சேவையின் முகாமைத்துவத் திறனை அதிகரிப்பதற்கான பெருமளவு சுயாதீனமாகத் தொழிற்படும் அதிகாரத்தை வழங்க இருக்கிறது. முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்பானது வர்த்தக ரீதியாகத் தொழிற்படும் ஆற்றலை மேம்படுத்தல் அஞ்சல் சேவையில் புதிய முறைகளை அபிவிருத்தி செய்தல் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் அஞ்சல் பணியின் சில விடயங்களில் தனியார் துறையின் பங்குபற்றலை ஊக்குவித்தல் என்பவற்றையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசுக்கு வழங்கப்பட்டுள்ள இலவச அஞ்சல் பணியை ஒழுங்குபடுத்தி அஞ்சல் திணைக்களத்தின் தொழிற்பாட்டுச் செலவினங்களை குறைக்கும் பொருட்டு இலவச அஞ்சல் பணிகளின் அளவுகளின் மீது உச்ச வரையறைகள் விதிக்கப்பட்டன. தொழிற்பாட்டு செலவினங்களைக் குறைக்கும் முகமாக வார இறுதியிலும் பொதுவிடுமுறை நாட்களிலும் வழங்கப்பட்ட அஞ்சல் பணிகளும் இடைநிறுத்தப்பட்டன.

1997இல் 2 புதிய முதன்மை அஞ்சல் அலுவலகங்கள் 16 முகவர் அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் 45 கிராமிய முகவர் அஞ்சல் அலுவலகங்கள் என்பனவற்றை திறந்ததன் மூலம் அஞ்சல் வலையமைப்பு 4,302இற்கு அதிகரித்தது. இதன் விளைவாக அஞ்சல் அலுவலகமொன்றினால் பணி வழங்கப்பட்ட அளவு 1997 இறுதியில் 15.3 சதுர கிலோ மீட்டர்களுக்கு மேலும் குறைவடைந்தது. 1997 இறுதியில் விரைவு அஞ்சல்பணி 57 நாடுகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டதுடன் இவ்வாண்டுக் காலத்தில் எடுத்துச் செல்லும் விரைவு அஞ்சல் பணியும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் 50 முதன்மை அஞ்சல் அலுவலகங்களுக்கு பக்ஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் பக்ஸ் வசதி கொண்ட அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கை 177க்கு அதிகரித்தது. மத்திய அஞ்சல் பரிவர்த்தனையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டு வந்த கொழும்பு நகருக்கான அஞ்சல் ஒப்படைப்புப் பணி பன்முகப்படுத்தப்பட்டது. சுயாதீனமான கடிதம் தரப்படுததல் மற்றும் ஒப்படைப்புப் பணிகள் பொரளை, கொட்டாஞ்சேனை, கொம்பனித்தெரு, மற்றும் வெள்ளவத்தை அஞ்சல் பிரிவுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. அஞ்சல் பணிகளுக்கான அதிகரித்த கேள்வியை ஈடு செய்யும் முகமாக 1996இல் ஒரு முன்னோடிச் செயற்றிட்டமாக சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் கிராமிய முகவர் அஞ்சல் அலுவலக முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 1996 ஆம் ஆண்டுக் காலத்தில் அத்தகைய 17 அஞ்சல் அலுவலகங்கள் நிறுவப்பட்டன. 1997ஆம்ஆண்டு இறுதியில் நாட்டில் 62 கிராமிய முகவர் அஞ்சல் அலுவலகங்கள் இருந்தன. 1997ஆம்ஆண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் அஞ்சல் பணிகள் கணிசமானளவு விரிவாக்கப்பட்டன. தற்போது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 30 முதன்மை அஞ்சல் அலுவலகங்களும்மற்றும் 124 உப அஞ்சல் அலுவலகங்களும் செயற்படுகின்றன.

அஞ்சல் திணைக்களத்தினால் கையாளப்பட்ட உள்நாட்டு அஞ்சல் பொருட்களின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டினைவிட 1997 இல் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் 1997 இல் அரசுக்கு வழங்கப்படும் கட்டணம் செலுத்தப்படாத அஞ்சல் பணிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டின் காரணமாக ஏற்பட்டது. அரசுக்கு வழங்கப்படும் இலவச அஞ்சல் பணிகள் 1996இல் 128 மில்லியன்களிலிருந்து 1997இல் 56 மில்லியனுக்கு கணிசமாக குறைவடைந்தன. இதன் பயனாக ஒரு நபருக்கான கடிதங்களின் சராசரி எண்ணிக்கை இரு ஆண்டுக்காலத்திற்கிடையில் 27 இலிருந்து 24 இற்கு குறைவடைந்துள்ளது. எனினும் கட்டணம் செலுத்தப்பட்ட அஞ்சல் பணிகள் இவ்வாண்டுக் காலப்பகுதியில் 14 சதவீதத்தினால் 390 மில்லியன் பொருட்களுக்கு உயர்வடைந்தன. தொடர்பூட்டலின் துரித மாற்றவழிகளான தொலைபேசி, சருவதேச நேரடித் தொலைபேசி வசதிகள் ரேலிபக்ஸ், ஈ மெயில் மற்றும் தனியார் விரைவு அஞ்சல் பணிகள் என்பன துரிதமாக விரிவடைந்துவரும் சூழ்நிலையில் நவீன சமூகத்தின் தேவைகளை ஈடு செய்யக் கூடிய வகையில் அது மீளமைக்கப்படாவிட்டால் அஞ்சல் பணிகளின் பொதுவான விரிவாக்கம் அண்மைய எதிர் காலத்தில் இருள் சூழ்ந்ததாக அமையும் போல் தோன்றுகிறது. வெளிநாட்டு அஞ்சல் கையாளலும் இவ்வாண்டுக் காலத்தில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

1997ஆம் ஆண்டில் அஞ்சல் கட்டணங்களின் மேல்நோக்கிய திருத்தத்தின் காரணமாக அஞ்சல் திணைக்களத்தின் மொத்த வருமானம் 6 சதவீதத்தினால் ரூ.1,409 மில்லியன்களுக்கு அதிகரித்தது. அதேவேளை அஞ்சல் திணைக்களத்தின் மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் ரூ.1,664 மில்லியன்களாக விளங்கி 3சிற்றளவு வீழ்ச்சியைக் காட்டியது. இதன்படி அஞ்சல் திணைக்களத்தின் தொழிற்பாட்டு நட்டம் 1996இன் ரூ.344 மில்லியனிலிருந்து 1997இல் ரூ.255 மில்லியன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

## தொலைத் தொடர்பூட்டல்

தனியார் துறையினரின் அதிகரித்த பங்குபற்றல் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் உயர்ந்தமட்டத்திலான செயலாற்றம் என்பன காரணமாக 1997ஆம் ஆண்டுக் காலத்தில் தொலைத் தொடர்பூட்டல் துறை தொடர்ந்து விரிவடைந்தது. 1997இல் இலங்கை ரெலிகொம் நிறுவனம் ஜப்பானைச்சேர்ந்த நிப்போன் ரெலிகிராப்அன்ட் ரெலிபோன் கோப்பரேசனுடன் (என்.ரி.ரி.) இணைப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றமையானது நவீன தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தல், முகாமைத்துவ திறமையை உட்புகுத்தல் மற்றும் இலங்கை ரெலிகொம் ஊழியர்களது தொழில்நுட்ப, மற்றும் தொழில் சார் திறமைகளை அதிகரித்தல் என்பனவற்றின் மூலம் பெருமளவு முதலீட்டைக் கவர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 1997 காலப்பகுதியில் வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 72,453ஆக விளங்கி ஓராண்டுக் காலத்தில் வழங்கப்பட்ட ஆகக்கூடிய இணைப்புக்களாகக் காணப்பட்டது.. இது தற்போதுள்ள மொத்த தரைத் தொலைபேசி இணைப்புக்களில் ஏறத்தாழ 23 சதவீதத்தினைப் பிரதிபலிக்கின்றது. தற்போதுள்ள தொலைபேசி இணைப்புக்களில் ஏறத்தாழ 62 சதவீதமானவை கடந்த ஐந்தாண்டுக் காலப்பகுதியில் வழங்கப்பட்டதாகும். இதேவேளை புதிய தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதன் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக காத்திருப்போர் பட்டியலின் வளர்ச்சி மெதுவடைந்திருக்கிறது. தொலைத் தொடர்பூட்டல் சந்தையில் தனியார்துறையின் பங்கும் விரைந்து வளர்ந்துகொண்டிருப்பதுடன் எதிர்காலத்தில் விரைந்த வளர்ச்சிகான நம்பிக்கையூட்டும் துறையாக தொலைத் தொடர்பூட்டல்துறை விளங்கும் போல் தோன்றுகிறது.

இலங்கை தொலைத் தொடர்பு நிறுவனத்தின் 35 சதவீதப் பங்குகளை நிப்போன் ரெலிகிலாப் அன்ட் ரெலிபோன் நிறுவனத்திற்கு விற்பனை செய்ததன் மூலம் மீளமைக்கப்பட்ட கம்பனியின் முகாமையும் ஒப்பந்தத்திற்கு அமைய அந் நிறுவனத்தினால் கையேற்கப்பட்டது. இத்துறையில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு அபிவிருத்திச் செயற்றிட்டங்களைத் துரிதப்படுத்தும் முகமாக நிப்போன் ரெலிகிராப் அன்ட் ரெலிபோன் முகாமைக் குழு 1997 மற்றும் 1998ஆம் ஆண்டுகளுக்கான ஒரு நடுத்தரகால திட்டத்தினையும் ஒரு வர்த்தகத் திட்டத்தினையும் வடிவமைத்துள்ளதுடன் இவை 2000ஆம் ஆண்டு வரை நீடிக்கும். இதன் விளைவாக இலங்கையில் ரெலிகொம் நிறுவனத்தின் சகலவற்றையும் உள்ளடக்கிய செயலாக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஒன்று 1997 காலப்பகுதியில் காணப்பட்டது. பரிவர்த்தனைகளின் ஆழி இயலளவு 41 சதவீதத்தினால் 436,550 இற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தவேளையில் சர்வதேச சுற்றுக்களின் மொத்த எண்ணிக்கை 16 சதவீதத்தினால் 1717இற்கு அதிகரித்தது. இதே வேளை நேரடியாகத் தொழிற்படும் தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 24 சதவீதத்தினால் 315,241இற்கு அதிகரித்தது. மொத்த நேரடி இணைப்புக்களில் 186,674 அல்லது 59 சதவீதமானவை கொழும்பு நகரப்பகுதியில் காணப்பட்டன. எவ்வாறாயினும் கொழும்பு நகரத்திற்கு வெளியில் உள்ள தொலைத் தொடர்பூட்டல் வசதிகளின் விகிதம் 1996 இன் 35 சதவீதத்திலிருந்து 1997 இல் 41சதவீதத்திற்கு அதிகரித்தது. அதே வேளை காத்திருப்போர் பட்டியலில் உள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 5 சதவிதத்தினால் 284,876 இற்கு அதிகரித்து வெளிப்படுத்தப்பட்ட கேள்வியின் 47 சதவீதத்தை பிரதிபலிக்கிறது. தொலைபேசிச் செறிவு (தொலைபேசி ஒன்றிற்கான ஆட்களின் எண்ணிக்கை) 1996 இல் 72 இலிருந்து 1997 இல் 58 இற்கு மேம்பாடடைந்தது. 2001 ஆம்ஆண்டளவில் தொலைபேசிச் செறிவு ஒரு தொலைபேசிக்கு 20 ஆட்கள் என்ற அடிப்படையில் நிலைப்படுத்துவதே இடைக்கால இலக்காகும்.

பன்னாட்டு உதவி முகவர்களான உலக வங்கி/பன்னாட்டு அபிவிருத்திக்கான முகவராண்மை ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியம் என்பனவற்றின் உதவி பெறப்பட்டு நிதியிடப்பட்ட இரண்டாவது தொலைத் தொடர்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் பெரும்பாலான பாரிய செயற்றிட்டங்கள் 1997ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டன. இச்செயற்றிட்டங்கள் பரிமாற்றல் முறையின் இயலளைவயும் முன்னேற்றத்தையும் அதிகரிக்கச் செய்வதில் தொடர்ச்சியான பங்களிப்பைச் செய்து பணியின் தரத்திலும் நம்பகத்தன்மையிலும் கணிசமான மேம்பாட்டினை விளைவித்தது. இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் துணைக்கம்பனியான இலங்கை ரெலிகொம் சேர்விஸ்சஸ் லிமிட்டட்டினால் நடைமுறைப்படுத்தப்படும் 150,000 இணைப்பு தொலைத் தொடர்பூட்டல் அபிவிருத்திச் செயற்றிட்டம் 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் செயற்பட்டுக் கொண்டிருந்தது. இச்செயற்றிட்டம் கிட்டத்தட்ட 200,000 பரிவர்த்தைன இணைப்புக்களை


புதிதாக ஏற்படுத்தி பெரும்பாலும் அனைத்து மாகாணங்களிலும் உள்ள நகர மற்றும் கிராமிய பகுதியை உள்ளடக்கும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. 1996 இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 1997 ஆம் ஆண்டு இறுதியளவில் கிட்டத்தட்ட 120,000 பரிவர்த்தனை இணைப்புக்களை வலையமைப்பில் புதிதாகச் சேர்த்திருக்கிறது. மொத்தத்தில் 67,344 பரிவர்த்தனை இணைப்புக்களின் இயலளவைக்கொண்ட 69 பரிவர்த்தனை நிலையங்களா 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் அதனது பாவனையாளர்களுக்கு பலதரப்பட்ட பெறுமதி கூட்டிய சேவைகளும் வழங்கப்பட்டன. இவைகளில் தொலைபேசி இலக்கங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் வசதிகள், சுருக்க எண் அழைப்பு முறைகள், ஆளில்லா நேர அழைப்புக்கள், அழைப்புக்காக காத்திருத்தல், அழைப்பை மற்றுமொரு தொலைபேசிக்கு மாற்றல் செய்தல், தொலைபேசியூடான மாநாடு மற்றும் முன் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட அழைப்பு வசதிகள் போன்றவை உள்ளடக்கப்படுகின்றன. மேலும் 1997ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கை ரெலிகொம் நிறுவனமானது 1,111 பொது பேபோன் தொலைபேசி அலகுகளை நிறுவியதுடன் 3,683 பாவனையாளர்களுக்கு இன்ரநெற் மற்றும் ஈமெயில் பணிகளையும் மேலும் 12 வாடிக்கையாளர்களுக்கு தரவுத்தொடர்பு பணிகளையும் வழங்கியுள்ளது. பெசிமைல், இன்ரநெற் மற்றும் ஈமெயில் தொடர்பூட்டல் பணிகளுக்கான கேள்வியை அதிகரித்ததன் காரணமாக, ரெலெக்ஸ் தொடர்பூட்டல் பணிக்கான கேள்வி வீழ்ச்சியடைந்துள்ளது.

3ஆவது தொலைத்தொடர்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் புதிய முகாமையினால் மீளாய்வு செய்யப்பட்டிருப்பதுடன் 1998-2000 ஆண்டுக் காலப்

வரைபடம் 5.2

தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளின் ரொலைபேசி அடர்த்தி 1997




பகுதியில் 400,000 தொலைபேசி இணைப்புக்களை வழங்குமுகமாக ஒரு நடுத்தர கால அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. முன்மொழியப்பட்டுள்ள முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய இலங்கை ரெலிகொம் நிறுவனமானது 1998இல் ரூ.23,000 மில்லியன்களையும், 1999இல் ரூ.16,800 மில்லியன்களையும், 2000ஆம் ஆண்டில் ரூ.6,600 மில்லியன்களையும் முதலீடு செய்ய உத்தேசித்துள்ளது. இதற்கான நிதிகள் வெளிநாட்டு மூலங்கள், வழங்குனர் கடன்கள் மற்றும் இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் சொந்த நிதிகள் என்பனவற்றின் மூலம் பெறப்படும். இவ்வபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும், இலங்கை ரெலிகொம் நிறுவனம் கேள்வியின் மீது உடனடியாக தொலைபேசி வசதிகளை வழங்கக்கூடியதாக இருக்கும். இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் செயற்றிட்டங்களைப் பொறுத்தவரை பொருள் கொள்வனவிற்கான செயன்முறைகளிலுள்ள நடைமுறைத் தாமதங்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற ஏனைய பொது வசதிகள் முகவராண்மைகளுடனான ஒத்துழைப்புக் குறைவாக இருத்தல், கட்டிட நோக்கங்களுக்காக நிலத்தை சுவீகரிப்பது தொடர்பான பிரச்சினைகள் என்பன திட்டங்களின் நிறைவேற்றத்தை விரைவுபடுத்துவதற்குத் தொடர்ந்தும் தடையாகவுள்ளன.

தனியார் துறையினரால் வழங்கப்பட்ட தொலைத் தொடர்பூட்டல் வசதிகள் 1997 காலப் பகுதியில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. 1996இல் உரிமம் வழங்கப்பட்ட 22 தனியார்துறைக் கம்பனிகளுக்கு எதிராக, 1997இல் பலதரப்பட்ட தொலைத் தொடர்பூட்டல் பணிகளை வழங்கும் 24 தனியார் துறைக் கம்பனிகள் காணப்பட்டன. 1997இறுதியில் 4 செலூலர் தொலைபேசி தொழிற்பாட்டாளர்கள் 114,888 பாவனையாளர்களுக்கு பணிகளை வழங்கினர். 1997 காலப்பகுதியில் செலூலர் பயன்படுத்துவோர் வலைப் பின்னமைப்பு 62 சதவீதத்தால் அதிகரித்தது. பேபோன் கூட்டுகளின் மொத்த எண்ணிக்கை 2,571இற்கு 19 சதவீதத்தினால் அதிகரித்தது. 1997இல் வானொலி பேஜிங் பணிகள் 5 கம்பனிகளினால் 10,829 பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டன. ஈமெயில் மற்றும் இன்ரநெற் சேவைகளை உள்ளடக்கிய தரவு தொடர்பூட்டல் பணிகளுக்கான பாவனையாளர்களின் வலைப் பின்னலமைப்பு 1997இல் 9,045இற்கு இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்தது. 1996இல் இரண்டு கம்பனிகளால் கம்பியல்லா உள்நாட்டு இணைப்புத் தொலைபேசி பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1997 இறுதியில் இப்பணி 26,381 பாவனையாளர் களைக்


கொண்டிருந்தது. கம்பியல்லா உள்நாட்டு இணைப்பு தொலைபேசி வசதிகளையும் கவனத்தில் எடுக்கும்போது தொலைபேசி செறிவு நிலைமை 54 ஆட்களுக்கு ஒன்று எனும் அடிப்படையில் உள்ளது. 1997 இறுதிக்குள் தொலைத் தொடர்பூட்டல் துறையில் ஒன்றுதிரட்டப்பட்ட மொத்தத் தனியார் முதலீடுகள் ரூ.15,270 மில்லியன்களாக விளங்கிய துடன் இதில் ரூ.6,844 மில்லியன் 1997ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இத்துறையி லுள்ள வேலைவாய்ப்புக்களின் மொத்த எண்ணிக்கை இலங்கை ரெலிகொம் நிறுவனம் நீங்கலாக 1,627ஆக இருந்தது.

## 5. 5 வலு

1996இல் நிலவிய கடுமையான நெருக்கடி யிலிருந்து 1997இல் வலுத்துறையானது உறுதியான ஒரு மீட்சியைக் காட்டியது. மேலும் தேசிய மின் தொகுதியில் வெப்ப மின்வலு உற்பத்தியின் இயலளவை 177 மெகாவாட் அளவினால் விரிவாக் கியதன்மூலம் வலு விநியோகத்தின் தொடர்ச்சியும், நம்பிக்கைத் தன்மையும் உறுதிசெய்யப்பட்டது. இதன்பயனாக கடந்த வருடத்தின் 5 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் மொத்த வலு உற்பத்தி அதிகரித்துச் செல்லும் தேவையை திருப்திசெய்யக்கூடியவகையில் 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டினைப் போன்று 1997இன் முதல் அரைப்பகுதியில் நிலவிய வரண்ட காலநிலை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த நீர் மின்வலு உற்பத்தி ஆண்டின் இறுதிப்பகுதியில் கணிசமானளவு மேம்பாடு ஒன்றினைக் காட்டியது. நீர் மின்வலுவில் காணப்பட்ட பற்றாக்குறை வெப்பமின் வலு மூலம் ஈடுசெய்யப்பட்டிருந்தது. தேசிய மின்தொகுதியில் வெப்ப மின்வலு உற்பத்தியை விரிவாக்கம் செய்வதன்மூலம் தனியார்துறையிடமிருந்து டீசல் பொறிகளின் வாடகைக்கமர்த்தல், வலுக் கொள்வன வுகள் மற்றும் தனியார் துறையின் சுயவலு உருவாக்கத்துக்கான ஊக்குவிப்புப் போன்ற 1996இலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட குறுங்கால நெருக்கடி நிவாரண வழிமுறைகளுடன் இணைந்து தேசிய வலு உருவாக்கத்தில் வெப்பமின்வலு உருவாக்க இயலளவில் மேற்கொள்ளப்பட்ட விரிவாக் கமானது தொடர்ச்சியான வலு வழங்கலை உறுதிப்படுத்தியது. இருந்தபோதிலும் வெப்ப வலு உற்பத்தியின் கணிசமானளவு செலவு அதிகரிப்பை ஈடுசெய்யுமுகமாக (எரிபொருள் செலவு, வலு கொள்வனவு செலவுகளும் மின் உருவாக்கியினை வாடகைக்கமர்த்தும் செலவுகளும்) 1997 செத்தெம்பரிலிருந்து மின் தீர்வை 11 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டது. அதேநேரம் வெப்ப மின்வலு உற்பத்தி அதிகரிப்பு மற்றும் அதிகரித்த போக்கு வரத்து கைத்தொழில் செயற்பாடுகள் என்பன காரணமாக குறிப்பாக இரு பிரதான பெற்றோலிய உற்பத்திகளான தன்னியக்க டீசல் மற்றும் உலை எண்ணெய் என்பவற்றிற்கான கேள்வி தொடர்ந்து விரிவடைந்தது. வலு இறக்குமதி மூலங்கள் மீதான அதிகரித்த தங்கியிருத்தலானது நாட்டின் எண்ணெய்க்கான செலவினைக் கணிசமா னளவு அதிகரிக்கச் செய்தது. எவ்வாறாயினும் மசகு எண்ணெயின் சருவதேச விலையிலேற்பட்ட சிறிதள வான வீழ்ச்சியும், மசகு எண்ணெய் இறக்குமதி தொடர்பாக வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல் களும் 1997இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலையை மேம்படுத்தியது.

ஆய்வுக்குரிய ஆண்டுக் காலத்தில் வலு முறையின் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கு கணிசமானளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1997இல் தேசிய மின்தொகுதி இயலளவை விரிவுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட அவசர நடவடிக்கைகள் மற்றும் , 1998இல் எதிர்பார்க்கப் படும் 51 மெகாவாட் விரிவாக்கம் என்பன குறுகிய காலத்தில் வலுப்பற்றாக்குறை நிலையைத் தவிர்ப்ப தற்கு உதவும். எனினும் 1996இல் நிலவியதைப் போன்ற நெருக்கடி நிலைமை மீண்டும் ஏற்படு மானால் இலங்கை போன்ற வளர்ச்சியடைந்துவரும் ஒரு நாட்டில் மோசமான பாதக விளைவை ஏற்படுத்தும். ஆகையால் பொருளாதாரத் தேவை களை அடிப்படையாகக் கொண்டு நன்றாக வடிவமைக்கப்பட்ட திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதன்மூலம் நீர் மின் வலுவில் தங்கியிரு த்தலை மேலும் குறைவடையச் செய்வதோடு, நடுத்தர, நீண்ட காலங்களில் தொடர்ச்சியான வலு வழங்கலினை மேம்படுத்தவும் வேண்டும். செயல்முறை மற்றும் நடைமுறைப்படுத்தல் தாமதங்கள் குறைக்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும். செலவுகூடிய குறுங்கால வழி முறைகளான வலு உற்பத்தியை வாடகைக் கமர்த்தல்போன்ற நடவடிக்கைகளினால் மின் கட்டணங்கள் உயர்ந்து நுகர்வோர்மீது பாரிய பளுவைச் சுமத்துவதை தவிர்ப்பது அவசியமான தொன்றாகும். அதேவேளை ஏற்றுமதித் துறையின் போட்டித்தன்மையை மேம்படுத்தும் முகமாக குறுக்கு உதவுதொகைகளை அகற்றுவதன்மூலம் மின் விலையிடல் முறை மேலும் ஒழுங்கு முறைப்படுத்தப்படல் வேண்டும். மின் கடத்தல்

**வரைபடம் 5.3**
**முக்கிய வலு மூலங்கள்**




மற்றும் விநியோக விலை அமைப்பின் மேம்பாட்டிற்கான பாரிய முதலீடுகளின் மத்தியிலும், உயர்ந்தமட்டத்திலான விநியோக இழப்புக்களில் முனைப்பான கவனம் செலுத்தப்படல் வேண்டும். வெப்பமின் வலுவில் தங்கியிருத்தல் படிப்படியாக அதிகரிப்பதனால் வலுவிலைகளிலும் சென்மதி நிலுவையிலும் அது கொண்டிருக்கக்கூடிய தாக்கத்தினை கருத்திற்கெடுக்கும்போது சாத்தியமான ஒரு பயனுறுதியுள்ள வலுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் அமுலாக்கம் அத்தியாவசியமாகின்றது.

## மின்வலு

தனியார்துறையிடமிருந்து வாடகைக்கமர்த்தப் பட்ட மின் உருவாக்க நிறுவப்பட்ட இயலளவு உள்ளிட்ட மின்வலுவின் 1996இன் 1,453 மெகாவாட்டுக் களிலிருந்து 1997இல் 11 சதவீதத்தினால் 1,607 மெகாவாட்டுக்களுக்கு விரிவடைந்தது. இது நீர் மின்வலுவில் தங்கியிருத்தல் 1996இன் 81 சதவீதத்திலிருந்து 1997இல் 71 சதவீதத்துக்கு குறைவடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுவதுடன் வலு முறைமை வானிலைக் காரணிகளால் பாதிக்கப் படுவதை குறைவடையச் செய்துள்ளது. இங்கு பெரிதும் வரவேற்கத்தக்க அபிவிருத்தியும், நீண்டகாலம் உணரப்பட்ட தேவையும் என்னவெனில் மூன்று வெப்ப மின்வலு பொறிகளை குறிப்பாக 115 மெகாவாட் கொண்ட களனிதிஸ்ஸ வாயுவிசையாழி செயற்திட்டம் மற்றும் 40 மெகாவாட் கொண்ட சபுகஸ்கந்த வலு நிலைய (விரிவாக்க) செயற்றிட்டம் என்பனவற்றை ரூ.5.5 பில்லியன் செலவில் உருவாக்கியதன்மூலமும் முதலாவது தனியார்துறை கட்டி செயற்படுத்தி உடைமையாக்கும் வலு செயற்றிட்டம் 22.5 மெகாவாட் இயலளவைக் கொண்டதாக ரூ.1,000 மில்லியன் செலவில் 1997 திசெம்பரில் லகதனாவி தனியார் கம்பனி லிமிட்டெட்டால் நிர்மாணிக்கப்பட்டதன்

மூலமும் தேசிய மின் தொகுதியின் விரிவாக்கம் 178 மெகாவாட்டுக்களால் 1,587 மெகாவாட்டுக்களுக்கு கொண்டுவரப்பட்டதாகும். இந்த மூன்று வலுப் பொறிகளும் வருடாந்த மின் உருவாக்க அளவை 1997ஆம் ஆண்டு முடிவில் 1,280 கிகாவாட் மணித்தியாலங்களினால் 6,696 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்தன. மேலும் மின் உருவாக்கிகளை இறக்குமதி செய்வதற்கு தாராளமான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டதன் விளைவாக 1997 இறுதியில் முதலீட்டுச்சபை மற்றும்முதலீட்டுச் சபை சாராத 248 கம்பனிகள் 108 மெகாவாட் அம்பியர் இயலளவை நிறுவின. இதேவேளை நீர் மின்வலுவில் ஏற்பட்ட பற்றாக் குறையை ஈடுசெய்யுமுகமாக வாடகைக்கமர்த்தப் பட்ட தனியார் வலு 1997 யூலை இறுதியில் 150 மெகாவாட்டுக்களுக்கு அதிகரித்ததுடன் நீர்த்தேக்க ங்களில் நீர் மட்டத்தின் அளவுகளில் மேம்பாடு காணப்பட்டதால் ஆண்டு இறுதியில் 20 மெகாவாட்டுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

முன்னைய ஆண்டின் 5 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் சகல மூலகங்களிலுமிருந்து உருவாக்கப்பட்ட (இலங்கை மின்சார சபை, தனியார்துறை வாடகைக்கமர்த்தப்பட்ட வலு மற்றும் சுய உருவாக்கம்) மின்வலு 1997 இல் 13 சதவீதத்தினால் 5,126 மெகாவாட் மணித்தியாலங்களுக்கு அதிகரித்தது. இலங்கை மின்சார சபையினால் உருவாக்கப்பட்ட நீர்மின் வலு இவ்வாண்டின் முதல் அரைப் பகுதியில் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியின் சாதகமான வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காரணமாக கணிசமானளவு மேம்பாடடைந்தது. அதன் பயனாக, 1996 இன் 28 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1997 காலப்பகுதியில் நீர் மின்சார உருவாக்கம் 6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. நீர் மின்வலு பற்றாக்குறையையும், அதிகரித்து வரும் கேள்வியையும் ஈடுசெய்யுமுகமாக வெப்ப மின்வலு உருவாக்கத்தில் கணிசமானளவு விரிவாக்கம் காணப்பட்டது. 1997 காலப்பகுதியில் தனியார்துறை மற்றும் சுய உருவாக்கம் என்பனவற்றை உள்ளடக்கிய வெப்ப மின்வலு உருவாக்கம் 31 சதவீதத்தால் 1,678 கிகாவாட்டு மணித்தியாலங்களுக்கு அதிகரித்தது. வலுப்படுத்தப்பட்ட உருவாக்க இயலளவில் ஏற்பட்ட மேம்பாட்டினைப் பிரதிபலிக்கும் வகையில் தனியார் துறை நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட சுய உருவாக்கம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43 சதவீதத்தினால் 217 கிகாவாட் மணித்தியாலங்களுக்கான ஒரு அதிகரிப்பைப் பதிவு செய்தது. அதன் பயனாக 1996 இல் 28 சதவீத வெப்ப மின்வலுவில் தங்கியிருந்தமை 1997 இல் 33 சதவீதத்துக்கு மேம்பட்டது. அதிகரித்த வெப்பமின் வலு உருவாக்கம் மற்றும் உருவாக்க இயலளவை விரிவுபடுத்துவதன் அவசர தேவை 1997 இல் இலங்கை மின் சபையின் நிதி தொழிற்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கமாக இருந்தது. வாடகைக் கட்டணங்களுக்கான கொடுப்பனவுகள், சுய உருவாக்கம் மற்றும் வலு கொள்வனவுகள் என்பவற்றை உள்ளடக்கிய வெப்ப மின் வலுவுக்கான மொத்தச் செலவு இலங்கை மின் சபையின் கணிப்பின்படி கிட்டத்தட்ட ரூபா 7,235 மில்லியன்களாகும்.

கூடிய செலவுடைய வெப்பமின் வலு உருவாக்கத்தின் காரணமாக 1997 செப்தெம்பர் 1ம் திகதியிலிருந்து இலங்கை மின் சபையின் இலாப வீதத்தை அதிகரிப்பதற்காக மின் கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டன. மின்வலுவுக்கான சராசரிக் கட்டணம் ஒரு அலகுக்கு ரூபா 4.05 இலிருந்து ரூபா 4.52 ஆக அல்லது 11 சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டது. இங்கு வீட்டுத்துறை சராசரிக்கட்டணம் 14.6 சதவீதத்தால் அதிகரித்தது. வழமையான கட்டணங்களைப் பிரயயோகிக்கையில் ஏற்படும் பெருமளவான அதிகரிப்புக்களிற்கு குறைந்த வருமான நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு வீட்டுத் துறையினருக்காக இலங்கை மின்சார சபை குறைந்த கட்டணமாக ரூபா 25 ஐ அறிமுகம் செய்திருக்கிறது. கைத்தொழில் துறைக்கான சராசரிக் கட்டணம் ஏனைய வகைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவில் 9 சதவீதத்தால் அதிகரித்ததுடன், வீட்டுத்துறைக்கு வழங்கப்பட்ட குறுக்கு உதவு தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. வர்த்தகத் துறைக்கான சராசரிக் கட்டணம் அலகுக்கு ரூபா 7.03 க்கு 12.8 சதவீதத்தால் அதிகரித்தது.

மின் கட்டண அதிகரிப்பின் மத்தியிலும் 1997 காலப்பகுதியில் மொத்தவலு நுகர்ச்சி (சுய உருவாக்கத்தையும் உள்ளடக்கியதாக) 14 சதவீதத்திலான ஒரு அதிகரிப்பைக் காட்டியது. சென்ற வருடத்தில் ஏற்பட்ட மின்வெட்டுக் காரணமாக உருவான வலு நட்டங்களை சீராக்கிய போதிலும், மின்சாரத்திற்கான கேள்வியில் ஏற்பட்ட 10 சதவீத வளர்ச்சியானது பொருளாதார செயற்பாடுகள் மற்றும் உள்நாட்டுத் தேவைகள் என்பனவற்றின் விரிவாக்கத்தைப் பிரதிபலித்தது. வீட்டுத் துறையினரால் நுகரப்பட்ட மொத்த வலு 16 சதவீதத்தால் உயர்வடைந்து நுகர்வோர் வலையமைப்பு 1.56 மில்லியனிலிருந்து 1.71 மில்லியன் குடும்ப அலகுகளுக்கு அதிகரித்ததை ஓரளவு பிரதிபலித்தது.

## அட்டவணை 5.5

### வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள்

| விடயம் | அலகு | 1995 | 1996 | 1997(அ) | சதவீத மாற்றம் 1996 | சதவீத மாற்றம் 1997 |
|---|---|---|---|---|---|---|
| **1. பெற்றோலிய உற்பத்திகள்** | | | | | | |
| ஏற்றுமதிகளின் அளவு | '000 மெ.தொன்கள் | 616 | 661 | 538 | 7 | -19 |
| ஏற்றுமதிகளின் பெறுமதி | ரூ. மில். | 4,349 | 5,740 | 5,743 | 32 | 0 |
| | ஐ.அ.டொ. மில். | 85 | 104 | 97 | 22 | -7 |
| இறக்குமதிகளின் அளவு | | | | | | |
| மசகெண்ணெய் | '000 மெ.தொன்கள் | 1,860 | 2,033 | 1,814 | 9 | -11 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ,, | 562 | 729 | 1,087 | 30 | 49 |
| திரவப் பெற்றோலிய வாயு | ,, | 66 | 71 | 87 | 8 | 23 |
| இறக்குமதிகளின் பெறுமதி (கொ.க.) | | | | | | |
| மசகெண்ணெய் | ரூ. மில். | 12,360 | 16,809 | 15,584 | 36 | -7 |
| | ஐ.அ.டொ. மில். | 241 | 304 | 263 | 26 | -13 |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் | ரூ. மில். | 4,812 | 8,465 | 12,512 | 76 | 48 |
| | ஐ.அ.டொ. மில். | 94 | 153 | 212 | 63 | 39 |
| திரவப் பெற்றோலிய வாயு | ரூ. மில். | 1,121 | 1,237 | 1,635 | 10 | 32 |
| | ஐ.அ.டொ. மில். | 22 | 22 | 28 | 0 | 27 |
| மசகெண்ணெயின் சராசரி | ரூ. பீப்பா | 903 | 1,116 | 1,167 | 24 | 5 |
| விலை (கொ.க.) | ஐ.அ.டொ/பீப்பா | 17.59 | 20.19 | 19.42 | 15 | -4 |
| உள்நாட்டு விற்பனைகள் | '000 மெ.தொன்கள் | 1,721 | 2,120 | 2,327 | 23 | 10 |
| சிறப்புப் பெற்றோல் | ,, | 190 | 197 | 194 | 4 | -2 |
| தன்னியக்க டீசல் | ,, | 796 | 1,048 | 1,295 | 32 | 24 |
| பார டீசல் | ,, | 80 | 87 | | 9 | – |
| சிறப்பு டீசல் | ,, | 27 | 26 | 32 | -4 | 23 |
| மண்ணெண்ணெய் | ,, | 222 | 228 | 225 | 3 | -1 |
| உலையெண்ணெய் | ,, | 238 | 336 | 371 | 41 | 10 |
| அவுட்டூர் | ,, | 91 | 110 | 111 | 21 | -1 |
| திரவப் பெற்றோலிய வாயு | ,, | 77 | 88 | 99 | 14 | 13 |
| உள்நாட்டு விலை | | | | | | |
| சிறப்புப் பெற்றோல் | ரூ./லீற்றர் | 40.00 | 50.00 | 50.00 | 25 | 0 |
| தன்னியக்க டீசல் | ,, | 12.40 | 13.20 | 13.20 | 6 | 0 |
| பார டீசல் | ,, | 11.70 | – | – | – | – |
| சிறப்பு டீசல் | ,, | 15.20 | 18.50 | 18.50 | 22 | 0 |
| மண்ணெண்ணெய் | ,, | 9.50 | 10.40 | 10.40 | 9 | 0 |
| உலையெண்ணெய் | ,, | | | | | |
| 500 செக்கண்ட் | ,, | 7.10 | 7.80 | 7.80 | 10 | 0 |
| 800 செக்கண்ட் | ,, | 6.80 | 7.50 | 7.50 | 10 | 0 |
| 1,000 செக்கண்ட் | ,, | 6.50 | 7.20 | 7.20 | 11 | 0 |
| திரவப் பெற்றோலிய வாயு | ரூ./கி.கி. | 19.23 | 22.30 | 22.30 | 16 | 0 |
| **2. மின்வலு** | | | | | | |
| கிடைக்கத்தக்க இயலளவு | மெ. வா. | 1,409 | 1,453 | 1,607 | 3 | 11 |
| நிறுவப்பட்ட இயலளவு | ,, | 1,409 | 1,409 | 1,587 | 0 | 13 |
| நீர் மின் | ,, | 1,137 | 1,137 | 1,137 | 0 | 0 |
| வெப்ப மின் | ,, | 272 | 272 | 427 | 0 | 57 |
| தனியார் மின் | ,, | – | – | 23 | – | – |
| வாடகைக்குப் பெறப்பட்ட தனியார்வலு | ,, | – | 44 | 20 | – | -55 |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | கி.வா.ம. | 4,783 | 4,530 | 5,126 | -5 | 13 |
| நீர் மின் | ,, | 4,514 | 3,249 | 3,448 | -28 | 6 |
| வெப்ப மின் | ,, | 269 | 974 | 1,050 | 262 | 8 |
| தனியார் மின் | ,, | – | 155 | 411 | | 165 |
| சுய உற்பத்தி | ,, | – | 152 | 217 | | 43 |
| மொத்த விற்பனைகள் | ,, | 3,915 | 3,740 | 4,254 | -4 | 14 |
| உள்நாட்டு | ,, | 1,034 | 1,046 | 1,212 | 1 | 16 |
| கைத்தொழில் (இ) | ,, | 1,527 | 1,513 | 1,647 | -1 | 9 |
| வர்த்தகம் | ,, | 631 | 592 | 689 | -6 | 16 |
| உள்ளூராட்சி மன்றங்கள் | ,, | 683 | 542 | 657 | -21 | 21 |
| தெரு விளக்குகள் | ,, | 40 | 47 | 49 | 18 | 4 |

(ஆ) தற்காலிகமானவை.

(ஆ) 1996 யூனிலிருந்து பார டீசலின் விற்பனைகள் தன்னியக்க டீசலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூலங்கள்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின் சபை
வரையறுக்கப்பட்ட கொழும்பு வாயுக் கம்பனி
வரையறுக்கப்பட்ட லங்கா மரைன் சேவிசஸ் (பிறேவேட்)

கைத்தொழில் துறை மற்றும் வர்த்தகத்துறையில் பயன்படுத்தப்பட்ட மின்சாரமும் முறையே 9 மற்றும் 16 சதவீதத்தினால் அதிகரித்தது. 1997 ஆண்டு காலத்தில் இலங்கை மின்சார கம்பனியின் விற்பனைகளும் 21 சதவீதத்தால் அதிகரித்தது.

மின்சக்தி மற்றும் விநியோக செயற்திட்டங்களில் உருவாக்கம் மீதான முதலீட்டுச் செலவினமானது ரூபா 7,756 மில்லியனாக இருந்தது. இதில் ரூபா 3,840 மில்லியன் அல்லது 49 சதவீதம் வலு உருவாக்கல் செயற்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட வலு உருவாக்கல் செயற்திட்டங்களான சபுகஸ்கந்த மின்உற்பத்தி விரிவாக்க செயற்திட்டம், (ரூபா 509 மில்லியன்), மேற்குக் கரை நிலக்கரி செயற்றிட்டம் (ரூபா 151 மில்லியன்) குக்குலே நீர் மின்வலுச் செயற்றிட்டம் (ரூபா 280 மில்லியன்) சமனலவெவ (ரூபா 636 மில்லியன்) மற்றும் சபுகஸ்கந்த கேஎவ்டபிள்யூ இரண்டாவது விரிவாக்க செயற்திட்டம் (ரூபா 413 மில்லியன்) என்பன இவ்வாண்டு காலத்தில் முன்னேற்றத்தைக் காட்டின. எம்வி மற்றும் எல்வி விநியோக வழிகளை விஸ்தரித்து முறையில் உள்ள இழப்புக்களைக் குறைத்து மின் அலகு எண்ணிக்கை அளவையும் நம்பத்தகு தன்மையையும் மேம்படுத்தி தரம் உயர்த்தும் நோக்குடன் மீதி ரூபா 3,916 மில்லியனும் மின்சக்தி மற்றும் விநியோகத் திட்டங்கள் மீது செலவிடப்பட்டன. இவ்வாண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மின்கடத்தி மற்றும் விநியோக செயற்திட்டங்களாவன கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால் நிதியிடப்பட்ட மின்கடத்தி மற்றும் மின் உபதொகுதி அபிவிருத்தி செயற்திட்டம் (ரூபா 591 மில்லியன்) மின் கடத்தி முறைமை அதிகரிப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம் (ரூபா 220 மில்லியன்), ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மின்வலு முறைமை விஸ்தரிப்பு செயற்திட்டமும் (ரூபா 516 மில்லியன்) கேஎவ்டபிள்யூவினால் நிதியிடப்பட்ட மின் உப தொகுதி அதிகரிப்புச் செயற்றிட்டம், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட இரண்டாவது மின்விநியோகம் மற்றும் மின் கடத்தி செயற்திட்டம் (ரூபா 2,256 மில்லியன்) ஆகிய பிரதான மின்உற்பத்தி மற்றும் விநியோக செயற்திட்டங்கள் இவ்வாண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், கிராமிய பகுதிகளில் விநியோக வலையமைப்பை மேம்படுத்தி, விஸ்தரிக்கும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்பட்ட கிராமிய மின் விநியோகத் திட்டத்தின் கீழ் ரூபா 417 மில்லியன் செலவிடப்பட்டது. இத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதும் 2000 ஆம் ஆண்டுக்குள் மேலதிகமாக கிட்டத்தட்ட 110,000 பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை வழங்கும். இலங்கை மின்சார சபையின் தகவலின்படி, மூலப்பொருட்களை கப்பலேற்றலில் ஏற்பட்ட தாமதமும், ஒப்பந்தங்களை கைச்சாத்திடலில் காணப்பட்ட தாமதங்களும் செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் குறைப் பயன்பாட்டிற்குக் காரணமாகும்.

மின் உருவாக்க இயலளவையும் மற்றும் வலுமுறையில் நம்பிக்கையையும் மேம்படுத்துமுகமாக பல நடுத்தர நீண்ட கால வெப்பமின்வலு மற்றும் நீர் மின்வலு செயற்திட்டங்கள் நடைமுறையிலுள்ளன. 1997ஆம் ஆண்டு காலத்தில் 51 மெகாவா ட்டுக்களை கொண்ட கேஎச்டி மின்வலு செயற் திட்டத்திற்கான நிருமாண வேலைகள் 62 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் செலவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த செயற்திட்டம் 1998 நடுப் பகுதியில் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. கேஎப்டபிள்யூ மற்றும் இலங்கை மின்சார சபையினால் நிதியிடப்பட்டு 1997 இல் ஆரம்பிக்கப் பட்ட சபுகஸ்கந்த மின்உருவாக்க நிலைய விஸ்தரிப்பு செயற்திட்டத்தின் விரிவாக்கம் 2 (40 மெகாவாட்) 1999 இல் முற்றுப் பெறும். கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினாலும், இலங்கை மின்சார சபையாலும் நிதியிடப்படவுள்ள ரூபா 12,635 மில்லியன் செலவு மதிப்பிடப்பட்ட 60 மெகாவாட் கொண்ட குக்குலே கங்கை நீர்மின் வலு செயற் திட்டத்திற்கான அமைவிட தொடக்க வேலைகளும், விலைக்கோரல் நடைமுறைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1997 இல் கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால் நிதியிடப்பட்ட ரூபா 8,000 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்ட இணைந்த சுழற்சி வாயு விசை ஆழிப்பொறி (150 மெகாவாட்) மீதான தொடக்க வேலை 2000 ஆம் ஆண்டளவில் முற்றுப் பெறவிருக்கிறது. தனியார் துறை மின் உருவாக்க செயற்திட்டங்களைப் பொறுத்தவரை 150 மெகாவாட் கொண்ட இணைந்த சுழற்சி மின்வலு செயற்திட்டமும், மாத்தறை, மத்துகம மற்றும் அநுராதபுரத்தில் அமையவிருக்கும் 20 மெகாவாட் கொண்ட இரு டீசல் மின் வலு பொறித்தொகுதிகளுக்குமான முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன. 60 மெகாவாட் கொண்ட கொட்டுகொடவில் அமையவிருக்கும் வாஜ மவுண்டட் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆய்வுக்குரிய ஆண்டில் வலுவினைப் பாதுகாப்பதற்காக வேண்டி வலுவினைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் ஒளிகாலும் விளக்குகளின் விற்பனை தொடர்ந்தது. மேற்கு மாகாணத்தில் 3.75 கிகாவாட் மணித்தியால சேமிப்பினை அடைவதற்காக

வலுவினைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் 220,000 விளக்குகளை விற்பதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை ஒத்த திட்டமொன்று பொதுத்துறையில் வலுப் பாதுகாப்பு நிதியத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், வலுக்கணக்காய்வுகள், அளவீடுகள் மற்றும் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன.

## பெற்றோலிய உற்பத்திகள்

பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவு 5 சதவீதத்தினால் 503 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்து, மொத்த இறக்குமதிச் செலவில் 10 சதவீதத்திற்கு வகை கூறியது. வெப்பமின்வலுவின் மேலதிக தேவைப்பாடுகள் மற்றும் அதிகரித்த போக்குவரத்துக் கேள்வி என்பவற்றைச் சமாளிப்பதற்காக பெற்றோலிய உற்பத்திகளின் அளவில் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக இந்நிலை ஏற்பட்டது. மசகு எண்ணெய்க்கான பன்னாட்டு விலை ஆண்டின் முதல் காற் பகுதியில் கடுமையாக அதிகரித்து ஆண்டின் மூன்றாம், நான்காம் கால் பகுதியில் கீழ் நோக்கியதொரு போக்கை பதிவு செய்தது. அதன்பயனாக, சென்றவருட 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1997 ஆண்டு பன்னாட்டு மசகு எண்ணெய் விலையில் குறைந்தளவான தொரு அதிகரிப்பே காணப்பட்டது. 1997 சனவரியிலிருந்து பெப்ருவரி மாதம் வரை வழமையான பராமரிப்பு நோக்கத்துக்காக எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் முடப்பட்டதன் காரணமாக மசகு எண்ணெய் இறக்குமதி அளவு 1997 ஆண்டு காலத்தில் 11 சதவீதத்தனால் 1.8 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு குறைவடைந்தது. வழங்கலில் ஏற்பட்ட குறைவைச் சமாளிக்குமுகமாக சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதிகள் 49 சதவீதத்தினால் 1.1 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. உயர்ந்தளவான இறக்குமதி அளவு மற்றும் அதிகரித்த பன்னாட்டு விலைகள் காரணமாக திரவப் பெற்றோலிய வாயுவின் இறக்குமதி மீதான செலவுகள் உயர்வடைந்தன.

1997 இல் பெற்றோலிய உற்பத்திகளுக்கான உள்நாட்டு விலைகள் மாற்றமடையாதிருந்தன. மண்ணெண்ணெய், தன்னியக்க டீசல் மற்றும் உலை எண்ணெய் என்பன மீதான குறுக்கு உதவு தொகைகளும் தொடர்ந்தும் காணப்பட்டன. ஆண்டு இறுதியில் தன்னியக்க டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன முறையே செலவை விட 7 சதவீதம் மற்றும் 19 சதவீதம் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன. உலை எண்ணெய் அதன் அலகிற்கான உற்பத்தி 29 சதவீதக் குறைவில், பாரிய உதவிக்கொடுப்பனவுடன் விற்கப்பட்டது. வருடம் முழுவதும் சுங்கத் தீர்வையில் 10 சதவீத தளர்த்தல்கள் செயற்படுத்தப் பட்டதால், இறக்குமதித் தீர்வை 35 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. பன்னாட்டு சந்தை விலைகளில் ஏற்பட்ட சிறிதளவான வீழ்ச்சி மற்றும் மேந்தலைச் செலவும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டமை, என்பனவற்றின் காரணமாக 1996 ஆண்டின் ரூபா 3000 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 1997 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபநட்டமற்ற புள்ளியை அடைந்ததன் விளைவாக இந்நிலை ஏற்பட்டது.

பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு நுகர்வு 10 சதவீதத்தினால் அதிகரித்தது. பொருளாதாரத்தில் போக்குவரத்திற்கான கேள்வி அதிகரித்தமையையும் அதிகரித்த வெப்பமின்வலு உருவாக்கம் தொடர்பிலான மேலதிக தேவைகளையும் பிரதிபலித்தமையையும் தன்னியக்க டீசலுக்கான கேள்வி சென்ற ஆண்டில் 32 சதவீத அதிகரிப்பைத் தொடர்ந்து இவ்வாண்டில் மேலும் 24 சதவீதத்தால் விரிவடைந்தது. அதேவேளை கைத்தொழில் துறை செயற்பாடுகளில் ஏற்பட்ட பகுதியளவான விரிவாக்கம் காரணமாக உலை எண்ணெய்க்கான கேள்வி 10 சதவீதத்தால் அதிகரித்தது. மின்சாரம் பதிலீடாக பயன்படுத்தப்பட்டமையினால் மண்ணெண்ணெய் விற்பனை 1996 ம் ஆண்டைப் போன்று ஒரே அளவாக இருந்தது. சார்புரீதியான விலை அனுகூலம் காரணமாக பெற்றோலிய பாவனையிலிருந்து டீசல் பாவனைக்கு மாறியமை மற்றும் வாயுவில் ஓடும் வாகனப் பயன்பாடு போன்றவற்றினால் பெற்றோலியத்திற்கான கேள்வி 2 சதவீதத்தால் குறைவடைந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெற்றோலிய விநியோக வலையமைப்பை முன்னேற்றவும், விரிவுபடுத்தவும் பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒறுகொடவத்த சேமிப்புத் தாங்கி புனரமைப்பு ஒப்பந்தம், கொலன்னாவ தாங்கிகளை நிறுவுதல் மற்றும் புதிய விநியோக முனைக்கோடி ஒன்றை சபுகஸ்கந்தையில் அமைத்தல் என்பன 1997 ம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச்செயற்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 24 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் நிதியினையும், உள்நாட்டு நிதிக்கடனாக தேசிய அபிவிருத்தி வங்கி ரூபா 1000 மில்லியன்களையும் நிதியிடவிருக்கின்றன. இத்திட்டத்தினை 1999 இல் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பிராந்திய சேமிப்பு வசதிகளை அதிகரிப்பதற்காக

ரூபா 62 மில்லியன் மொத்த செலவில் மதிப்பிடப்பட்ட 13 சேமிப்பு தாங்கிகளை அமைக்கும் திட்டம் இவ்வாண்டு காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந் தது. கட்டுநாயக்கா விமான மீள் எரிபொருள் வசதிகளின் அபிவிருத்தி சில்லறை விற்பனை நிலையங்களின் மீளமைப்பு, அதி உயர் காற்றுறிஞ்சி மற்றும் பிட்டுமன் வெளிச் செலுத்தும் பொறி மற்றும் சல்பர் மீட்புப்பொறி என்பனவற்றின் புத்தாக்கம் என்பன இவ்வாண்டில் மேற்கொள்ளப் பட்டன. 1996இன் வலு நெருக்கடியினைத் தொடர்ந்து பணிகளின் தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக சில்லறை விற்பனை நிலையங்களின் 80 சதவீதமானவற்றிற்கு தமது சொந்த மின்னுருவாக்கிகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதே வேளையில் சிவில் யுத்த காலத்தில் வடமாகாணத்தில் சேதமாக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் களஞ்சிய, சந்தைப்படுத்தல் விநியோக வசதிகளை புத்தாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மண்ணெண்ணெய் மற்றும் டீசல் என்பனவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்காக காங்கேசன்துறையில் 100,000 இலிற்றர் இயலளவைக் கொண்ட ஐந்து களஞ்சியத் தாங்கிகள் நிறுவப்பட்டன. காங்கேசன்துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை தாங்கிப் பிரதேசத்திற்கான விநியோக முறை புத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 40 சில்லறை விற்பனை நிலையங்கள் புத்தாக்கம் செய்யப்பட்டு மீளச் செயற்படத் தொடங்கியுள்ளதுடன் இதன்மூலம் இப் பிரதேசத்தில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பனவற்றின் விலைகள் பயன்தரு முறையில் குறைக்கப்பட்டுள்ளன.

## 5.6 போக்குவரத்து

### போக்குவரத்து வலையமைப்பு

தனியார் துறையினரின் அதிகரித்த ஈடுபாடு காரணமாக 1997ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்து வலையமைப்பு சிறிதளவு விரிவடைந்து காணப்பட்டது. எவ்வாறாயினும் பல துறைகளுக்கு குறிப்பாக வீதிகள் மற்றும் பயணிகள் போக்குவரத்து என்பவற்றிற்கு தரமேம்பாடு தேவைப்படுகின்றது. அ மற்றும் ஆ வகுப்பு வீதிகள் என தரப்படுத்தப் பட்ட 11,147 கிலோ மீற்றர் நீளமுள்ள, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழான வீதிகள் உட்பட ஏறக்குறைய 100,000 கிலோ மீற்றர் வீதிகளை நாடு கொண்டுள்ளது. 1997ஆம் ஆண்டில் அ மற்றும் ஆ வகுப்பு வீதிகள் அதிகரிக்கப்பட வில்லை. ஏறக்குறைய 15000 கிலோ மீற்றர் இ மற்றும் ஈ பிரிவு வீதிகள் மாகாண சபைகளினால் பராமரிக்கப்பட்டன. எஞ்சியிருக்கும் வீதி வலையமை ப்பானது, உள்ளூராட்சி சபை மற்றும் மகாவலி அதிகார சபை, நீர்ப்பாசன திணைக்களம், வனவளத் திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம் மற்றும் பெருந்தோட்டத்துறை கம்பனிகள் போன்ற அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் கீழ் இருந்தன.

1997 ம் ஆண்டின் இறுதியில் மோட்டார் சைக்கிள்களையும் உள்ளடக்கிய நாட்டின் மொத்த வாகன கையிருப்பு 1,407,381 ஆக இருந்ததோடு இது 6 சதவீத அதிகரிப்பாகும். 1997 ம் ஆண்டின் இறுதியில் மோட்டார் சைக்கிள் தவிர்ந்த வாகன கையிருப்பு 731,747 ஆகவிருந்தது. பதினொருபிராந்திய போக்குவரத்து கம்பனிகள் (முன்னைய மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து கம்பனிகள்) 8,007 பேருந்துகளை உடமையாக கொண்டிருந்த போதிலும் இவற்றில் ஒரு நாளுக்கு சேவையில் ஈடுபடுத்தப் பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை 4,487 ஆகவிருந்தது. 1997 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 12,800 தனியார் பேருந்துகள் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டிருந்தன. இலங்கை புகையிரதப் பகுதியின் இயக்கு வலுப்பொறி நிலைமை 1997 ம் ஆண்டு காலப்பகுதியில் பெரும்பாலும் மாற்றமடையாமல் இருந்தது. 1463 கிலோ மீற்றர் புகையிரத பாதை வலையமைப்பை இயக்குவதற்காக 57 வலுப்பொறிகளையும், 26 பவர் செட்டுக்களையும், 1312 பயணிகள் வண்டிகளையும், மற்றும் 2575 சரக்குவண்டிகளையும் இது உடமையாக கொண்டிருந்தது. (சரக்குப் போக்குவரத்தில் இலங்கை புகையிரதப் பகுதியின் பங்கு பல ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதன் விளைவாக தரையூடான சரக்குப் போக்குவரத்தில் ஏறக்குறைய 95 சதவீதமானவை தனியார் பார வண்டிகளினால் கையாளப்படுகின்றன. சரக்குப் போக்குவரத்தில் ஏறக்குறைய 55,550 பாரவண்டிகள் பிரதானமாக ஈடுபட்டிருந்தன.

நாட்டின் பிரதான துறைமுகங்களான கொழும்பு, காலி, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை என்பன இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமைப் படுத்தப்படுகின்றன. கொழும்புத் துறைமுகம் 90 சதவீதத்திற்கு மேலான கப்பற்சரக்கு கையாளலை மேற்கொள்வதோடு தொகைவடிவ மற்றும் திரவ கப்பற் சரக்கு கையாளலுக்கு மேலதிகமாக ஆண்டுக்கு 1.6 மில்லியன் 20 அடிக்கு சமமான கொள்கல அலகுகளை கையாளுவதற்கான இயலளவினையும் கொண்டுள்ளது.

வான் போக்குவரத்து தொடர்பில் கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு மேலதிகமாக 12 உள்நாட்டு விமான நிலையங்கள் உள்ளன. தேசிய விமான சேவை என்றவகையில் ஏயார் லங்கா 9 ஊர்தித் தொகுதிகளை கொண்டிருப்பதோடு, 20 நாடுகளில் உள்ள 28 சேரிடங்களுக்கு விமான சேவைகளை நடாத்துகின்றது. 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் போக்குவரத்து உட்கட்டமைப்பினை குறிப்பாக பயணி போக்குவரத்து தொடர்பில் விரிவாக்கவும் முன்னேற்றவும் பல முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் அரச பேருந்து போக்குவரத்து சேவையின் திறனை முன்னேற்றும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய போக்குவரத்து கம்பனிகளின் உருவாக்கம் நிறைவு செய்யப்பட்டது. போக்குவரத்து துறையின் முதலீட்டுக்கான ஊக்குவிப்பு என்றவகையில் 1998ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கான இறக்குமதித் தீர்வைகள் முற்றாக அகற்றப்பட்டன. அதே வேளையில், பிராந்திய போக்குவரத்து கம்பனிகளுக்கு தொழிற்பாட்டிலில்லாத பேருந்துக்களின் இடத்துக்கு 1500 பேருந்து எந்திரங்களை இறக்குமதி செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக போக்குவரத்துத் துறையின் முதலீட்டாளர்களுக்காக வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் ஊடாக பலவித நிதியுதவி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## வீதி அபிவிருத்தி

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, உச்ச நிறுவனம் என்ற வகையில் 11,147 கிலோ மீற்றர் பரப்பினைக் கொண்ட அ மற்றும் ஆ தரவீதிகளை உள்ளடக்கிய தேசிய நெடுஞ்சாலை வலைப்பின்னலின் அபிவிருத்திக்கும் பராமரிப்புக்கும் பொறுப்பாகவுள்ளது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 4,422 பாலங்கள் பராமரிக்கப்பட்டன. 1997 இல் வீதியமைப்பு/புனரமைப்பு போன்றவற்றிற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மொத்த செலவினம் ரூபா 5,730 மில்லியனாக அமைந்ததோடு இது முன்னைய ஆண்டின் செலவினை விட 72 சதவீத அதிகரிப்பினை பெருமளவு பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும் ஆண்டுக்காலத்தில் தேசிய வீதிப்பராமரிப்பு செலவினம் ரூ. 266 மில்லியனுக்கு 13 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. வீதிப் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதியதாக இல்லை. தற்போதைய ஆண்டுக்கான ஒதுக்கீடானது தேசிய வீதி வலையமைப்பில் ஏறக்குறைய பத்திலொரு பகுதியை மட்டுமே பராமரிக்க போதுமாகவுள்ளது. கிட்டத்தட்ட 15,000 கிலோ மீற்றர் வீதிகள் தங்களின் கீழ்வருவதாக மாகாண சபைகள் (வடக்கு-கிழக்கு மாகாணசபை தவிர்ந்த) அறிவித்துள்ளன. மாகாணசபைகளினால் வீதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் 1997 இல் ரூ. 724 மில்லியனுக்கு 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1997ம் ஆண்டு காலப்பகுதியில் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, மாகாண சபைகளுக்கு உதவுவதற்காக ரூ. 800 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

ஒவ்வொரு 1000 சதுர கிலோ மீற்றருக்கும் 1550 கிலோ மீற்றர் பாதை வலையமைப்பை அல்லது ஒவ்வொரு 10,000 ஆட்களுக்கு 54 கிலோ மீற்றர் பாதை செறிவினை இலங்கை கொண்டுள்ளதுடன் ஆசியாவின் தரங்களுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க தொன்றாகவும் கருதப்படுகின்றது. எவ்வாறாயினும் காலத்துக்கு காலமும் மற்றும் வழமையான வீதிப்பராமரிப்பு வேலைகள் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவுபடுத்தலுக்கும், ஊர்தித்தொகுதிகளின் அதிகரிப்பிற்கும் ஈடுகொடுக்கத்தக்க விதத்தில் பேணப்படவில்லை. போதியளவு நிதி ஒதுக்கப்படாமை திருப்திகரமான பராமரித்தலுக்கு பெரும் தடையாகவுள்ளது. இதன் விளைவாக குறிப்பாக மாகாண மற்றும் உள்ளூர் வீதி நிலைமைகள் குறிப்பிடத்தக்க அளவில் மோசமடைந்து போக்குவரத்து செலவு அதிகரிப்பிற்கு காரணமாகியது. வீதிப்பராமரிப்பில் ஈடுபட்டுள்ள குறிப்பாக மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் உள்ள பல்வேறு நிறுவனங்களின் குறைவான கண்காணிப்புக்களும், மோசமான அவதானிப்புக்களும் காரணமாக உச்ச நன்மையை பெறும் நோக்கில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்கள் ஒழுங்காக பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

1997ம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு உதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதிப் புனரமைப்பு திட்டங்களைத் தொடர்ந்தது. 397 கிலோ மீற்றர் வீதி புனரமைப்புக்கும், தென், மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் 19 பாலங்களின் மீளமைப்புக்குமென வடிவமைக்கப்பட்ட உலக வங்கியின் மூன்றாவது வீதிப் புனரமைப்பு செயற்றிட்டம் 1997 இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டுக் காலப் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் 221 கிலோ மீற்றர் வீதிப் புனரமைப்பு வேலைகள் ரூ. 1712 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டன. ரூ.182 மில்லியன் செலவில் கம்பகா மாவட்டத்தில் 5 பாலங்களினதும்

மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 10 பாலங்களினதும் மீள்நிருமாண வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூன்றாவது வீதி புனரமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் 184 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் ரூ. 1,966 மில்லியன் செலவில் புனரமைப்பு செய்யப்படும். 103 கிலோ மீற்றர் கொண்ட கட்டுநாயக்க -புத்தளம் வீதியை ரூ. 1,084 மில்லியன் செலவில் புனரமைப்பு செய்வதனையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. 1997 இல் தொடக்கி வைக்கப்பட்ட கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட பேஸ்லயின் வீதி மறுசீரமைப்பு செயற்றிட்டம் - கட்டம்-1 இன் அமைப்பு வேலைகள் 1998ம் ஆண்டு முடிவில் முற்றுப்பெறும். களனிதிஸ்ஸ சுற்று வட்டத்தில் இருந்து கிருலப்பனை ஹய்லெவல் வீதி வரைக்கான இரட்டை மூன்று வழிபாதைகள், தெமட்டகொடை புகையிரத கடவையின் மேம்பாலம், பொரளை சந்தியில் பாதசாரிகளுக்கான துணைப் பாதை என்பவற்றின் நிருமாணத்தையும் இச்செயற்றிட்டம் உள்ளடக்கியுள்ளது. கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால் நிதியிடப்பட்ட இலங்கை யப்பான் நட்புறவு பாலத்தின் கட்டம்-2 இற்கு இரு மேலதிக பாதைகளை நிருமாணிப்பதற்காக ஒப்பந்தம் விரைவில் கையளிக்கப்படவுள்ளது. குவைத் நாட்டின் அரேபிய பொருளாதார அபிவிருத்தி நிதியத்தின் உதவியின் மூலம் ரூ. 600 மில்லியன் செலவில் 28 பாலங்களின் புத்தாக்க/ மீள் நிருமாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கொறியாவின் உதவியுடன் இரத்தினபுரி - பேரகல - பதுளை வீதியினை புத்தாக்கம் செய்வதற்கான விரிவான பொறியியல் வடிவமைப்பு வேலைகள் முற்றுப்பெற்றதுடன், இதன் நிருமாண வேலைகள் 1998ல் தொடக்கி வைக்கப்படவுள்ளன.

கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால் உதவியளிக்கப்பட்ட காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் வீதிப் பேணல் நிகழ்ச்சி திட்டத்தின்கீழ் 1760 கிலோ மீற்றருக்கு பரவலாக மணல் இடுவதும், மேற்பரப்பினை சீர்செய்வதும் யும் 1997ம் ஆண்டு முடிவில் ரூ. 875 மில்லியன் செலவில் நிறைவு செய்யப்பட்டது. கண்டி துணைப்பாதையின் நிலை 1 இற்கான நிருமாண வேலைகள் 1997ல் முற்றுப் பெற்றதோடு நிலை 11 இன் நிருமாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. றாகமையில் உள்ள பிரதான புகையிரத பாதைக்கு குறுக்கான மேம்பால வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்ததோடு இத்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 200 மில்லியனாகும். பெருந் தெருக்களை நிருமாணிப்பதற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியினை பெறும் நோக்கில் தென்மாகாண பெருந் தெருக்கள் செயற்றிட்டத்திற்கான சாத்திய வள ஆய்வுகள் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கொழும்பு - கட்டுநாயக்க கடுகதி வீதி தொடர்பான சாத்திய வள ஆய்வு, சூழல் தாக்க ஆய்வு என்பன பூர்த்தி செய்யப் பட்டிருக்கின்றது. இச்செயற்றிட்டம் கட்டிதொழிற் படுத்தி உடமையாக்கிக் கொள்/ கட்டி தொழிற் படுத்தி மாற்றல்செய் திட்டங்களாக செயற்படுத்தப் படவிருக்கிறது.

## பயணிகள் போக்குவரத்து

1997ம் ஆண்டு காலப்பகுதியில் பயணிகள் போக்குவரத்து துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படாத போதிலும், பயணிகள் போக்குவரத்து துறையின் தொழிற்பாட்டு அளவினை, மீளமைத்தல் மற்றும் இயலளவை விரிவாக்கம் செய்வதன் ஊடாக மேம்படுத்தும் நோக்கில் உறுதியான கடப்பாடொன்று இவ்வாண்டுகாலப் பகுதியில் அவதானிக்கப்பட்டுள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 1996ம் ஆண்டு 30 இலக்க சட்டத்திற்கு (திருத்தம்) அமைய பிராந்திய போக்குவரத்து கம்பனிகளின் (கொத்தணி கம்பனிகள்) உருவாக்கம் 1997ம் ஆண்டுகாலப் பகுதியில் முற்றுப்பெற்றது. இதன்படி 93 மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து கம்பனிகள், 11 பிராந்திய போக்குவரத்து கம்பனிகளாக கொத்தணி முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பிராந்திய போக்குவரத்து கம்பனிகளுக்கு அளவுக்கான வினைத்திறனில் இருந்து நன்மையை பெற்றுக் கொள்கின்ற வேளையில், குறிப்பிட்ட பிராந்தியங் களில் சிறந்த ஒன்றிணைக்கப்பட்ட சேவை வலையமைப்பை தொழிற்படுத்துவதற்கும், மற்றும் முகாமை, பயிற்சி மற்றும் பேணல் ஆகியவற்றில் மூலவளங்களை பகிர்ந்து கொள்வதற்கும், இயலுமாக வுள்ளது. பிராந்திய போக்குவரத்து கம்பனிகளின் உருவாக்கம் பற்றிய புதிய முறைபற்றி முழுமையான அளவீட்டினை மேற்கொள்வதற்கு ஆண்டின் இறுதிப்பகுதி வரை காத்திருக்க வேண்டும். தனியார் துறை பேருந்து தொழிற்பாட்டாளர்கள் தாங்களாகவே கம்பனிகளை உருவாக்கிக் கொள்ளவேண்டுமென மேற்சொன்ன சட்டம் வலியுறுத்துகின்றதோடு இக்கம்பனிகள் ஒவ்வொன்றும் இத்தேவைக்காக வர்த்தமானி அறிவித்தல் திகதியில் இருந்து 5 ஆண்டுகளுக்குள் குறைந்த பட்சம் 50 பேருந்துகளை யாவது உடமையாகக் கொண்டிருக்க வேண்டும். வர்த்தமானி அறிவித்தல் காலக் கிரமத்தில் வெளியிடப்படும். எவ்வாறாயினும் இதற்கொரு

முன்நிபந்தனையாக தாழ்ந்த கூரையுடை பேருந்துகள் மற்றும் குறைந்த ஆசனவசதி கொண்ட பேருந்துகளுக்கு உரிமம் வழங்கப்படாமை போன்றன மேற்கொள்ளப்பட்டன.

1996 யூலையில் இருந்து செயற்பாட்டுக்கு வந்த 20 சதவீத பேருந்து கட்டண அதிகரிப்புக்கும் மற்றும் தீர்வைச் சலுகைகள், கொடுகடன் மற்றும் குத்தகை வசதிகள் என்பவற்றின் ஊடாக வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் என்பவற்றிற்கு தனியார் முதலீட்டாளர்கள் சாதகமாக நடந்து கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் இயக்குவலுப் பொறியில் முதலீடு செய்தல், புகையிரதப் பாதை பேணல் மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடு என்பவற்றின் நீடித்த குறைபாடு காரணமாக புகையிரதப் பகுதியின் மந்தமான செயலாற்றம் 1997ம் ஆண்டு காலப்பகுதியிலும் தொடர்ந்தது.

## பேருந்துப் போக்குவரத்து

மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்துக் கம்பனிகள்/பிராந்திய போக்குவரத்து கம்பனிகள் என்பவற்றின் செயற்பாட்டு அளவு 1997 காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதான காரணம் பயணிகளை கொண்டு செல்வதற்கான செயற்திறன் கொண்ட பேருந்து தொகுதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். ஒரு நாளுக்கான சேவைக்கிடப்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை 1996 இல் 4716 ஆகவிருந்து 1997ல் 4487 ஆக வீழ்ச்சியடைந்தது. 1996ம் ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கப்பட்ட 272 புதிய பேருந்துகளுடன் ஒப்பிடும் போது 1997ம் ஆண்டுகாலப் பகுதியில் பிராந்திய போக்குவரத்து கம்பனியின் ஊர்தி தொகுதியில் 460 புதிய பேருந்துகள் சேர்க்கப்பட்டன. இவ்வாண்டுகாலப்பகுதியில் தொழிற்படா நிலையில் இருந்த சில பேருந்துகள் தனியார் துறையினருக்கு விற்கப்பட்டன. நேர அட்டவணையை ஒழுங்காக வைத்திருப்பதற்கும் பொதுமக்களுக்கு நியாயமான அளவு திருப்திகரமான பேருந்து சேவைகளை வழங்குவதற்கும் பிராந்திய போக்குவரத்து கம்பனிகளுக்கு செயற்றிறன் கொண்ட 6275 பேருந்து தொகுதிகள் தேவைப்படுகின்றன.

1997இல் பிராந்திய போக்குவரத்து கம்பனியின் தொழிற்பட்ட கிலோ மீற்றர் அளவு 335 கிலோ மீற்றருக்கு 3.6 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது. அதே போக்கினை பிரதிபலிக்கும் வகையில் பயணிகளுக்கான கிலோ மீற்றர் அளவும் 1996ல் ஏற்பட்ட 4.5 சதவீத அதிகரிப்பிற்கு எதிராக 1997 இல் 18,902 மில்லியன் கிலோ மீற்றருக்கு 6.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பிராந்திய போக்குவரத்து கம்பனிகளின் மொத்த வருமானம் ரூ. 4897 மில்லியனாக இருந்ததோடு அதில் ரூ. 4585 மில்லியன் பிரயாணிகளிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்களாகும். ஊதிய மற்றும் பேணல் செலவுகள் அதிகரித்ததன் காரணமாக தொழிற்பாட்டு செலவுகள் ரூ. 6471 மில்லியனுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்து முன்னைய ஆண்டைப் போலவே இலாபமற்ற வீதிகளில் பேருந்து சேவைகளை நடாத்துவதற்காகவும் பாடசாலை சிறார்களுக்கு பருவகால பயணச் சீட்டுக்களை சலுகை விலையில் வழங்குவதற்ககாவும் பிராந்திய போக்குவரத்து கம்பனிகள் அரசாங்கத்திடமிருந்து ரூ. 360 மில்லியனை மானியமாக பெற்றுக் கொண்டன. இதன்படி பிராந்திய போக்குவரத்துக் கம்பனிகளின் தொழிற்பாட்டு இழப்பு 1997 இல் 44 சதவீதத்தால் ரூ.1214 மில்லியனுக்கு விரிவடைந்தது.

1996 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஓரளவு சொகுசு பேருந்து சேவைக்கு மேலதிகமாக, தனிப்பட்ட வாகன பாவனையாளர்களை இந்த பேருந்து சேவையை பயன்படுத்த ஈர்த்துக் கொள்ளும் நோக்கில் கொழும்பில் வாகன நெரிசலை கட்டுப்படுத்துவதற்காக 1997ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஒற்றைக் கட்டணம் கொண்ட சொகுசு பேருந்து சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 1996 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஓரளவு சொகுசு பேருந்து சேவை 1997 காலப்பகுதியில் மேலும் விரிவாக்கப்பட்டதோடு ஆண்டிறுதியில் 230 பேருந்துகள் சேவையை வழங்கிக் கொண்டிருந்தன. இந்த பேருந்து சேவைகள் குறிப்பாக பெருமளவு பயன்படுத்தப்படும் நேரங்களில் பயணிகள் போக்குவரத்தின் அழுத்தத்தை இலகுபடுத்துவதற்கு பெரிதும் உதவின.

1997 இல் பயணிகள் போக்குவரத்துதுறையில் தனியார் துறையினரின் பங்கேற்றல் சிறிதளவு மேம்பாடடைந்தது. அனைத்து மாகாண சபைகளினாலும் (வடகிழக்கு மாகாணசபை தவிர்ந்த) மற்றும் தேசிய போக்குவரத்து கழகத்தினாலும் தனியார் துறை பேருந்து தொழிற்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 1997இல் 12,776 ஆக 19 சதவீதத்தினால் அதிகரித்தது. வழங்கப்பட்ட மொத்த அனுமதிப் பத்திரங்களில் 5422 அனுமதிப் பத்திரங்கள் மேல் மாகாண சபையினால் வழங்கப்பட்டிருந்தது. 1997 இல் மாகாண சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பேருந்துகளின் ஆசன இயலளவு 337,028 இற்கு 24 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.

இதேவேளையில், மாகாணங்களில் உள்ள பேருந்து உடமையாளர்களின் எண்ணிக்கை 1996இன் 8227ல் இருந்து 1997 இல் 8018 ஆக வீழ்ச்சியடைந்தமை உடமையானது தனி உடமையாளர்களிடமிருந்து தொகுதி உடமையாளர்களுக்கு படிப்படியாக மாற்றப்பட்டதனை சுட்டிக் காட்டுகின்றது. இது ஒரு வரவேற்கத்தக்க அபிவிருத்தியாகும், ஏனெனில் இது பேருந்து தொழிற்பாட்டின் நலன்புரிச் செலவுகளை குறைப்பதோடு அதிகார சபைகளினால் கண்காணிப்பு செய்தலையும் இலகுபடுத்துகின்றது.

நாட்டின் பயணிகள் போக்குவரத்து சேவையினை வலுப்படுத்தும் நோக்கில் 1997 காலப்பகுதியில் தேசிய போக்குவரத்து கழகம் பல நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக அமுல்படுத்தியது. திலகரத்ன ஆணைக்குழுவின் சிபார்சினை அடிப்படையாகக் கொண்டு 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய போக்குவரத்து கழகத்தினால் கொத்தணி கம்பனிகளின் உருவாக்கம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. சேவையின் தரத்தினை மேம்படுத்தம் நோக்கில் மாகாண போக்குவரத்து அதிகாரசபை மற்றும் உலகவங்கியின் உதவி என்பவற்றின் கூட்டிணைப்புடன் தேசிய போக்குவரத்து கழகத்தினால் தனியார் பேருந்து நடத்துனர்களுக்கு பயிற்சியளிக்கு முகமாக அனைத்தையும் உள்ளடக்கிய செயற்றிட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 1997 காலப்பகுதியில் மொத்தமாக 2876 சாரதிகளுக்கும், நடத்துனர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய போக்குவரத்து கழகத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்ட நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இலாபமற்ற கிராமிய பேருந்து வழிகள் தனியார்துறை பேருந்து தொழிற்பாட்டாளர்களுக்கு போட்டித்தன்மையான விலைக்கோரல் அடிப்படையில் வழங்கப்பட்டன. 1997ம் ஆண்டு காலப்பகுதியில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐந்து கிராமிய வழிகள் வழங்கப்பட்டதோடு மற்றும் 19 ஏனைய வழிகள் விலைக் கோரலுக்காக இனங்காணப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக சிக்கனமற்ற கிராமிய பாதைகளில் பேருந்து சேவைகளை வழங்குவதற்காக தேசிய போக்குவரத்து கழகம் ரூ. 200 மில்லியனை பிராந்திய போக்குவரத்து கம்பனிகளுக்கு பகிர்ந்த

**அட்டவணை 5.6**

**போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள்**

| விடயம் | அலகு | 1995 | 1996 | 1997(அ) | சதவீத மாற்றம் 1996 | சதவீத மாற்றம் 1997(அ) |
|---|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் | | | | | | |
| தனியார் பயணி வண்டிகள் (ஆ) | எண்ணிக்கை | 1,653 | 1,364 | 1,999 | (17.5) | 46.6 |
| தனியார் ஊர்திகள் (இ) | ” | 30,046 | 31,921 | 31,338 | 6.2 | (1.8) |
| உந்து ஈருளிகள் | ” | 34,207 | 31,955 | 36,755 | (6.6) | 15.0 |
| சரக்கு கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | ” | 7,293 | 5,660 | 5,561 | (22.4) | (1.7) |
| நில ஊர்திகள் | ” | 9,294 | 8,340 | 7,652 | (10.3) | (8.2) |
| தனியார் சொகுசு வண்டிகள் | ” | 47 | 115 | 60 | 144.7 | (47.8) |
| ஏனையவை | ” | 30 | 65 | 1616 | 283.3 | (47.8) |
| 2. இலங்கைப் புகைவண்டிப் பகுதி | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் | மில்லியன் | 8,541 | 7,705 | 7,734 | (9.8) | 0.4 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் | ” | 3,321 | 3,241 | 3,342 | (2.4) | 3.1 |
| சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் | ” | 136 | 107 | 92 | (21.3) | (14.0) |
| மொத்த வருவாய் | ரூ.மில்லியன் | 947 | 938 | 1,030 | (1.0) | 9.8 |
| நடைமுறைச் செலவு | ” | 1,735 | 1,826 | 1,742 | 5.2 | (4.6) |
| தொழிற்பாட்டு இழப்பு | ” | 788 | 887 | 712 | 12.6 | (19.7) |
| மூலதனச் செலவு | ” | 3,117 | 4,624 | 4,187 | 48.3 | (9.5) |
| 3. பிரதேச பேருந்துக் கம்பனிகள் | | | | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் | மில்லியன் | 353 | 348 | 335 | (1.4) | (3.6) |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் | ” | 19,390 | 20,259 | 18,902 | 4.5 | (6.7) |
| மொத்த அரசிறை | ரூபாமில்லியன் | 4,702 | 5,170 | 5,257 | 1.0 | 1.7 |
| தொழிற்பாட்டுச் செலவு | ” | 5,337 | 6,012 | 6,471 | 12.6 | 7.6 |
| தொழிற்பாட்டு இழப்பு | ” | 635 | 842 | 1,214 | 32.6 | 44.2 |

(அ) தற்காலிகமானவை.

(ஆ) பிரதேசப் பேருந்துக் கம்பனிகளினாலும், தனியார் துறையினாலும் பதிவு செய்யப்பட்ட பேருந்துக்களையும் உள்ளடக்கும்.

(இ) இரட்டை நோக்கத்திற்கான ஊர்திகளையும் உள்ளடக்கும்.

மூலங்கள்: உந்து ஊர்திகள் திணைக்களம்
இலங்கைப் புகைவண்டிப் பகுதி
இலங்கைப் போக்குவரத்துச் சபை
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

ளித்துள்ளது. ஊனமுற்ற ஆயுதப்படை ஆளனியின ருக்கும் பொலிஸ் ஆளனியினருக்கும் இலவச போக்குவரத்து வசதிகளை செய்து கொடுப்பத ற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப் பட்டது.

## புகைவண்டிப் போக்குவரத்து

1997 இல் இலங்கை புகையிரதப் பகுதியின் செயலாற்றம் தொடர்ந்தும் திருப்தியற்றதொன்றா கவே இருந்தது. 1997இல் தொழிற்பட்ட கிலோமீற்றர் அளவு 7.7 மில்லியனாக மாறாது இருக்கையில் 1996 இன் 2 சதவீழ்ச்சிக்கு எதிராக பயணிகள் கிலோமீற்றர் அளவு 3342 மில்லியன் கிலோ மீற்றருக்கு 3.1 சதவீத்தினால் அதிகரித்தது. இலங்கைப் புகையிரதப் பகுதியின் சரக்குப்போக்குவரத்து 1997 இல் 14 சதவீத குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக்காட்டி தொடர்ந்தும் அதன் சந்தைப் பங்கை இழந்தது.

பல தசாப்தங்களுக்கு முன்பு பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தில் இலங்கை புகையிர தப் பகுதி மிக முக்கிய பங்கினை வகித்தது. ஆனால் இன்று வேறு போக்குவரத்துச் சாதனங்க ளின் போட்டியின் காரணமாகவும் மற்றும் இதன் தொழிற்பாட்டிற்குள் பலவித திறமையீனங்கள் கட்டியெழுப்பப் பட்டிருப்பதனாலும் இது முக்கியத் துவம் குறைந்த துறையாக மாறிவருகின்றது. முழு இலங்கை புகையிரதப் பகுதியையும் வர்த்தக உறுதித்தன்மை வாய்ந்த முயற்சியாக மாற்றும் நோக்கில் புனரமைப்பு மற்றும் மீளமைப்பு செய்வது மிக அத்தியாவசியமான தேவையாகும். அடிக்கடி தடம் புரளும் மற்றும் வேகவரையறைகளின் விதிப்புக்கும் காரணமாயிருந்த பயன்பாட்டு காலம் கடந்த பழைய புகையிரத உட்கட்டமைப்புக்களை தரமுயர்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் மேலதிக முதலீடு தேவைப்படுகின்றது. குறைந்து செல்லும் இயக்குவலுப் பொறித்தொகுதியின் நிலைமை தொழிற் பாட்டை தடைசெய்வதற்கும் மற்றும் அட்டவணைப் படுத்தப்பட்ட சேவைகள் இரத்து செய்யப்படுவதற்கும் காரணமாகின. பழமை வாய்ந்த மத்திய போக்குவரத்து கட்டுப்பாட்டு முறை மற்றும் தொடர்பூட்டல் முறை இலங்கை புகையிரதப் பகுதியின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு தடையாகவிருந்தன.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியி லும் இலங்கை புகையிரதப் பகுதியானது பிரயாணி களுக்கு மேலதிக சேவைகளை வழங்குவதற்காக அதன் தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்கு பலவித நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கொழும்பு/ பதுளை/ கொழும்பு வழியில் மேலதிக இரவு தபால் புகையிரதம் ஒன்று 1997 இல் அறிமுகப் படுத்தப்பட்டது. 1997 இன் இறுதிப் பகுதியில் மருதானையில் இருந்து றாகமை வரையான மூன்றாவது புகையிரத பாதையொன்று போக்குவர த்திற்காக திறந்துவிடப்பட்டன. ஆண்டுக்காலத்தில் ஏழு புதிய துணை புகையிரத நிலையங்களும் திறக்கப்பட்டது. நெருக்கடியை தவிர்க்கும் நோக்கு டன் சில நகர்புற சேவைகள் நீடிக்கப்பட்டிருந்த வேளையில் தூர இடங்களுக்கான பயணிகள் புகைவண்டியில் மேலதிக பெட்டிகள் இணைக்கப் பட்டன. இதேவேளையில், ஆண்டு காலப்பகுதியில் களனிப்பள்ளத்தாக்கு புகையிரதப் பாதையை அகலமாக்கும் வேலை அவிசாவளை வரை பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

இலங்கை புகையிரதப்பகுதியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல செயற்றிட்டங்களி னது முன்னேற்றத்தின் காரணமாக 1997 காலப் பகுதியில் இலங்கை புகையிரதப்பகுதியின் இயக்குவலுப் பொறியின் நிலைமை சிறிது முன்னேற்றம் கண்டது. கரைகடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தினால் நிதியிடப்பட்ட புகையிரத புனரமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் 6 வலுப்பொறிகள் சேவைக்கு விடப்பட்ட வேளையில் மீண்டும் இயக்கச் செய்வதற்கான நிகழ்ச்சி திட்ட த்தின் கீழ் 3 வலுப்பொறிகள் சேவைக்கிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக இந்திய தொடர் கடனின் கீழ் எம் 8 வகுப்பு 4 வலுப்பொறிகளை கொள்வனவு செய்து ஊர்திதொகுதியில் சேர்த்துக் கொள்ளப் பட்டது. புகையிரத உட்கட்டமைப்புக்களை மேம்படுத்து வதற்காக இலங்கை புகையிரத பகுதி பல்வேறு நிகழ்ச்சி திட்டங்களையும் மேற்கொண்டுள்ளது. பாணந்துறை மற்றும் களுத்துறையில் உள்ள இரண்டு புகையிரத பாலங்கள் திருத்தப்பட்டு போக்குவர த்திற்காக திறந்து விடப்பட்ட வேளையில் 3 புதிய பாலங்களின் நிருமாணம் ஆண்டுகாலப்பகுதி யில் தொடக்கி வைக்கப்பட்டது. கரைகடந்த பொருளா தார ஒத்துழைப்பு நிதியத்தினால் நிதியிடப்பட்ட புகையிரதப் பாதை புனரமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் காலி/ கண்டி மற்றும் றாகமை/நீர்கொழும்பு புகையிரத பாதைகளின் 75 சதவீதமான புத்தாக்க வேலைகள் முற்றுப் பெற்றுள்ளன. பாணந்துறையில் இருந்து களுத்துறை வரைக்குமான மற்றும் பொல் காவலையில் இருந்து றம்புக்கன வரைக்குமான சமாந்தர புகையிரத பாதையின் நிருமாணம் தொடக்கி வைக்கப்பட்டது.

பயணக் கட்டணங்கள் 1996 மார்சு முதல் 20 சதவீதத்தால் அதிகரிப்பட்டமையாலும்

மற்றும் பயணிகள் கிலோ மீற்றர் அளவின் சிறிதளவு அதிகரிப்பினாலும், 1997 இல் இலங்கை புகையிரதப் பகுதியின் வருமானம் 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இதேவேளையில் நடைமுறைச் செலவு ரூ. 1742 மில்லியனுக்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பேணல் செலவுகள் ரூ. 1079 மில்லியனுக்கு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே பிரதான காரணமாகும். இதன் விளைவாக 1997 இல் இலங்கை புகையிரத பகுதியின் தொழிற்பாட்டு இழப்பு ரூ. 712 மில்லியனுக்கு 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1997 இல் இலங்கை புகைவண்டிப் பகுதியின் மூலதன செலவு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூ. 4187 மில்லியனாக அமைந்தது. இதன் விளைவாக 1997 இல் மொத்த பற்றாக்குறை ரூ. 4579 மில்லியனுக்கு 13 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

## துறைமுகப் பணிகள்

1997 காலப்பகுதியில் துறைமுக பணிகளுக்கான கேள்வி தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கையாளலின் தற்போதைய இயலளவையும் மிஞ்சிச் சென்றுள்ளது. தற்போதைய உற்பத்தித் திறன் வீதங்களில் கொழும்பு துறைமுகம் ஆண்டுக்கு 1.6 மில்லியன் 20 அடிக்கு சமமான கொள்கலன் அலகுகளை கையாளுவதற்கான இயலளவை கொண்டிருந்தபோதிலும் அது 1997 இல் 1.7 மில்லியன் 20 அடிக்கு சமமான கொள்கலன் அலகுகளை கையாண்டுள்ளது. 1996 இல் பதிவு செய்த 29 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் கொள்கலன் கையாளல் 24 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. மொத்த கொள்கலன் கையாளலில் மாற்றிக் கப்பலேற்றல்

**அட்டவணை 5.7**

**துறைமுகப் பணிகளின் செயலாற்றம்**

| விடயம் | 1995 | 1996 | 1997(அ) | சதவீத மாற்றம் 1996 | சதவீத மாற்றம் 1997(அ) |
|---|---|---|---|---|---|
| 1. வருகை தந்த கலங்கள் (எண்ணிக்கை) | 3,612 | 3,857 | 4,088 | 7 | 6 |
| கொழும்பு | 3,277 | 3,467 | 3,627 | 6 | 5 |
| காலி | 69 | 84 | 57 | 22 | (32) |
| திருகோணமலை | 266 | 306 | 404 | 15 | 32 |
| 2. கையாளப்பட்ட மொத்தச் சரக்கு ('000 மெ.தொ.) | 19,517 | 22,722 | 26,832 | 16 | 18 |
| கொழும்பு | 17,414 | 20,885 | 25,117 | 20 | 20 |
| காலி | 237 | 236 | 182 | (0) | (23) |
| திருகோணமலை | 1,866 | 1,601 | 1,533 | (14) | (4) |
| 3. மொத்தக் கொள்கலன் போக்குவரத்து ('000 இ.ச.அ.) (ஆ)(இ) | 1,049 | 1,356 | 1,687 | 29 | 24 |
| கொழும்பு | 1,049 | 1,356 | 1,687 | 29 | 24 |
| 4. மாற்றி ஏற்றல் கொள்கலன் ('000 இ.ச.அ.)(ஆ) | 700 | 980 | 1,232 | 40 | 26 |
| கொழும்பு | 700 | 980 | 1,232 | 40 | 26 |
| 5. அரசிறை (ரூபா மில்லியன்) | 4,820 | 9,007 | 10,974 | 87 | 22 |
| கொழும்பு | 4,582 | 8,775 | 10,731 | 92 | 22 |
| காலி | 75 | 81 | 81 | 8 | (0) |
| திருகோணமலை | 163 | 151 | 162 | (7) | 8 |
| 6. செலவு (ரூபா மில்லியன்) | 5,461 | 6,551 | 8,194 | 20 | 25 |
| கொழும்பு | 5,129 | 6,188 | 7,807 | 21 | 26 |
| காலி | 128 | 150 | 152 | 17 | 2 |
| திருகோணமலை | 204 | 213 | 235 | 4 | 10 |
| 7. வரிக்கு முன்னான தேறிய இலாபம் (ரூபா மில்லியன்) | 1,360 | 2,456 | 2,780 | 81 | 13 |
| கொழும்பு | 1,453 | 2,587 | 2,924 | 78 | 13 |
| காலி | (53) | (68) | (72) | 28 | 5 |
| திருகோணமலை | (40) | (63) | (73) | 58 | 15 |
| 8. தொழில்நிலை (எண்ணிக்கை) | 16,492 | 17,476 | 19,033 | 6 | 9 |
| கொழும்பு | 14,851 | 15,589 | 17,101 | 5 | 10 |
| காலி | 779 | 841 | 831 | 8 | (1) |
| திருகோணமலை | 862 | 1,046 | 1,101 | 21 | 5 |
| 9. உற்பத்தியாக்கக் குறிகாட்டிகள் | | | | | |
| மணித்தியாலத்திற்கு பாரம்தூக்கி (மொத்தம்) | 14 | 18 | 20 | 29 | 11 |
| மணித்தியாலத்திற்கு பாரம்தூக்கி (தேறிய) | 15 | 23 | 26 | 53 | 13 |

மூலம் : இலங்கை துறைமுக மேலாண்மைச் சபை

(அ) தற்காலிகமானவை.

(ஆ) கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்திலேயே கையாளப்படுகின்றன.

இ. ச. அ. இருபது அடி சமமான கொள்கலன் அலகுகள்.

ஏறக்குறைய 75 சதவீதத்திற்கு வகை கூறியதோடு 1996 இல் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய 40 சதவீத வளர்ச்சிக்குப் பின்னர் மேலும் 26 சதவீத அதிகரிப்பை காட்டியது. கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பல்களின் எண்ணிக்கை 5 சதவீதத் தினால் அதிகரித்து 3627 ஆக இருக்கையில் கையாளப்பட்ட சரக்குகளின் மொத்த அளவு 1997 இல் 18 சதவீதத்தினால் உயர்ந்து 27 மில்லியன் மெற்றிக் தொன்னாக இருந்தது. இதேவேளையில் 1997ம் ஆண்டில் காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் சரக்குக் கையாளல் முறையே 23 சதவீதத்தினாலும் 4 சதவீதத்தினாலும் குறைவடைந்தது.

ஆண்டுக் காலத்தில் கொழும்பு துறைமுக த்தின் இயலளவு வரையறைகள் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபை கடுமையான இடர்களை எதிர்நோக்கியது. 1997 இல் துறைமுகம் தனது முழு இயலளவையும் பயன்படுத்தி தொழிற் பட்டுக் கொண்டிருந்த போதிலும் கொழும்பு துறைமுகத்திற்கு வந்தடைந்த சரக்கு கப்பல்களின் துறைமுகத்தில் இருந்து வந்து திரும்பும் காலம் குறிப்பிடத்தக்க வீதத்தில் அதிகரித்தது. முதன்மை கப்பல்கள், துணைக் கலம்கள் மற்றும் மரபுவழிக் கலம்களின் துறைமுகத்திற்கு வெளியே தரித்திருக்கும் சராசரி காலம் 1996 இல் முறையே 6.4, 14.2 மற்றும் 24.9 மணித்தியாலங்களில் இருந்து 1997 இல் 6.9, 24.6 மற்றும் 28.5 மணித்தியாலத்திற்கு அதிகரித்த வேளையில் இவ்வகையான கப்பல்களின் இறங்கு துறையில் தங்கும் நேரம் முறையே 15.6, 29.8 மற்றும் 114.1 மணித்தியாலங்களிலிருந்து முறையே 27.0, 47.4 மற்றும் 120.1 மணித்தியால ங்களுக்கு அதிகரித்துள்ளது. துறைமுகத்தின் இயலளவை அதிகரிப்பதன் மூலம் இவ்வாறான இடர்களை குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன. மணித்தியால மொன்றுக்கான மொத்த பாரந்தூக்கி நகர்வுகள் 1996 இன் 18 இலிருந்து 1997 இல் 20 ஆக அதிகரித்தது. மணித்தியால மொன்றுக்கான தேறிய பாரந்தூக்கி நகர்வுகள் 1996 இன் 23 இலிருந்து 1997 இல் 26 ஆக அதிகரித்தது. துறைமுகபணிகளுக்கான உறுதியான வளர்ச்சியடைந்துவரும் கேள்வியை சமாளிக்கும் நோக்கில் 1997 இல் பல குறுங்கால செயற்றிட்ட ங்களும் தொடங்கப்பட்டன. கரைகடந்த பொருளா தார ஒத்துழைப்பு நிதியத்தின் உதவியுடன் ஆண்டொன்றுக்கு 100,000, 20 அடிக்கு சமமான பொதுச்சரக்கு கொள்கல அலகுகளை கையாளுவத ற்கான வடமுனை அபிவிருத்தி தொடக்கி வைக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்திற்கான மொத்தச் செலவு 15 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. கரைகடந்த பொருளா தார ஒத்துழைப்பு நிதியத்தினால் நிதியிடப்பட்ட 40 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் செலவில் ஜயா கொள்கலன் இறங்கு துறைக்கு 3 கொள்கலன் இறங்குதுறையை சேர்ப்பதற்கும் மற்றும் 6 மாற்றி யேற்றும் பாரந்தூக்கிகளை அமைப்பதற்குமான வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தற்போதைய 5 கொள்கலன்களில் இருந்து வெற்றுக் கொள்கலன்களை அடுக்கி வைக்கும் வசதிகளை 8 ஆக அதிகரிப்பதற்கு வசதியளிப்பதோடு ஆண்டொன்றுக்கு 300,000 இருபது அடிக்கு சம மான கொள்கலன் அலகுகளை கையாள்வதற்கான தளஇயலளவு இதன் மூலம் அதிகரிக்கின்றது. கொழும்பு துறைமுகத்தில் பொதுச் சரக்கு கையாளலில் உள்ள அழுத்தத்தை குறைக்கும் நோக்கில் காலி மற்றும் திருகோணமலை துறை முகங்களை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

துறைமுக உற்பத்தியாற்றல் மற்றும் செயற் றிறன் என்பன போட்டித் தன்மையுடைய மட்டங்க ளுக்கு அதிகரிக்கப்பட்டு துறைமுக இயலளவு போதுமான அளவு விரிவாக்கப்படுமிடத்து இப்பிராந்தியத்தில் முதன்மை கப்பற்பணி நிலையமாக உருவாவதற்கான அதிஉயர் உள்ளார்ந்த ஆற்றலை இலங்கை கொண்டுள்ளது. துறைமுக பணிகளுக்கான இயலளவு விரிவாக்கம் மற்றும் கேள்வி அதிகரிப்புக்கிடையில் நேரடி தொடர்பு காணப்படுவதாக கொழும்பு துறைமுக த்தின் கடந்தகால செயலாற்றங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பிராந்தியத்தில் உள்ள அண்மிய துறைமுகங்கள் துரிதமாக விரிவாக்கம் செய்யப் படுதல் மற்றும் பிராந்தியத்தில் கப்பற் சேவைக ளுக்கான கேள்வியை ஈர்த்துக் கொள்ள போட்டி யிடல் போன்ற இவ்வாறான சூழ்நிலையில் திட்டமிட்ட துறைமுக விரிவாக்க செயற்றிட்டங்களை துரிதமாக நிறைவேற்ற மேலும் காலம் தாழ்த்தாமல் இலங்கை உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதன் நோக்கில் துறைமுக பணிகளை விரிவாக்க அரசு பல திட்டங்களை உருவாக் கியுள்ளது. அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கை தேசிய துறைமுகங்கள் மற்றும் கப்பற் பணிகள் கொள்கையானது காலி, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஆகிய நவீனமயப்படுத்தப் பட்ட துறைமுகங்கள் மற்றும் ஒலுவில், அம்பாந் தோட்டை புதிய துறைமுகங்கள் என்பவற்றின் ஆதரவுடன் கொழும்புத் துறைமுகம் சுறுசுறுப்புமிக்க மையத்துறைமுகமாகச் செயற்பட்டு இலங்கை

சிறப்புக்குறிப்பு 3

## இலங்கையின் தேசிய துறைமுகங்களும் கப்பற்படுத்தும் கொள்கையும்

அரசாங்கத்தினால் 1997 இல் இலங்கையின் தேசிய துறைமுகங்களும் கப்பற்படுத்தல் கொள்கையும் தயாரிக்கப்பட்டது. துறைமுக உட்கட்டமைப்பிலான விரிவாகத்தினூடாக முக்கியமாக நவீனமயப்படுத்தப்பட்ட காலி, ஒலுவில், அம்பாந்தோட்டைத் துறைமுகங்களால் ஆதரவு வழங்கப்பட்ட முக்கிய மையமாக கொழும்புத் துறைமுகம், விளங்கி தெற்காசியாவில் முதன்மைக் கப்பற்படுத்தும் நிலையமாக இலங்கை தோற்றம்பெறும் என, இக் கொள்கை எதிர்பார்க்கிறது. துணைப்பணிகளின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்குமான வரைச்சட்டமொன்றினையும் கடல்சார் பயிற்சிகளின் வழங்கல், தேசிய வணிக கப்பற்படுத்தல் தொகுதியின் அபிவிருத்தியும் இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனத்திற்கு புத்துயிர் அளித்தல் துறைமுக அபிவிருத்தியை நிதியிடும் புதிய வழிமுறைகள் இலங்கைத்துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவ மீளமைப்பு என்பவற்றையும் இது வழங்குகிறது. கடற் சுற்றாடல் மற்றும் கடலில் உயர்பாதுகாப்பு என்பனவற்றுக்கான இலங்கையின் கொள்கையும்* இலங்கையின் தேசிய துறைமுகங்கள் மற்றும் கப்பற்படுத்தும் கொள்கையில் வலியுறுத்தப்பட்டது.

கடற்கரைகளுக்குப் பின்னணியில் உள்ள இலங்கையைச் சுற்றியுள்ள பிராந்திய பொருளாதாரங்களின் விரைந்த வளர்ச்சியின் நோக்கில் பன்னாட்டு கடற்பயண வழிகளுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கொழும்புத்துறைமுகம் இப் பிராந்தியத்தின் மைய துறைமுகமாக உருவாவதற்கான அதிகூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. 1997 இல் கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் கையாளல் 1.7 மில்லியன் இருபது அலகுகளுக்குச் சமமான பிரிவுகளாக 2005 ஆம் ஆண்டளவில் 2.3 – 3.6 மில்லியன் இஅசபி ஆகவும் 2015 ஆம் ஆண்டளவில் 3.8 – 6.7 மில்லியன் இஅசபி ஆகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்புத் துறைமுகத்தின் தற்போதைய இயலளவு ஆண்டொன்றுக்கு 1.6 மில்லியன் இஅசபி ஆகும். எனவே ஏனைய துறைமுகங்களையும் துணைப் பணிகளையும் கணிசமான அளவு அபிவிருத்தி செய்யும் வேளையில் கொழும்புத் துறைமுகத்தையும் காலி துறைமுகத்தையும் மையத் துறைமுகங்களாகும் போட்டித் தன்மைமிக்க மாற்றிக கப்பலேற்று மையங்களாகவும் அபிவிருத்தி செய்து கப்பல் கையாளலில் இலங்கையின் இயற்கையான மற்றும் சிறப்பு நிலைமையினை வலுப்படுத்துவதற்கு இலங்கையின் துறைமுக மற்றும் கப்பற்படுத்தல் கொள்கை எதிர்பார்க்கின்றது.

1. கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் கையாளும் வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

   - குறுகியகால உபாயமொன்றாக தற்போதைய ஆண்டொன்றுக்கான 230,000 இசஅபி இற்கெதிராக 1மில்லியன் இசஅபி ஐ கையாள்வதற்கு கட்டு தொழிற்படுத்து சொந்தமாக்கு / கட்டு தொழிற்படுத்து மாற்றல் செய் (கதொசொ/கதொமா) அடிப்படையில் குயீன் எலிசபெத் இறங்கு துறை (குஎஇ) அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. இத்துடன் முழுத் தொகுதி மற்றும் பகுதியளவு கொள்கலன் சரக்குக் கையாளல் வசதிகளுடன் வடக்கு அலை இடை கரை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

   - நீண்டகால உபாயமொன்றாக, ஆண்டொன்றுக்கு 4.9 மில்லியன் இசஅபி இயலளவைக் கொண்ட குஎஇ இற்கு அருகில் உள்ள இடப்பரப்பில் ஓர் ""கொழும்பின் புதிய தென் துறைமுகம் கட்டிதொழிற்படுத்தி உடைமையாக்கல்/ கட்டிதொழிற்படுத்தி மாற்றல் செய்தல் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. இச் செயற்றிட்டத்தின் 11ஆம் கட்டத்தில் மாற்றுகப்பலேற்றல் வசதிகளுக்கான மேலதிக கேள்வியை ஈடுசெய்வதற்கு புதிய வடதுறைமுகம் ஒன்றினை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

   - தேவையானபோதும், சாத்தியமான போதும் அரசதுறை கட்டிதொழிற்படுத்தி மாற்றல் செய்யும் அடிப்படையில் துறைமுக உட்கட்டமைப்பின் நிதியிடலுக்கும் தொழிற்பாட்டிற்கும் தனியார்துறை ஊக்குவிக்கப்படவிருக்கிறது.

2. ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி

   - கொழும்புத் துறைமுகத்தில் மரபு ரீதியான

---

*இலங்கையின் தேசிய துறைமுகங்களும் கப்பற்படுத்தல் கொள்கையும் கப்பற்படுத்தல் துறைமுகங்கள், புனரமைப்பு, மீள்கட்டுமான அமைச்சு – 1997

சரக்குக் கையாளல் வசதிகளையும் சரக்கு மேடைக்கு வெளியேயான வசதிகளையும் மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தேசிய துறைமுகங்கள் கப்பற்படுத்தும் கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- தேசிய துறைமுகங்கள் கப்பற்படுத்தும் கொள்கை காலித் துறைமுகத்தை ஓர் மையத் துறைமுகமாகவும் ஆண்டொன்றுக்கு 1 மில்லியன் இ.அ.ச.பி ஐ கையாள்வதற்கு இயலச் செய்யும் பொருட்டு கட்டி தொழிற்படுத்தி மாற்றல் செய்தல் அடிப்படையில் 3 மேடைகளுடன் காலியில் புதிய துறைமுகமொன்றை அமைப்பதற்கும் எதிர்பார்க்கின்றது.

- சரக்குக் கையாளல் கப்பற்படுத்தல் மற்றும் சுற்றுலா சார்ந்த நடவடிக்கைகளுடன் பல் நோக்கு துறைமுகமொன்றாக திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தியும் விரிவாக்கமும் கொள்கை வரைச்சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- ஒலுவிலில் ஓர் புதிய வர்த்தக துறைமுகத்தினதும் அம்பாந்தோட்டையில் எண்ணெய் மற்றும் உலர் சரக்கு கையாளும் ஓர் துறைமுகத்தினதும் நிருமாணம் தேசிய துறைமுகங்கள் கப்பற்படுத்தும் கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. துறைமுக உற்பத்தியும் வினைத்திறனும்

- உற்பத்தித் திறனை மேம்படுத்தல், துணைக் கல வலையமைப்பை மேம்படுத்தல், சந்தைப் படுத்தல் மற்றும் ஊக்குவிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் என்பனவற்றின் மூலம் முதன்மை மற்றும் துணைக்கலத் தொழிற் பாட்டாளர்கள் கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுவார்கள்.

- துறைமுகச் செயலாற்றத்தின் ஓர் அதிகரித்த மட்டத்தை எய்தும் நோக்கில் துறைமுக வினைத் திறனையும் முகாமைத் துவத் திறமையையும் மேம்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை தேசிய துறைமுகங்கள் கப்பற்படுத்தும் கொள்கை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இதைக் கருத்திற் கொண்டு திட்டமிடல் மற்றும் பேணலை வலுப்படுத்தல், பயிற்சியை மேம்படுத்தல் பொதுப் பணிகளுக்காக நியாயமான வசதிகளை வழங்குதல் செலவுப்பயன்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றல் என்பவற்றுக்காக கொள்கைகள் வகுக்கப் படவுள்ளன. இத்துடன், இலங்கைத் துறைமுக அதிகார சபையின் துணை நிறுவனங்களால் முக்கிய துறைமுகப் பணிகளை தொழிற்படுத்தவதுற்கும், தனியார் துறையால் ஏனைய பணிகள் வழங்கப் படுவதற்கும் முன் மொழியப்பட்டுள்ளது. நியாயமான போட்டி மற்றும் தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கும் சுயாதீன துறைமுக ஒழுங்குபடுத்துநர். ஒருவரின் நியமனமும் கொள்கை அறிக்கையில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

4. துணைப் பணிகள்

கப்பல் திருத்தல், கப்பல் கட்டல், கப்பல் உடைத்தல் பன்னாட்டு ஒருங்கிணைப்பு மாற்றுக் கப்பலேற்றல், வர்த்தகம் தொகையளவிலான கப்பற்படுத்தல், கப்பலுக்கான எரிபொருள் நிரப்பல், கரைகடந்த வழங்கல், உல்லாசக் கப்பற் பயணம், கடல்சார் நடவடிக்கைகள், கப்பல் முகாமைத்துவம் போன்றனவற்றில் தனியார் துறையின் ஈடுபாடும் தேசிய துறைமுகங்கள் கப்பற் படுத்தும் கொள்கையில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

தெற்காசியாவிலே முதன்மை கப்பற்பணி கேந்திர நிலையமாக உருவாவதை எதிர்பார்க்கின்றது. பிராந்தியத்தின் சுறுசுறுப்புமிக்க துறைமுகம் என்றவகையில் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்கி கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட பல முன்மொழிவுகளை அமுல்படுத்துவது சம்பந்தமாக ஏற்கனவே தீவிர பரிசீலனையில் உள்ளது. ஆண்டுக்கு இருபது அடிக்கு சமமான கொள்கல அலகுகளை கையாளும் இயலுமையை 1 மில்லியனாக உயர்த்துவதற்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிடப்பட்ட செலவில் கட்டி தொழிற்படுத்தி சொந்தமாக்குதல்/ கட்டி தொழிற்படுத்தி மாற்றல் செய்தல் என்ற அடிப்படையில் குயீன் எலிஸபத் கப்பல்துறையின் அபிவிருத்தி விரைவில் ஆரம்பமாகும். அடுத்த

தசாப்தத்தில் எதிர்பார்க்கப்படும் குறிப்பாக மாற்றிக் கப்பலேற்றும் துறைமுக பயணிகளுக்கான அதிகரித்த கேள்வியினை எதிர்கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள நீர்பிரிமேடுகளின் கட்டுமானத்தையும் உள்ளடக்கி தென்கொழும்பு துறைமுகம் மற்றும் வடகொழும்பு துறைமுகம் என்பவற்றின் அபிவிருத்திக்கான செயற்றிட்டங்களே மிகப் பெரியனவாகும். கொழும்பு துறைமுகத்தில் கையாளப்படும் இருபது அடிக்கு சமமான கொள்கல அலகுகளின் அளவு 2005 ஆம் ஆண்டில் 2.3 மில்லியனுக்கும் 3.6 மில்லியனுக் குமிடையில் இருக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ள தோடு இது 2015ம் ஆண்டில் கிட்டத்தட்ட 3.8 மில்லியனுக்கும் 6.7 மில்லியனுக்கும் இடையில் இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இக்கேள் வியை பூர்த்தி செய்யும் நோக்கிலும், இலங்கையின் சாதகமான அமைவிடத்தின் முதன்மையினால் இத்துறையில் இலங்கை கொண்டிருக்கும் வாய்ப்புக்களை முழுமையாக பயன்படுத்தும் நோக்கிலும் திட்டமிட்ட துறைமுக விரிவாக்க செயற்றிட்டங்களை மேலும் தாமதிக்காது ஆரம்பிக்க வேண்டும். காலி துறைமுகம் மாற்றி கப்பலேற்றும் மற்றும் உள்நாட்டு கொள்கலப் படுத்திய சரக்கு பரிமாறல் அத்தோடு மரபுரீதியான சரக்கு பரிமாறல் போன்ற பல்நோக்கங் கொண்ட துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. கட்டி தொழிற்படுத்தி சொந்தமாக்கல்/ கட்டி தொழிற் படுத்தி மாற்றல் செய்தல் என்ற அடிப்படையில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு புதிய முன்மொழிவுகளை கோருவதற்கு முடிவெடுக்கப் பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத் தில் ஒலுவில் புதிய துறைமுக அபிவிருத்தி சம்பந் தமாக சாத்திய ஆய்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. எண்ணெய் மற்றும் உலர் சரக்கு கையாளலுக்காக ஒரு புதிய துறைமுகம் அம்பாந்தோட்டைக்கு அருகாமையில் கட்டுவதனையும் அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளது.

துறைமுகக் கட்டணங்களின் பாரிய அதிகரிப் பின் காரணமாக இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் மொத்த வருமானம் முன்னைய ஆண்டின் 87 சதவீத அதிகரிப்புக்கு பின்னர் 1997 இல் 22 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு துறைமுகக் கட்டணங்களை கணிசமாக அதிகரித்தமையே காரணமாகும். செலவினங்களின் அதிகரிப்பு 25 சதவீதமாக இருந்தது. இதன் விளைவாக 1997 இல் இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் வரிகழிக்க முன்னுள்ள தேறிய இலாபம் 13 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 2780 மில்லியனாக அமைந்தது. துறைமுக சேவைகளில் தொழில் வாய்ப்புக்கள் 9 சதவீதத்தில் உயர்ந்திருந்தது.

## 5.7 நீர்ப்பாசனமும் குடியேற்றத் திட்டங்களும்

நாட்டில், அரசினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெப்போதுமில்லாத மிகப் பல்நோக்கு நீர்ப்பாசனச் செயற்றிட்டமாகிய மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது நிறைவடையும் நிலையிருந்தது. 1997 காலப்பகுதியில் காணப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாவன முறைமை அபிவிருத்தியும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுமாகும். இவ்வாண்டில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.847 மில்லியனாகுமென இலங்கை மகாவலி மேலாண் மைச் சபை அறிவித்தது. மகாவலி ஆளுகைக் குட்பட்ட பகுதியின் கீழ் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1996 இன் 120,500 எக்டேயர்களிலிருந்து 1997இல் 128,250 எக்டேயர்களுக்கு 6 சதவீதத்தால் அதிகரித்தது. நெற்செய்கையின் கீழான நிலப்பரப்பு 10 சதவீதத்தால் அதிகரித்து 112,578 எக்டேயர்களாக விளங்கிய வேளையில், ஏனைய களப் பயிர்களின் கீழான நிலப்பரப்பு 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 15,700 எக்டேயர்களாக விளங்கியது. 1996 உடன் ஒப்பிடுகையில் 1997 இல் மழை வீழ்ச்சிப் பரம்பல் சிறப்பாகக் காணப்பட்டமை, நீர்ப்பாசனத் தளங்களல் நீர்மட்டம் உயர்வாகக் காணப்பட்டமை ஆகியவற்றினால் நெற் செய்கையின் கீழான நிலப் பரப்பு அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும்.

1977இல் இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையினால் பல புதிய செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பெப்புருவரியில் முறை எச் இல் புத்தாக்க வேலைகள் ஆரம்பிக்கப் பட்டதுடன் 2003 ஆம் ஆண்டுவரை இவை தொடர்ந்தும் மேற்கொள்ள்பபடும். ஓகத்து 6 இல் குருளுவேவா நீர்வழங்கல் கால்வாய் இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையின் சிறப்புப் பிரதேச மொன்றாக வர்த்தமானியில் பிரகடனபடுத்தப் பட்டது. இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையின் நடவடிக்கைகளை வர்த்தக மயப்படுத்து வதற்காக மகாவலி மேலாண்மைச் சபையின் மீளமைப்புச் செயற்றிட்டத்தினை நடைமுறைப் படுத்தும் வேலைகள் உலகவங்கியின் உதவியுடன் திசெம்பரில் தொடங்கப்பட்டன. 2003ஆம் ஆண்ட ளவில் இது நிறைவு செய்யப்படுமென எதிர்பார்க் கப்படுகிறது. வளவை இடதுகரை விரிவாக்கம் மற்றும் தரமுயர்த்துதல் செயற்றிட்டமும் திசெம்பரில் தொடங்கப்பட்டது. மேலும் மொறகககந்த

செயற்றிட்ட சாத்திய வள ஆய்வுக்காக 300,000 குவைத் தினார் கொண்ட தொகையொன்று தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஐரோப்பிய பொருளாதாரக் கட்டமைப்பினால் நிதியிடப்பட்ட மகாவலி ஒருங்கிணைப்புச் செயற்றிட்டத்தின் முறை சீ மற்றும் முறை ஜீ ஆகியவற்றினது வலயம் 2 இனது புத்தாக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகியன 1997 இல் ஆரம்பிக்கப் பட்டன. யப்பான் இன்ரநேசனல் கோப்பரேஷன் அசோசியேசனினால் நிதியிடப்பட்ட பொல்கொல்ல மற்றும் வளவை அணைக்கட்டுக் கதவுகளின் திருத்த மற்றும் பேணல் வேலைகளுக்கான செயற்றிட்டம் ஆய்வுற்குரிய ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.

வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட மூன்று முக்கிய செயற்றிட்டங்களின் தொழிற்பாடுகளும் 1997 இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. மினிப்பே நாகதீப நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டமும் வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசனச் செயற்றிட்டமும் இவ்வாண்டில் முறையே ரூ. 361மில்லியன் மற்றும் ரூ. 44 மில்லியன் கொண்ட தொகையைச் செலவழித்தன. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசனச் செயற்றிட்டத்தில் எட்டுத் திட்டங்கள் 1997 இல் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தன. மூன்று முக்கிய செயற்றிட்டங்களிலும் ஆகக் கூடிய செலவையேற்படுத்திய தேசிய நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டமானது 1997 வரையிலும் 282 சிறிய நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களின் வேலைகளை நிறைவு செய்தது. இவ்விரு செயற்றிட்டங்களுக்குமான மொத்தச் செலவு ரூ. 917 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு நிதியிடப்பட்ட நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களும் 1997 இல் திறம்படச் செயலாற்றின. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 12 செயற்றிட்டங்கள் காணப்படுவதுடன் இவை நிறைவு செய்யப்பட்டதும் 7370 குடும்பங்களைக் குடியமர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களம் இச் செயற்றிட்டங்களுக்கான மொத்தச் செலவு 1997 இல் ரூ. 53.6 மில்லியனாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான குடியேற்ற நடவடிக்கைகள் 1997 இலும் தொடர்ந்தன. மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முறை 'பி' இலும் 'சி' இலும் மட்டுமே குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவற்றில் முறையே 157 மற்றும் 392 குடும்பங்கள் குடியமர்த் தப்பட்டன. மோசமான பாதுகாப்பு நிலைமைகளினால் குடியேற்ற நடவடிக்கைககள் பாதிக்கப்பட்டன. குடியேற்ற நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 1997 வரையில் மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 92,071 ஆகும்.

**அட்டவணை 5.8**

வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான செலவு

| செயற்றிட்டத்தின் பெயர் | உதவியின் மூலங்கள் (அ) | மொத்த வெளி நாட்டு உதவியின் கடப்பாடு (ரூ. மில்.) | 1996 இன் செலவு(ஆ) (ரூ. மில்.) | 1997 இன் செலவு(இ) (ரூ. மில்.) | 1997 இறுதி வரை ஒன்றுசேர்ந்த செலவு(இ) (ரூ. மில்.) |
|---|---|---|---|---|---|
| 1. மினிப்பே - நாகதீப நீர்ப்பாசன புரைமைப்பு செயற்றிட்டம் | | | | | |
| (அ)மகாவலிப் பாலம் | யபஒமு | 2,276 ய.யென் | 458 | 283 | 781 |
| (ஆ)நீர்ப்பாசனம் | கபொஒநி | 1,850 ய.யென் | 185 | 78 | 728 |
| 2. வடமேல் மாகாண சிறப்பு நீர்ப்பாசன செயற்றிட்டம் | ஐசஆ | ஈசியூ 6.3 | 83 | 44 | 346 |
| 3. தேசிய நீர்ப்பாசன புனரமைப்பு செயற்றிட்டம் | ப.அ.அ.<br>ஐபொச | ரூபா 1,406.9<br>ரூபா 622.6 | 535 | 512 | 1,692 |

(அ) யபஒமு - யப்பானிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர்
ஐசஆ - ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு
பஅஅ - பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (உலக வங்கி)
ஐபொச - ஐரோப்பிய பொருளாதார சமூகம்
கபொஒநி - கடல்கடந்த பொருளாதார ஒத்துழைப்பு நிதியம் (யப்பான்)
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை.
(இ) தற்காலிகமானவை.

மூலம்: நீர்ப்பாசனத் திணைக்களம்

நீர்ப்பாசனத் திட்டங்களில் பங்கேற்பாளர் முகாமைத்துவமானது நடைமுறையிலுள்ள "வப்கவ்ல" நிகழ்ச்சித் திட்டத்தினூடாக ஊக்குவிக்கப் பட்டது. இவ்வாண்டில் ஏறக்குறைய 64,000 எக்டேயர்களை உள்ளடக்கிய 152 பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டங்களில் 39 திட்டங்கள், 1994 இன் 13 கொண்ட நீர்ப்பாசன (திருத்தச்) சட்டத்தின் கீழ் "குறித்துரைக்கப்பட்ட" தகைமையைப் பெற்றன. நீர்ப்பாசனத் திணைக்களத்திலிருந்து நீர்ப்பாசனத் திட்டத்தின் தொழிற்பாடு மற்றும் பேணல் வேலைகளைப் பொறுப்பேற்கக் கூடிய இயலளவினை நிரூபிப்பதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பல்வேறு தேவைப்பாடுகளை ஈடுசெய்யக் கூடிய விதத்தில் தொடர்பான கமக்காரர் நிறுவனமானது காணப்படுவதையே இது கருதுகிறது. வேளாண்மைப் பணிகள் சட்டத்தின் கீழ் கமக்காரர் நிறுவனமானது கூட்டுத் தகைமையை அடைவதற்கும் பாய்ச்சப்பட்ட நீருக்காக உறுப்பினர்களிடமிருந்து கட்டணமொன்றைப் பெறுவதற்கும் இது வழியமைக்கும். கமக்காரர் நிறுவனத்தின் வலு மற்றும் இயலளவு ஆகியவற்றைப் பொறுத்து மேலதிகமாக 20 திட்டங்களை குறித்துரைக்கப்பட்ட தகைமை நிலைக்குக் கொண்டு வருவதற்கான வழி முறைகள் மேற்கொள்ளப் பட்டன.

## 5.8 சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

### வீடமைப்பு

நாட்டில் வளர்ச்சியடைந்து செல்லும் நகரக் குடித் தொகையைப் பொறுத்தவரையில் 2000 ஆம் ஆண்டளவில் மொத்தக் குடித்தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்காக இது காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதனால் 1997 இல் அரசின் வீடமைப்புக் கொள்கையின் முக்கிய நோக்கமானது நகரப் பிரதேசங்களில் வீடமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதாகக் காணப்பட்ட வேளையில் தோட்டப் பகுதிகள் மற்றும் கிராமிய வீடமைப்புத் திட்டங்களின் தரத்தை மேம்படுத்து வதுமாகும். இவ்விடயத்தைப் பொறுத்தவரையில் பயன்படுத்தக் கூடிய நிலங்கள் குறைவாயுள்ளமை, உயர்வான கட்டட வாக்கச் செலவு முதலீடுகள் குறைவாயுள்ளமை, சமாளிக்கக் கூடிய தன்மை குறைவாயுள்ளமை ஆகியன அரசினால் கவனத்துக் கெடுக்கப்பட வேண்டிய முக்கியமான விடயங்களுள் சிலவாகும். தற்போதுள்ள நகரக் குடியிருப்புக்களின் வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுதல், போதிய உட்கட்டமைப்பினை வழங்குதல், சிறு குடிசைகள் மற்றும் சேரிகளில் வாழ்வோருக்கு மாற்று இருப்பிட வசதிகளை வழங்குதல் ஆகியனவும் அரசின் கவனத்துக் குட்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும். இந் நகரத்துறை விடயங்களில் கவனஞ் செலுத்துவதற் கான முக்கிய உத்திகளாவன. தனியார் துறையினால் கொண்டு நடாத்தப்படும் நடுத்தர மற்றும் பெரிய அளவிலான வீடமைப்பு அபிவிருத்திளை ஊக்குவித்தல், கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அவற்றின் மூலதன அமைப்பை முன்னேற்றுவதற்கு உதவுதல், அரசினால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானப் பிரிவினருக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தல் என்பனவாகும். கிராமியத்துறையைப் பொறுத்த வரையில், குறைந்த வருமானப் பிரிவினருக்கு சலுகை நிதி உதவியையும் வழங்குதல், தோட்டத்துறைத் தொழிலாளார்களுக்கு அவர்களது தங்குமிடங்களை முன்னேற்றுதல் மற்றும் அடிப்படை வசதிகளுடனான வீடமைப்புக் குடியிருப்புக்களை ஊக்குவித்தல் என்பனவே இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட உத்திகளாகும்.

அரச துறையைப் பொறுத்த வரையில் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான கொள்கைகள் இரு அணுகு முறைகளின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. முதலாவது, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அவர்களுக்கு இயலக் கூடிய அணுகுமுறையின் அடிப்படையில் வீடுகளைக் கட்டுவதற்கு உதவி வழங்குதலும் இரண்டாவது, வழங்குநர்களின் அடிப்படையில் ஆகக் கூடிய பயன்பாட்டைப் பெறுவதற்கு முதன்மைக் காணிகளை மீட்டெடுப்பதன் வாயிலாக சிறு குடிசைகளிலும், சேரிகளிலும் வாழ்பவர்கள் மீளக் குடியமர்த்துவதற்காக வீடுகளைக் கட்டுதலு மாகும். அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்க ளுக்குப் பொறுப்பான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையானது ஆய்வின் கீழான ஆண்டில் ஏழு முக்கிய நிகழ்ச்சித் திட்டங் களை நெறிப்படுத்தியது. தொழிற்பாட்டிலுள்ள முக்கிய செயற்றிட்டங்களாவன, ஜன உதான நிகழ்ச்சித் திட்டம் கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் நகர வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் பெருந் தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், நேரடி கட்டடவாக்க நிகழ்ச்சித்திட்டம், பேரழிவு வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கடற்றொழில் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் என்பனவாகும்.

அரச துறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் 1997 இல் மிதமான முன்னேற்றம் காணப்பட்டது. அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்

நிறைவு செய்யப்பட்ட அலகுகளின் மொத்த எண்ணிக்கை 10 சதவீதத்தால் அதிகரித்து 32,548 ஆக விளங்கிய வேளையில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களும் கொடைகளும் முன்னைய ஆண்டுடனொப்பிடுகையில் 17 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 619 மில்லியனாக விளங்கின. 1997 இல் கிராமியத்துறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்ட வேளையில் சனஉதானவின் கீழான நடவடிக்கைகள் முன்னைய ஆண்டுடனொப்பிடுகையில் நிலங்களை விடுவிப்பதிலேற்பட்ட தாமதம் காரணமாக மெதுவாகவே செயற்பட்டன. ஏழு மாவட்டங்களிலுள்ள மீன்பிடிக் குடும்பங்களுக்கு உதவுவதற்காக 1997 இல் புதிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

1997 இல் பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நம்பிக்கை நிதியானது சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டம் 11 இன் கீழ் தொடர்ந்தும் வீடமைப்புக் கடன்களையும், நில அளவீடு, வீதிகளை அமைத்தல், நீர் வழங்கல் மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கான சுகாதார வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்கியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1997 இல் 718 அலகுகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. ஒப்பிடுகையில் 1996இல் 460 அலகுகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. புதிய அலகுகளும் தரமுயர்த்தல் வேலைகளுக்குட்பட்டமையும் 1996 இன் 1723 அலகுகளுடனொப்பிடின் 1997 இல் 2937 ஆகக் காணப்பட்டன. இவ்வாண்டில் சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டம் 11 இன் கீழ் ரூ. 56 மில்லியன் கொண்ட தொகை செலவிடப்பட்டது. அதே வேளையில், இலங்கை மகாவலி மேலாண்மைச் சபையானது 1996 இன் 2283 அலகுகளுடன் ஒப்பிடுகையில் 1997 இல் 1520 வீடமைப்பு அலகுளை நிறைவு செய்திருந்தது.

எதிர்கால வீடமைப்புத் தேவையை நிறைவேற்றுவதில் குறிப்பாக நகரத் துறையைப் பொறுத்தவரையில் தனியார் கட்டடவாக்க அபிவிருத்தியாளரினதும் வீடமைப்பு நிதியிடல் நிறுவனங்களினதும் பங்கு மிகப் பெரிதாகும். நிலப்பற்றாக்குறையையும், அந்நிலத்திலிருந்து ஆகக்கூடிய பயனைப் பெறவேண்டியதன் அவசியத்தையும் கவனத்திற் கொண்டு பல தொடர்மாடிக் கட்டடங்களையும், வீடமைப்புத் தொகுதிகளையும் அமைத்தல் அபிவிருத்தி செய்தல் என்பன தவிர்க்கமுடியாத அவசிய தேவையாக உள்ளன. எனினும் தேவைப்படும் முதலீட்டின் அளவானது அரச துறை முதலீட்டு நிதியங்கள் அல்லது தனியாரின் இயலளவினை விஞ்சியதாகவே காணப்படுகிறது. எனவே வீடமைப்பு அபிவிருத்தியாளர்கள் மற்றும் வாங்குனர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய நியாயமான ஊக்குவிப்பு அமைப்பொன்று இன்றியமையாததாகும். இத்தேவையைப் பொறுத்தவரையில் வரிச்சலுகைகள் வாயிலாகவும், பெரிய மற்றும் நடுத்தர அளவு வீடமைப்புத் தொகுதிகள் ஆகியவற்றில் முதலிடுவதற்காக நிலம் மற்றும் நம்பிக்கை நிதியங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலமான ஊக்குவிப்புக்கள் 1998 வரவு செலவுத் திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்டன.

அதேவேளையில் தனிப்பட்ட வீடமைப்புக் கடன்கள் சந்தை வீதங்களில் இரு அரசவங்கிகளினாலும், அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய

**அட்டவணை 5.9**

அரச துறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

| துணை நிகழ்ச்சித் திட்டம் | தொடங்கப்பட்ட அலகுகள் (எண்.) | | முற்றுப் பெற்ற அலகுகள் (எண்ணிக்கை) | | பகிர்ந்தளிக்கப்பட்டவை (ரூ. மில்லியன்) | |
|---|---|---|---|---|---|---|
| | 1996 | 1997(அ) | 1996 | 1997(அ) | 1996 | 1997(அ) |
| ஜன உதான நிகழ்ச்சித்திட்டம் | 15,599 | 6,582 | 14,061 | 9,751 | 230 | 142 |
| கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 2,086 | 12,811 | 5,791 | 6,103 | 52 | 190 |
| செவன வீடமைப்பு கொடை நிகழ்ச்சித்திட்டம் | 15,552 | 10,715 | 7,315 | 14,821 | 77 | 118 |
| நகர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 342 | 1,060 | 971 | 626 | 11 | 13 |
| பெருந்தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 631 | 1,008 | 814 | 883 | 10 | 19 |
| நேரடி கட்டடவாக்க நிகழ்ச்சித்திட்டம் | 208 | 562 | 459 | 92 | 133 | 123 |
| கரையோர வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 0 | 0 | 192 | 0 | 14 | ... |
| இடர் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (தென் மாகாணம்) | 186 | 184 | 25 | 92 | 1 | 4 |
| மீன்பிடி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 0 | 1,006 | 0 | 180 | 0 | 10 |
| மொத்தம் | 34,624 | 33,928 | 29,628 | 32,548 | 528 | 619 |

(அ) தற்காலிகமானவை.

மூலம் : தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை

சேமிப்பு வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்ற ஏனைய வீடமைப்பு நிதி நிறுவனங்களினாலும் வழங்கப்பட்டன. 1997 இல் அரச ஈட்டு, முதலீட்டு வங்கியினால் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களின் எண்ணிக்கை 1996 இன் 5,520 உடனொப்பிடுகையில் 8,438 ஆகக் காணப்பட்டது. மொத்தக் கடன் பகிர்வுகள் ரூ. 1,378 மில்லியனாக விளங்கி இரு ஆண்டுகளுக்குமிடையில் 26 சதவீதங் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தன. மக்கள் வங்கியானது ஆயுதப் படையினர் மற்றும் பொலிஸ் ஆளணியினர், வரையறுக்கப்பட்ட இலங்கை ரெலிகொம், வரையறுக்கப்பட்ட எயர் லங்கா, உள்ளூராட்சிப் பணி ஊழியர்கள் மற்றும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆகியோருக்காக ஆறு புதிய வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. மக்கள் வங்கி ரூ. 641மில்லியன் செலவில் 14,097 கடன்களை 1997 இன் முதல் பத்து மாதங்களிலும் வழங்கியது. மக்கள் வங்கியின்படி ஊழியர் சேமநிதிய நிலுவைகளுக்கெதிராக வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களை மீளச் செலுத்துதல் 1997 இல் மிகவும் திருப்தியற்ற மட்டத்திலேயே காணப்பட்டது. 1997 இல் தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்படும் வீடமைப்புக் கடன்களுக்கான கேள்வி வளர்ச்சியடைந்து காணப்பட்டமைக்கு ஏனைய வீடமைப்பு நிதியிடல் நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் பெருமளவுக்குக் குறைவான வட்டிவீதங்களை வழங்கியமையே காரணமாகும். 1997 இல் தேசிய சேமிப்பு வங்கியினால் 1436 கடன்கள் வழங்கப்பட்டன. முன்னைய ஆண்டை விட இது 11 சதவீதங் கொண்ட அதிகரிப்பாகும். பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ. 839மில்லியனாகும். வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ரக்சன செவன வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் ரூ. 193 மில்லியன் பெறுமதியுடைய 829 வீடமைப்புக் கடன்களை வழங்கியது. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது முன்னைய ஆண்டின் 9261 வீடமைப்புக் கடன்களுக்கெதிராக . 1997 இல் 3298 வீடமைப்புக் கடன்களை வழங்கக் கூடியதாயிருந்தது. வீடமைப்புக் கடன்களின் பெறுமதி ரூ.448 மில்லியனாக விளங்கியதுடன் முன்னைய ஆண்டைவிட 22 சதவீத வீழ்ச்சியையும் கொண்டிருந்தது. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், ஆயுதப் படையினர், பொலிஸ் பணியிலுள்ளோர் மற்றும் ஊனமுற்ற படைவீரர் ஆகியோருக்கென சிறப்பு வீடமைப்புத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது.

## நகர அபிவிருத்தி

நகர சமூகங்களுக்கான அடிப்படைப் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளின் வழங்கல் மற்றும் பேணல் ஆகியன உள்ளூராட்சிச் சபைகளிடமே முக்கியமாக இருக்கும். இலங்கையானது, 13 மாநகர சபைகளையும், 38 நகர சபைகளையும், 254 பிரதேச சபைகளையும் கொண்டதாகும். இலங்கையில் நகரப் பகுதிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கென நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையானது 1978 இல் நிறுவப்பட்டது. நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபைக்கு உரித்தாக்கப்பட்ட பொறுப்புக்களாவன வர்த்தகக் கட்டட தொகுதிகள், கைத்தொழிற் பேட்டைகள், வீடமைப்புச் செயற்றிட்டங்கள், நிருவாகக் கட்டடத் தொகுதிகள் ஆகியவற்றின் அபிவிருத்தி உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சூழல் அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கும் நகர அபிவருத்தி மேலாண்மைச் சபையானது, ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் பௌதிக அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கமாக 150 உள்நாட்டு மேலாண்மைப் பிரதேசங்களை அறிவித்தது.

1997 இல் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் பொறுப்பேற்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்தச் செலவு 1996 இன் ரூ. 540 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 765 மில்லியனாக விளங்கியது. மொத்தச் செலவில் ரூ. 608 மில்லியன் அல்லது 79 சதவீதமானவை வாடிக்கையாளருக்காகக் கையேற்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கானவையாகும். வாடிக்கையாளரின் செயற்றிட்டங்களுக்குக் கீழ் பாகுபடுத்தப்பட்ட நகர அபிவிருத்தித் துறைச் செயற்றிட்டத்துக்கான மொத்தச் செலவு ரூ. 518 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுக்கான செலவை விட 32 சதவீத அதிகரிப்பொன்றைக் கொண்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட நகர அபிவிருத்தித் துறைச் செயற்றிட்டத்தின் கீழ் 17 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகரங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் ஐ.அ.டொலர்கள் 36 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. வீதிகள், பாலங்கள், நீர் வழங்கல், சுகாதாரம், சாக்கடை, திண்மக் குப்பைச் சேகரிப்பும் அகற்றலும். குறைந்த வருவாய் பெறுவோருக்கான வீடமைப்பு மற்றும் சிறு அளவிலான கைத்தொழிற் பூங்காக்கள் என்பன இச்செயற்றிட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுள்

சிலவாகும். நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையானது இவ்வாண்டில், பத்தரமுல்லையிலும், பெலவத்தையிலும் அமைந்துள்ள நிருவாகக் கட்டடத் தொகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூ. 53 மில்லியனைச் செலவு செய்தது. நிட்டம்புவ கடைத்தொகுதி, போலியகொடை அபிவிருத்தித் திட்டம் மற்றும் பஞ்சிகாவத்தை முக்கோணப் பகுதி ஆகியவற்றின் கட்டடவாக்கத்தை உள்ளடக்கிய ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் ரூ. 55 மில்லியனைச் செலவழித்திருந்தன. நகர முன்னேற்றச் செயற்றிட்டத்தின் கீழ் குறைந்த செலவிலான வீடமைப்பு, அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் நடுத்தர வருவாய் பெறுவோருக்கான வீடமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றுக்காக ரூ.16 மில்லியன் செலவழிக்கப்பட்டது.

மேலே கூறப்பட்ட நடவடிக்கைகளுடன், நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையானது மோதரவில, பாலியகொடை மற்றும் கோமகம ஆகிய இடங்களில் பல கைத்தொழில் அபிவிருத்திச் செயற்றிட்டங்களைக் கையேற்றது. காலி முகத்திடலுக்கான புதிய நிலத் தோற்றத் திட்டமொன்றையும் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை தயாரித்ததுடன் இத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையானது, கொழும்பு மாநகர சபைப் பகுதிக்கான பிரதேச அமைப்புத் திட்டம் மற்றும் கொழும்பு நகர அபிவிருத்தி ஆகியவற்றுக்கான தயாரிப்பு வேலைகளையும் கையேற்றது. இறுதியான வரைவு அறிக்கை தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. கோட்டே தலை நகர அபிவிருத்தித் திட்டத்துக்கான தயாரிப்பும் செயற்பாட்டிலுள்ளது.

## நீர் வழங்கலும் சுகாதாரமும்

நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தைப் பொறுத்த வரையில் நல்ல நீரைப் பெறும் வழியை முன்னேற்றுவதும், சிறப்பாக கிராமியப் பகுதிகளில் போதிய சுகாதார வசதிகளை வழங்குவதுமே முக்கிய கொள்கை உந்துதலாகக் காணப்பட்டது. நிலத்திலும் நிலத்துக்குக் கீழும் உள்ள அனைத்து நீர் மூலவளங்களினதும் சிறந்த பயன்பாடு, தனியார் துறைப் பங்கேற்பினை ஊக்குவித்தல், செலவுப் பங்கீட்டுக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளல், தீர்வைக் கொள்கையை ஒழுங்கு முறைப்படுத்தல் ஆகியன இப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய உத்திகளாகும். 1997 இன் இறுதியளவில் மொத்தக் குடித்தொகையில் 64 சதவீதமானோருக்கு தூய குடிநீர் (குழாய் நீர் வசதிகள், குழாய்க் கிணறுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட கிணறுகள்) கிடைக்கக்கூடியதாயிருந்தது. ஒப்பிடுகையில் 1996 இல் இது 61 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில், குடித்தொகையின் ஏறக்குறைய 64 சதவீதத்தினருக்கு சுகாதார வசதிகள் கிடைக்கக்கூடியனவாயிருந்தன. நகரப் பகுதிகளில் 91 சதவீதமான மக்களுக்கு நீர் வழங்கல் பணிகள் கிடைக்கக்கூடியனவாயிருந்தன. கிராமியத்துறையில் இது தென்கொரியா (93 சதவீதம்) தாய்லாந்து (89 சதவீதம்) மலேசியா (78 சதவீதம்) பிலிப்பைன்ஸ் (86 சதவீதம்) ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் (64 சதவீதம்) காணப்படுகிறது. விலைகளில் நீர்வழங்கலுக்கு அவசியமான விரிவினையும் முன்னேற்றத்தினையும் ஏற்படுத்துவதற்குத் தேவையான மூலவளங்களைத் திரட்டுவதே எதிர்நோக்கப்படுகின்ற அறை கூவலாகும். இவ்விடயத்தில், நீர் வழங்கல் உட்கட்டமைப்பினை விரிவாக்குவதற்கு மட்டுமன்றி நீர்வழங்கல் துறையிலான தற்போதைய தொழிற்பாட்டுத் திறனின்மையை அகற்றுவதற்குமாக தனியார் துறைப் பங்கேற்பினை ஊக்குவிப்பதில் தீவிரமான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நீர் வழங்கல் வசதிகளுக்கான கேள்வி 1997 இல் தொடர்ந்தும் அதிகரித்தது. நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளின் வழங்கலுக்குப் பொறுப்பான முக்கிய நிறுவனமாக விளங்கிய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 279 நீர் வழங்கல் திட்டங்களைத் தொழிற்படுத்தி 1997 இன் இறுதியில் 270 மில்லியன் கனமீற்றர்கள் நீரை வழங்கியது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்ட இணைப்புக்களின் எண்ணிக்கை 1997 இன் இறுதியில் 32,278 ஆல் அதிகரித்து 386,106 ஆக விளங்கியது. மொத்தமான புதிய இணைப்புக்களில் 17,216 இணைப்புக்கள் அல்லது 53 சதவீதமானவை கிராமியத் துறைக்கு வழங்கப்பட்ட வேளையில், எஞ்சியவை மாநகர சபைகளிலும் மற்றும் நகர சபைப் பகுதிகளிலுள்ள நகரப் பகுதியினருக்கும் வழங்கப்பட்டன.

நகரக் குடித்தொகையிலேற்பட்ட விரிவு, கிராமியப் பகுதிகளில் தூய குடி நீர் போதியளவில் கிடைக்காமை, கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்களில் காணப்பட்ட உயர் வளர்ச்சி ஆகியன 1997 இல் நீர் வழங்கலில் அதிகளவு முதலீடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தையேற்படுத்தின. ஆய்வின் கீழான ஆண்டில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது நீர் வழங்கலுக்காக ரூ. 2,900 மில்லியன் கொண்ட தொகையைச் செலவிட்டது. இம் முதலீட்டில் 57 சதவீதமானவை

பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு; ஆசிய அபிவிருத்தி வங்கி, கடல் கடந்த நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு நிதியம், கடல் கடந்த அபிவிருத்தி அமைப்பு போன்ற வெளிநாட்டு மூலங்களிலிருந்து சலுகை அடிப்படையில் பெறப்பட்டன. இவ்வாண்டில் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்ட முக்கிய நீர் வழங்கல் திட்டங்களா வன, அம்பத்தளை நீர் வழங்கல் திட்டம், கொழும்பு கிழக்கு நகரங்களின் நீ.வ.தி., மாத்தறை நீ.வ.தி., கொழும்பு தெற்கு நகரங்களின் நீ.வ.தி. அம்பாந் தோட்டைப் பகுதி மற்றும் உடுநுவர யட்டிநுவர நீ.வ.தி. இல் ஆழமாகத் துளைத்தல் ஆகியனவாகும். அதே வேளையில் கிராமியப் பகுதிகளில் நீர் வழங்கப்படும் பகுதிகளை அதிகரிக்கும் நோக்குடன் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப் பட்ட சமூக நீர்வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டமானது இவ்வாண்டில் நடைமுறையி லிருந்தது. 1997 இல் சமூக நீர்வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்றிட்டம் பதுளை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுமுள்ள 650,000 மக்களுக்குப் பணியாற்றும் நோக்குடன் கிராம நீர் வழங்கல் மற்றும் சுகாதார நிகழ்ச்சித் திட்டம், பள்ளிக்கூட நீர்வழங்கல் மற்றும் சுகாதார நிகழ்ச்சித் திட்டம், சிறு நகர நீர்வழங்கல் மற்றும் சுகாதார நிகழ்ச்சித் திட்டம் போன்ற துணை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டங்களும் 98 பாடசாலை நீர் வழங்கல் திட்டங்களும் 1997 இல் நிறைவு செய்யப்பட்டிருந்தன. இச்செயற்றிட்டத்தின் கீழ் கிராமியப் பகுதிகளில் நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்குவதற்காக சமூக நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்றிட்டத்தின் கீழ் ரூ. 588 மில்லியன் கொண்ட தொகையொன்று செலவிடப்பட்டது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வர்த்தக ரீதியிலான வாய்ப்புத் தன்மையி லேற்பட்ட முன்னேற்றமானது ஆய்வின் கீழான ஆண்டின் முதன்மை விடயமாகக் காணப்பட்டது. நீர் வழங்கல் துறைக்கான தீர்வைக் கொள்கை தொழிற்பாட்டு மற்றும் பேணல் செலவுகளையும், பெறப்பட்ட முதலீட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும். தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை 3 வருடங்களு க்குப் பின் 1997 இல் நீருக்கான தீர்வையை இரு முறை திருத்தியது. இதன்படி சராசரி உள்நாட்டு நுகர்வோருக்கான நீர்த் தீர்வை 1996 உடன் ஒப்பிடுகையில் 1997 இல் 46 சதவீதத்தால் அதிகரி த்தது. உள்நாட்டுத் துறையல்லாத் துறையிலிருந்து உள்நாட்டுத் துறைக்கான உயர் குறுக்கு உதவு தொகைகளிலேற்பட்ட குறைப்பு, கடந்த மூன்று ஆண்டுகளிலும் சம்பளப் பட்டியல் மற்றும் நலன்புரிச் செலவிலேற்பட்ட அதிகரிப்பை மீளப் பெறுதல் ஆகியனவே இவ்வதிகரிப்புக்கான முக்கிய காரணமாகும். எனினும், கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளுக்கான சராசரி தீர்வை வீதங்கள், சராசரி உள்நாட்டுத் தீர்வைகளை விட மிக அதிகமாகவே இருப்பதுடன் உள்நாட்டுத் தீர்வைகள், உற்பத்திச் செலவின் 20 சதவீதத்தை மட்டுமே உள்ளடக்கு கின்றன. இதனால் தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபையின் நிதித் தொழிற்பாடுகளினது வினைத் திறனை முன்னேற்றுவதற்காக மட்டுமன்றி, வீணாக்கப்படும் நுகர்வினைக் குறைப்பதற்காகவும் நீருக்கு அதன் உண்மையான செலவைப் பிரதிபலிக்கும் வகையில் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட விலைக் கொள்கையொன்று அவசியமாகும். பட்டியலிடல் வழி முறைகளிலான முன்னேற்றமும் நீர்க்கசிவு, பட்டியலில் சேர்க்கப்படாத நுகர்வு, சட்ட விரோத நீர் பாவனை, ஒழுங்கான பேணல் முறைகள் இல்லாமை ஆகியவற்றின் காரணமான கணக்கிட முடியாத நீர்ப்பாவனையிலேற்பட்ட குறைவுமே (37 சதவீதம்) நீர் வழங்கல் துறையின் தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் வினைத் திறனை அதிகரிப்பதற்காகக் கவனத்திலெடுக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 1979 இல் ஆரம்பித்து உட்கட்ட மைப்பு அபிவிருத்தியிலான அதிகளவு முதலீட்டைக் கொண்டிருந்ததுடன் கிராமியப் பகுதிகளில் அடிப்படைத் தேவைகளை வழங்குதலையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. 1989 இலிருந்து கிராமப் பகுதிகளில் தொழில் வாய்ப்பிலும் வருமானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலும் தனியார் துறைக்குள்ள ஈடுபாட்டிலேயே இந்நிகழ்ச்சித் திட்டம் கவனம் செலுத்தியது. கிராமிய அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் அணுகுமுறை 1989 இன் பின் உறுதியாக்கப்பட்டது. ஒருங்கிணைக் கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது 1997 இலிருந்து திட்ட நடைமுறைப் படுத்தல் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் தொழில் வாய்ப்பு மற்றும் வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகளில் முக்கியமாக கவனம் செலுத்துவதற்கான கிராமிய பொருளாதார முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டமொன்றாக மீளமைக்கப்

பட்டுள்ளது. பெரும்பாலான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முகாமைத்துவம் 1997 இன் தொடக்கத்தில் மாற்றப் பட்டது. 1997 இன் நாட்டிலுள்ள மாவட்டங்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கானவற்றை உள்ளடக்கிய நடைமுறையிலுள்ள 15 செயற்றிட்டங் களை ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டம் உள்ளடக் கியிருந்தது. இத்திட்டத்துக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத்திட்டமானது 1997 இல் ரூ. 1512 மில்லியனாகும். இதில் ரூ. 1375 மில்லியன் அல்லது 91 சதவீதம் பயன்படுத்தப்பட்டது.

மாத்தறை மாவட்டத்துக்கான ஒருங்கிணைக் கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொழிற் பயிற்சி போக்குவரத்து முன்னேற்றம் மற்றும் கிராமியக் கொடுகடன் போன்ற நடவடிக்கை களில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. திக்வெல்ல மற்றும் தேவிநுவர பிரிவுச் செயலகப் பிரிவுகளில் கிராமிய பொருளாதார முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டம் முன்னோடிச் செயற்றிட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. அம்பாந்தோட்டை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச் சித்திட்டம் சமூக அபிவிருத்தி, சிறிய அளவிலான வியாபார அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனத்தைச் செலுத் தியது. நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நீண்டகால நோக்கம், கிராமத் துறையில் வறுமையை ஒழிப்பதும், மாவட்டத்தில் பொருளாதார ரீதியாக வும், சூழல் ரீதியாகவும் தாக்குப் பிடிக்கக்கூடிய அபிவிருத்தியை ஊக்குவிப்பதுமாகும். 1997 மேயில் மேற்கொள்ளப்பட்ட இடைக்கால ஆய்வு இயக்க மானது மீளமைப்பில் மாற்றமொன்று ஏற்படுத்தப் பட வேண்டிய தேவையை எடுத்துக் கூறியது. இரண்டாவது பதுளை மாவட்டத்திலுள்ள ஒருங்கி ணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் வறுமை ஒழிப்புக்கும், உணவுப் பாதுகாப் பையும் வறிய கிராமியக் குடியிருப்பாளர்களிடையே ஊட்டத்தையும் அதிகரிக்கச் செய்யவும் வடிவமை க்கப்பட்டது. 1997 யூலையில் இடைக்கால ஆய்வு இயக்கமானது, இச் செயற்றிட்டத்தை ஒரு வருடத் தில் 2000 ஆம் ஆண்டுவரையில் நீடிப்பதற்கான எடுத்துரைப்பைச் செய்தது. சுய உதவி சமூக அபிவிருத்தி, கிராம சந்தை நிலைமை அபிவிருத்தி, நில ஒழுங்கமைப்பு ஆகியனவே செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்ட புதிய கூறுகளாகும். 1997 இல் செயற்பாட்டிலிருந்த இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முதற் கட்டம் செயற்றிட்டத்தின் தாக்குப் பிடிக்கக்கூடிய தன்மையை உறுதிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

மொனராகலை மாவட்ட ஒருங்கிணைக்கப் பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பள்ளிக்கூடக் கட்டடங்கள், கிராமத் தெருக்கள், சிறிய நீர்ப்பாசன வசதிகளைப் புனரமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டிரு ந்தது. கல்வி நலம் மற்றும் வேளாண்மை அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. உள்நாட்டு நிறுவனங்களின் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் திறனை வலுப்படுத்துவதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப் பட்டது. களுத்துறை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1997 இல் நிறைவு செய்யப்பட்டதுடன் வெளிநாட்டு உதவி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு விட்டமையால் அரசின் நிதி பயன்படுத்தப்பட்டது. இலக்கிடப்பட்ட பிரிவினருக்காக வருமான உருவாக்கல் நடவடிக்கை களை ஊக்குவித்தலே கண்டி மாவட்ட ஒருங்கிணை க்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட த்தின் முக்கிய வலியுறுத்தலாகும். கம்பகா மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், கிராமப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை (பாலங்களும் தெருக்களும்) மேம்படுத் தின. யப்பானிய அரசு கம்பகா மாவட்டத்தில் வேளாண்மை விரிவாக்க மேம்பாட்டுக்கான தொழில் நுட்ப உதவியை வழங்கியது. பண்ணை மாதிரிகள், பல கமக்காரர்களின் பரீட்சிப்பு நிலத்துண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட வேளையில் அம்பேபுசவில் மாதிரிப் பண்ணையொன்று ஏற்படுத்தப்பட்டது.

1997 ஆம் ஆண்டானது தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை நடை முறைப்படுத்திய ஏழாவது ஆண்டாகக் காணப் பட்டது. 1997 இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்தச் செலவில் ஏறக்குறைய 44 சதவீதமான பங்கு இச்செயற்றிட்டத்துக்காகச் செலவிடப்பட்டது. மாகாணத்திலுள்ள மக்களின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதே இச் செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1997 இல் கிராமத்தை அடையும் தெருக்களை அமைப்ப திலும் நுண்பாக கொடுகடன் செயற்றிட்டங்களிலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் முன்னேற்றங்கள் காணப்பட்டன. 1996 இல் புத்தளம் மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படைப் பணிகள் செயற்றிட்டம் 1996 இல் நிறைவு செய்யப்பட்டதுடன் ஒன்றிணைந்த வேலைகளுக்காக 1997 இல் ரூ. 6.6 மில்லியன் செலவிடப்பட்டது. மனித மூலவள

மற்றும் நிறுவன அபிவிருத்திச் செயற்றிட்டமானது அலுவலர்களின் தேர்ச்சியையும், பிரதேச அபிவிருத்தியில் நிறுவன ரீதியான நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதையே இலக்காகக் கொண்டுள்ளது. செயற்றிட்ட திட்டமிடல் மற்றும் நடைமுறைப் படுத்தல் ஆகியவற்றில் நன்மை பெறுநரின் தீவிர மான பங்களிப்பே வட மேல் மாகாண உயர்வலய பங்களிப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் காணப்பட்ட முக்கிய பண்பாகும். கிராமத்திலுள்ள வறிய மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்றாக தாக்குப்பிடிக்கக் கூடிய பண்ணை முறைகளை விருத்தி செய்வதையே இச் செயற்றிட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. மொனராகலை நீர்ப்பாசனம் மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்றிட்டம் மாவட்டத்தில் எட்டு நீர்ப்பாசனத் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. நீர்ப்பாசனத் திட்டங்களைச் சுற்றிக் குடியிருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்காக நீர்ப்பாசனம், புனரமைப்பு வேளாண்மை மற்றும் சமூக அபிவிருத்தி ஆகியவற்றிலேயே இச்செயற்றிட்டம் கவனம் செலுத்தியது. வட மத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் அனுராதபுர மாவட்டத்தில் மிக அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 24,000 குடியிருப்பாளர்களுக்கு நன்மையளித்துள்ளது. கால்நடை அபிவிருத்தியும், 350 கிராமங்களில் அவற்றையடையும் வீதிகளும் 10 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் ஆரம்ப நலக்கவனிப்பு ஆகியனவும் நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் 1997 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அனுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமானது இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதும் கிராமப் பகுதிகளில் கிட்டத்தட்ட 43,000 குடியிருப்பாளர்களின் வருமான மட்டத்தை உயர்த்துவதுமாகும். கிராமிய பொருளாதார முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் புதிய கோட்பாட்டின் கீழ் திட்ட நடைமுறைப் படுத்தல் அமைச்சின்படி 1997 காலப் பகுதியில் ஒவ்வொரு செயற்றிட்ட மாவட்டத்திலும் சிறு அளவிலான வர்த்தக பயிர்ச் செய்கை மற்றும் கிராமிய தொழில் முயற்சி அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளில் முதலீடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

## சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்

சமூகத்தின் பாதிக்கப்படக் கூடிய தொகுதியினருக்கு ஆகக் குறைந்த வாழ்க்கைத் தரத்தினை உறுதிப்படுத்தும் வகையில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் இவ்வாண்டிலும் தொடர்ந்த வேளையில் அவர்களிடையே வேலையில்லாப் பிரச்சினையைக் குறைக்கக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1997 இன் இறுதியில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொடக்கத்தில் இலக்கிடப்பட்ட 1.2 மில்லியன் குடும்பங்களுக்கெதிராக 2.1 மில்லியன் குடும்பங்கள் நன்மையடைந்திருந்தன. இதன்படி 1997 இல் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்கள் தொகையில் 55 சதவீதமானோர் நன்மைகளைப் பெற்றனர். நிகழ்ச்சித் திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் வகைப்படுத்தித் தெரிந்தெடுக்கும் செயல் முறையில் குறைபாடு காணப்பட்டமையினால், திட்டத்தில் நன்மை பெறுவோரை அதிகளவில் உள்ளடக்குதல் பற்றிய விடயம் தீவிரமாக கவனத்துக் கெடுத்துக் கொள்ளப்பட வேண்டியதாகும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் வறுமை மட்டமானது குடித்தொகையின் 25 சதவீதத் திலிருந்து 35 சதவீதம்வரை மிகக் குறைவாகக் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நிருவாகம் கொள்கை உருவாக்க மேலாண்மைச் சபையான சமுர்த்தி இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சிற்குப் புறம்பாக வறுமை நிவாரணத் திணைக்களம், சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம், இலங்கை சமுர்த்தி மேலாண்மைச்சபை ஆகியவற்றினாலும் மேற்கொள்ளப்படுகிறது. சமுர்த்தி நன்மை பெறுநருக்கிடையே நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்குதல் வறுமை நிவாரணத் திணைக்களத்தின் பொறுப்பாகும். அத்துடன் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரண உணவு முத்திரைகள் வழங்குதல், சிறப்பு உணவு முத்திரைகள் வழங்குதல் ஆகியவற்றை வறுமை நிவாரணத் திணைக்களம் கையாள்கிறது. வருமான உதவித் திட்டத்தின் கீழ், நன்மை பெறுநரில்ஏறத்தாள 2 சதவீதத்தினரான மிகவும் வறியவர்களெனக் கருதப்படுபவர்களுக்கு ரூ. 1000 கொண்ட மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்பட்டது. ஏறத்தாள 45 சதவீதமான குடும்பங்கள் மாதாந்தப்படியாக ரூ.500 இனைப் பெற்ற வேளையில் எஞ்சிய குடும்பங்கள், தங்கியிருப்போரின் எண்ணிக்கையைப் பொறுத்து ரூ. 200 அல்லது ரூ. 100 ஐப் பெற்றன. வருமான உதவித் திட்டத்துக்குச் செலவிடப்பட்ட மொத்தத்தொகை 1997 இல் ரூ. 6768 மில்லியனாக விளங்கியது.

1997 ஒகத்திலிருந்து சமுர்த்தி உதவுத் தொகைத் திட்டமானது, கிழக்கு மாகாணத்தின்

முழுப்பகுதியையும் வவுனியா மாவட்டத்தில் இரண்டு பிரிவுச் செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது. இப்பகுதிகளில் 18,542 குடும்பங்கள் சமுர்த்தி நன்மைகளைப் பெறப் பொருத்தமானவையென அடையாளங் காணப்பட்டதுடன் தொடக்கத்தில் மாதாந்தம் ரூ. 250 செலுத்தப்பட்டது. மேலும் வறுமை நிவாரணத் திணைக்களம் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு தொடர்ந்தும் உயர் உணவுப் பங்கீட்டு அட்டைகளை விநியோகித்தது. 1997 இல் 159,849 இடம் பெயர்ந்த குடும்பங்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தினால் நன்மையடைந்தன. வறுமை நிவாரணத் திணைக்களம், சமுர்த்தி குடியிருப்பாளர்களில் தாய்மாருக்கு ரூ. 100 பெறுமதியான ஊட்டச்சத்து அட்டைகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 56,908 தாய்மாருக்கான கொடுப்பனவுகள் 1997 இல் ரூ. 68 மில்லியனாகக் காணப்பட்டன. அதே வேளையில், முன்பு சனசவிய உதவியைப் பெற்ற 407,000 குடும்பங்களுக்கும் 1997 இல் ரூ. 250 செலுத்தப்பட்டது. சனசவிய கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணக் கொடுப்பனவுகளின் மொத்தச் செலவு ரூ. 1,700 மில்லியனாகக் காணப்பட்டது. 1997 இல் நிவாரணத் திணைக்களத்தின் கீழான அனைத்து நிகழ்ச்சித் திட்டங்க ளினதும் மொத்தச் செலவு ரூ.8536 மில்லியனாக இருந்தது.

மனித மூலவளம் மற்றும் நிறுவனங்களை விருத்தி செய்தல், சமூக காப்புறுதி வலையமைப்பினை நடைமுறைப்படுத்துதல், பொருளாதார சமூக மற்றும் கலாச்சார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துதலும் திட்டமிடுதலும், சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்காணித்தலும், மதிப்பிடுதலும் ஆகிய நோக்கங்களுடன் 1994 இல் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் நிறுவப்பட்டது. கிராம மட்டத்தில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் (அல்லது சமுர்த்தி பலகாலப்) சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களமானது மூன்று சமுர்த்தி வழிகாட்டிகளை நியமித்தது. 1997 இல் 6,108 சமுர்த்தி அலுவலர்கள் புதிதாக நியமனம் பெற்றனர். இதன்படி 1997 இன் இறுதியில், 6,429 வேளாண்மை ஊக்குவிப்பாளர்கள் (வேளாண்மை) உள்ளடக்கி 32,029 சமுர்த்தி ஊக்கவிப்பாளர்கள் 22 மாவட்டங்களில் 272 பிரிவுச் செயலகப் பிரிவுகளில் நியமிக்கப்படடனர்.

சமுர்த்திக் குடும்பங்கள் தமது அவசரமான மற்றும் அவசியமான சமூக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவற்றுக்கு உதவும் வகையில் சமூக காப்புறுதித் திட்டமொன்றையும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் நடைமுறைப்படுத்தியது. மாதமொன்றுக்கு ரூ. 1000 அல்லது ரூ. 500 இனைப் பெறும் ஒவ்வொரு சமுர்த்தி நன்மை பெறும் குடும்பத்தின் மீதும் ரூ. 20 கொண்ட காப்புறுதிக் கட்டப்பணம் விதிக்கப்பட்டது. 1997 இல் 932,193 உறுப்பினர் குடும்பங்களிலிருந்து ரூ. 197 மில்லியன் கொண்ட தொகையொன்று காப்புறுதிக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வேளையில், 61, 291 கோரல்களுக்காக ரூ. 170 மில்லியன் செலுத்தப்பட்டது. சமுர்த்திக் குடும்பங்களின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1997 இன் இறுதியில் ரூ. 16.5 மில்லியன் செலவில் 4,900 தையல் பொறிகளை சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் விநியோகித்தது.

இலங்கை சமுர்த்தி மேலாண்மைச் சபையானது கிராமியச் சமூகச் செயற்றிட்டங்கள், கட்டாய சேமிப்புத் திட்டம், தன்விருப்பு சேமிப்புத்திட்டம், சமுர்த்தி அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் (சசன) நயநியமக நிகழ்ச்சித் திட்டம், வேளாண்மை அபிவிருத்தி வேலை மற்றும் மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. கிராம மற்றும் பின்தங்கிய பகுதிகளின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பினை முன்னேற்றுவதே இவற்றின் நோக்கமாகும். கிராமிய சமூக செயற்றிட்டங்களின் கீழ் 1997 இல் ரூ. 467 மில்லியன் செலவில் 9,454 துணைச் செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. மேலும், இலங்கை சமுர்த்தி மேலாண்மைச் சபை, தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் உதவியுடன் ரூ. 134 மில்லியன் செலவில் 730 சமூக செயற்றிட்டங்களைக் கொண்டு நடத்தியது. 50 பிரிவுச் செயலகப் பிரிவுகளில் சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களில் வயது குறைந்தோருக்காக தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றையும் இலங்கை சமுர்த்தி மேலாண்மைச் சபை நடைமுறைப்படுத்தியதுடன் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1997 இல் 2,437 இளைஞர்கள் பயிற்றுவிக்கப் பட்டனர்.

கட்டாய சேமிப்பு நிதியங்களிலான வைப்புக்கள் 1997 இல் 80 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 2,725 மில்லியனாக விளங்கின. தன்விருப்பு சேமிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 33,450 சிறு சமூகத் தொகுதிகள் 1997 செத்தெம்பர் இறுதியில் ரூ.506 மில்லியனைச் சேமித்திருந்தன. அதே வேளையில் 267,784 உறுப்புரிமையுடன் 1997 இன்

இறுதியில் 261 சமுர்த்தி வங்கித் தொழில் கழகங்கள் நிறுவப்பட்டன. இவ் வங்கித்தொழில் கழகங்களின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.83.3 மில்லியனாகவும் வைப்புக்கள் ரூ. 49.2 மில்லியனாகவும் காணப்பட்டன. வட மாகாணம் மற்றும் கிழக்கில் சில பிரிவுகள் தவிர்ந்த அனைத்து பிரிவுச் செயலகப் பிரிவுகளிலும் இலங்கை வங்கியிலிருந்தும் மக்கள் வங்கியிலிருந்தான ரூ.500 மில்லியன் கொண்ட நிதியங்களுடன் 'சனசன' நடைமுறைப் படுத்தப்பட்டது. 1997 ஒற்றோபர் இறுதியில், சமுர்த்திக் குடும்பங்களில் 68,265 பெறுநர்களுக்கு ரூ.402 மில்லியன் கொண்ட தொகையை வங்கிகள் வழங்கின. கடன்களுக்கான வட்டிவீதம் ஆண்டுக்கு 10 சதவீதமாகக் காணப்பட்டவேளையில் கடன் மீளப்பெறும் வீதம் 73 சதவீதமாக விளங்கியிருந்தது.

## 5.9 சூழல்

1980இன் எண் 47 கொண்ட தேசிய சூழல் சட்டம், நாட்டின் சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கான சட்ட அடிப்படையை வழங்குகிறது. சூழல் தாக்க மதிப்பீட்டின் ஒழுங்கு முறைப்படுத்தல் ஏற்பாடுகளையும் சூழல் பாதுகாப்பு உரிம நடைமுறைகளையும் சேர்த்துக் கொள்வதற்காக தேசிய சூழல் சட்டமானது 1988 இன் எண் 56 கொண்ட சட்டத்தினால் திருத்தப் பட்டது. சூழல் தாக்க மதிப்பீட்டின் நோக்கங்களாவன கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திக்கான விருப்பத் தேர்வுகள் சூழல் ரீதியாக சிறந்தவையாகவும் தாக்குப் பிடிக்கக் கூடியவையாகவும் அமைந்துள்ளதை உறுதிப்படுத்துவதுடன் சூழல் விளைவுகளாவன கவனத்திற்கெடுக் கப்பட்டும் செயற்றிட்ட வடிவமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டுமிருந்தன. 1997இல் ஊர்திகளின் ஒலி நியம அளவுகளும் இறுதியாகத் தீர்மானிக்கப் பட்டன. எனினும் இந்நியமங்களை இன்னும் வர்த்தகமானியில் அறிவிக்கப்படவில்லை.1996 இல் நிறைவேற்றப்பட்ட சத்த அளவு ஒழுங்கு விதிகள் தற்போதுள்ள கைத்தொழில் அவற்றுக்கிணங்க நடப்பதற்காக போதிய நேரம் வழங்குவதற்காக 1997 இல் திருத்தப்பட்டன. கைத்தொழில் கழிவுகளின் வண்ணங்களுக்கான தரங்களும் 1997 இல் விருத்தி செய்யப்பட்டன.

ஆய்வின் கீழான ஆண்டில் புதிய கைத் தொழிலுக்கான இடத்தெரிவு 1996 இல் வழங்கப் பட்ட 406 தெரிவுகளுக்கு எதிராக 66 ஆகக் காணப்பட்டன. புதிய சூழல் பாதுகாப்பு உரிம நடைமுறைகள் 1996 இல் வழங்கப்பட்ட 248 உடன் ஒப்பிடுகையில் 1997 இல் 163 ஆகக் காணப்பட்டன. புதுப்பிக்கப்பட்ட சூழல் பாதுகாப்பு உரிம நடைமுறைகள் 1996 இன் 305 இலிருந்து 1997 இல் 309 ஆகக் காணப்பட்டன. 1997 இல் மத்திய சூழல் மேலாண்மைச்சபை சூழல்தாக்க மதிப்பீட்டு ஒழுங்குவிதிகளின் கீழ் 16 கைத்தொழிற் செயற்றிட்டங்கள், 9 சக்தி மற்றும் வலு செயற்றிட்டங்கள், 7 காடாக்கல் செயற்றிட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி 50 செயற்றிட்டங்களை செய்முறைப்படுத்தியது. மொத்தத்தில் இவ்வாண்டில் 19 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில் உலோக அகழ்வுக்கான ஒரு செயற்றிட்டம் நிராகரிக்கப்பட்டது. ஏனைய செயற்றிட்டங்களின் மதிப்பீடு நடத்தப்படுகிறது.

1997 இல் கைத்தொழில் களின் உண்மையான எண்ணிக்கையும் அவற்றின் மாசடைதல் மட்டத்தையும் கணக்கிடுவதற்காக வடக்கு கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் மத்திய சூழல் மேலாண்மைச் சபை உள்ளூராட்சிச் சபைகளின் உதவியுடன் நாடளாவிய அளவீடொன்றை நடத்தி யது. கைத்தொழில்களின் அமைவிடம் தொடர்பான தரவுகள் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்கள் உள்ளடங்கிய மூலப் பொருட்கள் கழிவு உருவாகுதல் தொடர்பான விபரங்கள், கழிவுப் பொருட்களின் அளவும் தரமும், கழிவை வெளியேற்றும் முறைகள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியன அளவீட்டில் திரட்டப்பட்டன. அளவீட்டில் கிடைக்கப் பெற்ற தரவுகளைத் திரட்டும் வேலை நடைபெறுகிறது. நாட்டிலுள்ள முக்கிய உள்நாட்டு நீர் நிலைகளைக் கண்காணிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் 1997 இலும் தொடர்ந்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பேரஏரி, கண்டி ஏரி, நுவரெலியா ஏரி, களனி கங்கை, கொழும்பு கால்வாய் முறை ஆகியன மாசடைதல் போக்கினைக் கண்டறிவதற்காக ஒழுங்கான அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன.

கொழும்பு நகர போக்குவரத்துச் செயற்றிட்டத்தின் கீழ் கோட்டை புகைவண்டி நிலையத்திலும், வானிலை அவதானிப்புத் திணைக்களத்திலும் இரண்டு நிலையான காற்று வளியின் தரம் கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. சல்பர் டயொக்சைட், நைட்ரஜன் ஒட்சைட், காபன் மொனக்சைட், மற்றும் சூழல் காற்றின் துகள் பொருட்கள் என்பன இந்த நிலையங்களிலிருந்து தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மத்திய சூழல் மேலாண்மைச் சபையின் உடைமையான நடமாடும் வளித்தரக் கண்காணிப்பு நிலையம் குறிப்பிடப்பட்ட இடங்களில் தேவைப்படும் நேரங்களில் வளித்தரக் கண்காணிப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுகிறது.